விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு நரித நபரல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை (02.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

## 13வது சீர்திருத்தத்தில் உள்ள
# அதிகாரப் பகிர்வு
# வடக்குக்கு போதும்
## இந்திய ஊடகவியலாளர்களிடம் ஜனாதிபதி



(புதுடில்லி) 13வது சீர்திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் வடக்கு மக்களுக்கு போதுமானது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்திய ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பை அடுத்து இந்திய ஊடகவியலாளர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர். அதன்போது அவர் தெரிவித்த விடயங் 15

தேரரின் போராட்டத்துடன்

## கத்தோலிக்க மதகுரு இணைவு

(கொழும்பு)

அத்துரலிய ரத்ன தேரரின் உணவு தவிர்ப்பு போராட்டத்துடன் கத்தோலிக்க மதகுரு ஒருவர் நேற்று இணைந்துள்ளார். 11

## முல்லை விசுவமடு தொட்டியடி பகுதியில்
### குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு தொட்டியடி பகுதியில் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் வசித்து வந்த குடும்ப பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15

## தனி அரசாங்கத்தை ஐ.தே.க அமைக்கும்

அமைச்சர் கிரியெல்ல

(கொழும்பு)

ஒக்டோபர் மாதம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சியுடன், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தனியான அரசாங்கமொன்றை அமைக்கும் பலம் கிடைத்துள் 16

## பலாலியில் கண்ணிவெடி வெடித்து இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு
### மேலும் இருவர் படுகாயம் சிரமதானத்தின் போது விபரீதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி படைத்தளம் பகுதிக்கு அண்மையாக கண்ணிவெடி வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இரண்டு சிப்பாய்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

பலாலியில் படைத்தளம் அமைந்துள்ள பகுதியை அண்மித்த காணிகள் இராணுவத்தி 16

ஜனாதிபதி வேட்பாளரை

## செப்ரெம்பரில் அறிவிப்பேன்
### - மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

கூட்டு எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை செப்ரெம்பரில் அறிவிப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழொன்றுக்கு தொலைபேசி ஊடாக 15

## ரணிலும் அவரது பட்டாளமும் நேற்று யாழ் வந்தடைந்தனர்
### இன்று பல்வேறு நிகழ்வில் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு 15

வெளிநாட்டு படையை

## நாட்டுக்குள் அனுமதியேன்
### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

தாம் பதவியில் இருக்கும் வரை வெளிநாட்டு படைகளை நாட்டுக்குள் வர இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த ஏப்ரல் 15

## தனியார் பேருந்துடன் மோ.சைக்கிள் மோதி விபத்து; இரு இளைஞர் பலி
### முல்லை ஏ9 வீதி, செல்வபுரத்தில் சம்பவம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பிரதேசத்தை அண்மித்த செல்வபுரம் ஏ9 வீதி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று மாலை பிற்பகல் 5.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்தினை மோட்டார் சைக்கிள் பின்புறமாக மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்று 15

## குருநாகல் போதனா வைத்தியருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள குருநாகல் போதனா மருத்துவமனை மருத்துவர் சேகு சியாப்தீன் மொஹமட் சாஃபிக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக தேசாபிமான மருத்துவர்கள் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. குறித்த அமைப்பின் பிரதிநிதியான மருத்துவர் 16

ரிசாத், ஹிஸ்புல்லாஹ், அசாத்சாலியை

## கட்டாய விடுமுறையில் வீட்டுக்கு அனுப்புங்கள்
### ஆளுநர் சுரேன் ராகவன்

(கொழும்பு)

மாகாண ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லாஹ் மற்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோருக்கு, ஒருமாதம் கட்டாய விடுமுறை வழங்கப்பட வேண்டும் என வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் 16

தமிழரசுக்கட்சி அலுவலகத்துக்கு முன்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டம்



15

## ஹிஸ்புல்லாஹ், ரிசாத், அசாத்தை பதவி நீக்கக் கோரி பிக்குகள் போராட்டம்

(கொழும்பு)

அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஆளுநர்கள் ஹிஸ்புல்லாஹ், அசாத் சாலி, மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரை பதவியிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தி கொழும்பு விகாரமா தேவி பூங்காவில் பௌத்த பிக்குகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிஹியங்கல ஆனந்த 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழக மீனவர்கள் நால்வரை விடுவிக்குமாறு
## இலங்கை அரசு பரிந்துரை

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச் சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 4 பேரை விடுவிக்குமாறு நீதி மன்றத்திடம் இலங்கை அரசாங்கம் பரிந் துரை செய்துள்ளது.

4 மீனவர்கள் குறித்த வழக்கு விசா ரணை எதிர்வரும் 10ஆம் திகதி விசார ணைக்கு வரவுள்ளது.

இந்நிலையில், குறித்த நால்வரையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யுமாறு மல்லாகம் நீதிமன்றத்திடம் அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, இலங்கை கடற்படையின ரால் கைது செய்யப்பட்டுள்ள மேலும் 18 தமிழக மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சேவை நலன் பாராட்டு



### கந்தையா சோதிராசா

14.05.1979 இலிருந்து 02.06.2019 வரை சுன்னாகம் மின்சார சபை உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்கின்ற **கந்தையா சோதிராசா அவர்கள்**

இல்லறத்திலும் சிறந்து விளங்க!
உறவினருடனும் தோள் நின்று உழைத்து
வேலையிலும் அயராது சேவை செய்து
இன்று ஓய்வுபெற்றுச் செல்கின்ற - மாமாவை
பாரியாருடன் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

**சகோதரி, மருமக்கள், பிள்ளைகள்**
**புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம்.**

(C-6575)


## கட்டடம் வாடகைக்கு

k.k.s வீதியில் மாவிட்டபுரம் சந்தியில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு மேற்கு பக்கமாக (K.K.S வீதி, கீரிமலை வீதி சந்திக்கும் பகுதியில்) அடிப்படை வசதிகளுடனான 1385 சதுரஅடி விஸ்தீரணமான கட்டிடம் வாடகைக்கு உண்டு.

இது வங்கிகள், நிதி நிறுவனங்கள், காட்சியறைகள், சுப்பர் மார்கட் என்பவற்றிற்கு உகந்தது.

தொடர்புகளுக்கு
**077 959 0696**



## கார் விற்பனைக்கு

Nissan FB15 Silver Colour, Full option, Auto, New tyres Allow wheel, Dual air bag, DVD, Very Good Fuel Consumption, AC/ PW Mirrors/ Pw Shutters, Remote Key/ All features are working,

Contact: 0779184018



## CCTV- CAMERA SPECIAL OFFER
கண்காணிப்பு கமெராக்கள் விசேட விலையில்




CAMERA STARTING FROM: RS. 2450/=

**04 CHANNEL CAMERA SYSTEM**
Hikvision Outdoor Waterproof & Watherproof Bullet Camera with Night Vision - 04
04 Chanel Hikvision Digital Video Recorder - 01
1000GB Hard Disk - 01, BNC Connector - 08
Power Supply-04, Power & Coaxial Cable-100Meter
---- Rs : 30,800/= ---- 02 Year Warranty----

**08 CHANNEL CAMERA SYSTEM**
Hikvision Outdoor Waterproof & Watherproof Bullet Camera with Night Vision - 06
08 Chanel Hikvision Digital Video Recorder - 01
1000GB Hard Disk - 01, BNC Connector - 12
Power Supply-06, Power & Coaxial Cable-200Meter
---- Rs : 43,400/= ---- 02 Year Warranty----

உங்கள் கமெராக்களை நீங்களே பரிசோதித்து உங்கள் நம்பிக்கையை உறுதிசெய்யுங்கள்
ஏற்கனவே பொருத்திய கமெராக்களும் பழுதுபார்க்கப்படும்

# Free Mobile View Setting, >100% After Service.
# Currency & Number Plate Viewing Ability

**NORTH LEAD CCTV SECURITY SYSTEM**
NO : 253, STANLY ROAD, JAFFNA.
TEL : 021-221 6980, MOB : 0774192275



## புதிய ஆங்கிலப் பாடநெறிகள் ஆரம்பம்

சனி, ஞாயிறு தினங்களில்

**DIPLOMA IN ENGLISH** (Spoken English)
( 6 மாதங்கள் )
காலை 8.00 - 10.30 வரை

**SINHALA COURSE**
காலை 9.00 - 10.30 வரை

**IELTS LIFE SKILLS A1**
காலை 11.00 - 1.30 வரை

**IELTS**
மாலை 3.00 - 5.30 வரை

ஆரம்பம் : 08.06.2019

வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஒரே தெரிவு

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**
இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில்)

Tel : 0212217106 / 0773400418
0770615242 / 0774924166
web: www.ecitycollege.lk


## கண்ணீர் அஞ்சலி



மகிழ்வினில் மலர்வு 17.02.1970

துயரினில் உதிர்வு 24.05.2019

### அமரர் பாலசிங்கம் பத்மசிறி

(உலக வங்கி நிபுணத்துவ நிதி ஆலோசகர் - மியன்மார்)
இந்திரன் அம்மன் கோவிலடி, துன்னாலை வடக்கு கரவெட்டி

அன்பும் அறிவும் ஆளுமைத் திறனும்
கல்விப் புலமையும் பணிமேன்மையும்
நேர்மைத்திறனும் கடமையில் கண்ணியமும்
இன்சொல்லால் உறவுகளை இணைத்தொழுகும் பண்பும்
உம்மிடம் நாம் கண்ட உயர்ந்த பண்புகள்
வாராத காலத்தில் வந்த உங்கள் மறைவு
வலிமிகு வேதனையையும் ஏமாற்றத்தினையும்
உறவுகளாகிய எமக்களித்துள்ளது.
அன்பான சிறி! உங்களை நாம் மிகவும் தவறவிட்டுள்ளோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற்று அமரர் உலகம் ஏகப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2019) ஞாயிறு அவுஸ்திரேலியா மெல்போர்ன் நகரில் நடைபெறுகின்றது. அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**செ.சேதுராஜா, சி.சிவசேகரம் குடும்பங்கள்**
**துன்னாலை வடக்கு, கரவெட்டி.**

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 17 - 10 - 1917



இறப்பு 01 - 06 - 2019

### திருவாளர் கந்தையா கிருஷ்ணன்

(ஓய்வுநிலை தபாலதிபர்)

குப்பிழான் மண்ணின் மூத்த மைந்தனும் சமூக சேவையாளருமாகிய திருவாளர் கந்தையா கிருஷ்ணன் அவர்கள் 102ஆவது வயதில் நேற்று 01.06.2019 காலை சிங்கப்பூரில் இறைவனடி எய்தியுள்ளார். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் கழலடி இறைஞ்சுகின்றோம்.

*நல்லுறவு மன்ற இலைறப்பாளர்கள் சார்பில்*

**குப்பிழான் - சிங்கப்பூர் கிருஷ்ணன் நல்லுறவு மன்றம் குப்பிழான்**
திரு.தி.ரவீந்திரநாதன் JP (அதிபர் நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்) 077 949 6985
திரு.தி.சசிதரன் (ஆசிரியர் - இணுவில் இந்துக் கல்லூரி) 0776005336

குப்பிழான் வடக்கில் இன்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

(C-6570)

# கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாவின் நியமனத்தை இரத்துச் செய்யக்கோரி கையெழுத்து வேட்டை





(ஏறாவூர்)

கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் நியமனத்தை இரத்துச் செய்யுமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு மகஜர் அனுப்புவதற்காக ஒரு இலட்சம் கையொப்பங்களைச் சேகரிக்கும் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு, மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இக் கையெழுத்து வேட்டை இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் நியமனத்தை இரத்துச் செய்யவேண்டும், அவர் கடந்த காலங்களிலும், தற்போதும் தமிழ் மக்களுக்கு எதிராகத் தான் செயற்பட்டு வருகின்றார்.

எனவே இவ்விடயத்தில் ஜனாதிபதி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும், கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்க வேண்டும் என அரசியல் பிரமுகர்களால் இதன் போது கருத்து தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# விசேட தெரிவுக்குழுவின் செயற்பாடுகள்; நேரடி ஒளிபரப்பை தடுத்து நிறுத்தும் செயல் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறலாகும்

## அமைச்சர் கிரியெல்ல எதிர்ப்பு

(கண்டி)

**ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் நேரடியாக ஒளிபரப்பப்படுவதை கைவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாகும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நேரடியாக ஒளிபரப்புமாறு தான் விடுத்த கோரிக்கையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டார் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.


இதற்கமைய, தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் நேரடியாக ஒளிபரப்பப்பட்டபோது, ஒருவர் அது தொடர்பில் விமர்சனத்தை வெளியிட்டார்.

எவ்வாறிருப்பினும், நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் மேற்கொண்ட தீர்மானத்தை எவராலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்றும் கிரியெல்ல தெரிவித்தார். (இ-7)



# இலங்கைத் தாக்குதலின் பின்னணியில் ஈரான்

## சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு



இலங்கையில், கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில், ஈரான் உள்ளது என, இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் குறித்து, இலங்கையிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் என்னிடம் தொலைபேசியில் உரையாடியுள்ளனர் என்றும் தொடர் குண்டுத் தாக்குதலுக்கு, உள்ளூரிலுள்ள ஷியா முஸ்லிம்களுக்கு ஈரானிலுள்ள செல்வாக்கே காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், ஒரு மணி நேரம் கழித்து, தான் பதிவிட்டது தவறு எனக் குறிப்பிட்ட அவர், இந்த தாக்குதல், வசாபி சன்னி பிரிவினரால் நடத்தப்பட்டதாக பதிவேற்றம் செய்தார்.

மேலும் இலங்கையிலுள்ள ஷியா கல்வி நிறுவனங்களுக்கு, ஈரானே நிதியுதவி வழங்கி வருவதாகவும் இதில் மதமாற்றம் இடம்பெறுவதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக, அவர் குறிப்பிட்டார்.

ஆகையால், இலங்கை தொடர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் ஈரான் இருப்பதற்கு வாய்ப்புள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தொடரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் மோசமடைகிறது தேரரின் உடல்நிலை

(கொழும்பு)

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் றிசாத் பதியுதீன், ஆளுநர்களான ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலியை பதவி நீக்குமாறு கோரி அத்துரலிய ரத்ன தேரர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

நேற்று முன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணவிரதம் காரணமாக அவரது உடல் நிலையில் மோசமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் தேரரை சோதனையிட்டார். தேரரின் உடல்நிலை சோர்வடைந்து வருவதாக வைத்தியர் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று அதிக வெப்பமான காலநிலை காரணமாக மேலும் அவரது உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை தேரரின் உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு பொது மக்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆதரவு வழங்கி வருகின்றனர். (இ-7)

# 7 இலட்சம் ரூபா பணம் ஐஸ் போதைப்பொருளுடன் ஆவாகுழு உறுப்பினர் கைது

(யாழ்ப்பாணம் )

ஐஸ் போதைப்பொருள் மற்றும் 7 இலட்சம் ரூபாய் பணத்துடன், ஆவாகுழு உறுப்பினர் ஒருவரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்தனர்.

வல்வெட்டித்துறை உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய குறித்த இளைஞனே நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், குறித்த நபரின் வீட்டை சோதனையிட்ட போதே, 4 கிராம் கஞ்சா மற்றும் 3 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் உட்பட 7 இலட்சம் ரூபா பணம் மற்றும் வங்கி பற்றுச்சீட்டுக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த இளைஞன் வாள் வெட்டுக் குழுவை நடத்தியதாகவும், பல வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்புடையவர் என்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்த நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், விசாரணையின் பின்னர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-101)

### இதுவரை 425 முறைப்பாடுகள் பதிவு

# சர்ச்சைக்குரிய வைத்தியர் ஷாபியின் மனைவியிடமும் விசாரணை முன்னெடுப்பு

சர்ச்சைக்குரிய வைத்தியர் சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபியின் மனைவியிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஷாபி மற்றும் அவரது மனைவி ஆகியோர் கடந்த 15 ஆண்டுகளாக சேர்த்த சொத்துக்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சர்ச்சைக்குரிய தம்பதியர் கடந்த 15 ஆண்டுகளாக வைத்திய தொழில் ஈடுபட்டு வந்தமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

வைத்திய குடும்பம் அதிக சொத்துக்கள் சேர்த்தமை தொடர்பான விசாரணை உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சொத்து குவிப்பு வழக்கு தாக்கல் செய்ய முடியும் என ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபி, ஆயிரக்கணக்கான பெண்களுக்கு சட்டவிரோமான முறையில் குடும்ப கட்டுப்பாடு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு தொடர்பில் இதுவரையில் 429 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வைத்தியர் சியாப்தீன் மொஹமட் ஷாபியிடம் உரிய கணக்கு இல்லாத பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் இருப்பதாக விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஈசியா வென்றது நியூசிலாந்து; தூசியானது இலங்கை

இலங்கைக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் கப்டில் (73ஓட்..), ஹென்றி (3 விக்.,) கைகொடுக்க நியூசிலாந்து அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மண்ணில் உலக கிண்ணத் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. கார்டிப்பில் நடந்த லீக் போட்டியில் இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதின.

ஹென்றி அபாரம்

இலங்கை அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஹென்றி வீசிய முதல் ஓவரின் இரண்டாவது பந்தில் லகிரு திரிமான்னே (4) அவுட்டானார். இதன்பின், அணித் தலைவர் கருணாரத்னே, குசல் பெரேரா ஜோடி சிறப்பாக விளையாடியது. போல்ட் பந்துவீச்சில் பெரேரா தொடர்ந்து இரண்டு பவுண்டரி அடித்தார். 9வது ஓவரை வீசிய ஹென்றி மீண்டும் 'வேகத்தில்' மிரட்டினார். முதல் பந்தில் பெரேராவை (29) வெளியேற்றிய இவர், அடுத்த பந்தில் குசல் மெண்டிசை டக் அவுட்டாக்கினார். அணி 9 ஓவரில் 3 விக்கெட்டை இழந்து தடுமாறியது. இந்த சரிவிலிருந்து அணியை மீட்க எந்தவொரு வீரரும் கைகொடுக்கவில்லை.

ஏமாற்றத்திலிருந்த இலங்கை ரசிகர்களை, திசர பெரேரா சிக்சர் அடித்து சற்று ஆறுதல் கொடுத்தார். இவரையும் 27 ஓட்டங்களில் சான்ட்னர் வெளியேற்றினார். அணித் தலைவர் என்ற பொறுப்புடன் விளையாடிய திமுத் கருணாரத்ன அரை சதம் அடித்தார். மலிங்க (1) போல்டாக, இலங்கை அணி 29.2 ஓவரில் 136 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கருணாரத்ன (52) ஆட்டமிழககாமல் இருந்தார்.


**கப்டில் அரைசதம்**

எளிய இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு கப்டில், முன்ரோ ஜோடி சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. மலிங்கவின் முதல் ஓவரில் கப்டில் இரண்டு பவுண்டரி அடித்தார். லக்மல் பந்து வீச்சில் முன்ரோ ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். இருவரையும் பிரிக்க முடியாமல் எதிரணி திணறியது. உடான பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட கப்டில, 39 பந்தில் அரை சதம் எட்டினார. இவருக்கு ஒத்துழைப்பு தந்த, முன்ரோ 41 பந்தில் அரைச் சதம் அடித்தார். இவர்களின் பங்களிப்பு கைகொடுக்க, நியூசிலாந்து அணி 16.1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 137 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.


## 6ம் ஆண்டு நினைவலைகள்

செல்வன்

### சுப்பிரமணியம் பார்த்தீபன்



மன மகிழ 05.12.1983

மன நெகிழ 02.06.2013

பாரினிலே நாம் பெற்ற பெருஞ்செல்வம்
நீயன்றோ பார்த்தீபா!
பாரை விட்டு எங்கு சென்றாய்?
நாமறியோம்
கண்மூட கண்முன்னே வருகின்றாய்
கண் விழிக்க காணாமல்
போகின்றாய்
ஏன் எம்மை வருத்துகின்றாய்?
ஏனோ தெரியவில்லை! எமக்கு இந்த நிலை
இறைவா எமையாளும் தலைவா!
நீ வா என்றால் யாரால் மறுதலிக்க
முடியும்?
நாம் மார்க்கண்டேயர் இல்லையே
விரும்பி அழைத்த எம் செல்வத்தை
உன்பாதார விந்தங்களில் நிரந்தரமாய்
அமர்த்திவிடு

**இவ்வுலகை விட்டு பிரிந்த எங்கள்**
**உறவுகளை நினைவு கூருகின்றோம்**
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**குடும்பத்தினர் (சு.பிரதீபன்)**
*புலோலி தெற்கு மேற்கு J/411*

(C-6576)

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



தவப்பேறு 29-05- 1930

சிவப்பேறு 12-06-2018

### அமரர் கந்தையா இராசையா

**திதி: 02.06.2019**

அன்பாய் அரவணைத்து
உலகம் போற்றும் வண்ணம்
எம்மை உருவாக்கிய முதல்வனே
இன்று ஓராண்டு ஆகிவிட்டதையா
நூறு ஆண்டுகள் கடந்தாலும்
எம் நெஞ்சில் நீங்காதையா
உங்கள் நினைவுகள்

**குடும்பத்தினர்**
*159/15, பலாலி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

## மரண அறிவித்தல்

திருமதி

### யமுனா புண்ணியசீலன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை - வீமன்காமம் மகா வித்தியாலயம்)**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05.10.1955 | 31.05.2019 |

யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியா சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யமுனா புண்ணியசீலன் அவர்கள் 31.05.2019 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - கனகநாயகம் (ஓய்வு பெற்ற நடேஸ்வரா கல்லூரி அதிபர்), நாகபூஷணி (ஓய்வுபெற்ற நடேஸ்வரா கல்லூரி ஆசிரியை) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் சுப்பிரமணியம், புண்ணியசீலனின் (ஓய்வுபெற்ற யூனியன் கல்லூரி அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரது அன்பு மருமகளும் கேதார்ணி (இந்தியா), நர்த்தனி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாத்தப்பனின் (இந்தியா) அன்பு மாமியாரும் ஜெயந்தா (லண்டன்), கஜேந்திரா (லண்டன்), குகேந்திரா (லண்டன்), மகேந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவநாதன் (லண்டன்), சிவலோகநாயகி (லண்டன்), பவானி (லண்டன்), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் சத்தியசீலன், சாவித்திரி ஆகியோரின் மைத்துனியும் கோமதி, தர்மேந்திரன், இந்தும்தி, ஜெயமதி ஆகியோரின் மாமியாரும் கோகுலபிரசாத், அனித்திரி, நிசந்திரி ஆகியோரின் பெரிய தாயாரும் சிவேந்திரா, மயூரன், சோபி, மதுஷா, ரம்யா ஆகியோரின் அத்தையும் மகேந்திரவர்மன், குகலிங்கம், தயாநிதி ஆகியோரது சகலியும் ஆத்மனின் (இந்தியா) பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2019) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கோண்டாவிலுள்ள அவரது இல்லத்தில் (இலங்கை போக்குவரத்து பேருந்து சாலை அருகாமையில்) நடைபெற்று பின்னர் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி றோட்,
கோண்டாவில்.

தகவல்:- குடும்பத்தினர்
சு.புண்ணியசீலன் (கணவர்)
0778855070, 0773447891

# உள்ளூராட்சி உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல்





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாகவும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், கட்சியின் பொருளாளர் கனகசபாபதி, உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# பிரார்த்தனை அஞ்சலி



அமரர். இணுவில் சிவபூமிப் பெருந்தாய்
**திருமதி.நாகராசா மனோன்மணி அவர்கள்**

மண்ணுலகில் 08.05.1940 — விண்ணுலகில் 22.05.2019

சித்தர்கள் வாழ்விடமான இணுவில் சிவபூமியில் புண்ணிய வதியாய்ப் பிறந்தனையே
மகாத்மாகாந்தி காட்டிய வழியில் நெசவு ஆசிரியையாகி நெசவுத் தொழில்
மூலம் பலநூறு பேரை வாழவைத்தனையே
எண்பது வயதை அண்மிய தள்ளாத வயதிலும் சைவத்திருமுறையும் திருமந்திரமும்
பயில்வதையே உயிர் மூச்சாகக் கொண்டனையே
திருவாவடுதுறை ஆதீனச்சித்தாந்தத் திருமுறைப் பயிற்சி மையத்தில் பயின்று
திருமுறைச் செல்வர் பட்டம் பெற்றனையே
இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையில் திருமந்திரம் பயின்று
திருமந்திரச் செல்வர் விருது பெற்றனையே.
திருமூலர் சொன்னபடி திருமந்திரத்தைக் காலையில் எழுந்து கருத்தறிந்து ஓதி
ஞாலத்தலைவனை நண்ணினையே
சாந்துணையும் கற்க என்ற பொன்மொழியை மெய்யாக்கினையே
தென்னகத்திலும் ஈழத்திலும் பலமுறை சிவத்தலயாத்திரை
செய்து வழிபட்ட புண்ணிய வதியே
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே என்ற திருமந்திரப்படி நீள்துயில் கொண்டு
சிவகதி சேர்ந்தனையே நீ சிவ பதத்தில் வாழ்வாய்

பிரார்த்தித்து அஞ்சலி செய்வோர்
திருவாவடுதுறை ஆதீனச்சித்தாந்த திருமுறை பயிற்சி நிலையம்,
இணுவில் சுகவாழ்க்கைப் பேரவை திருமந்திரம் பயிலுநர்களும் .

(8963)

# இராசி பலன்

**02.06.2019**
வைகாசி 19, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 4.57 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 1.15 மணிவரை
சுபநேரம் 8.52 - 10.22 மணிவரை
இராகுகாலம் 4.22 - 5.52 மணிவரை
கார்த்திகை விரதம்,
சித்தம்

வளவன்

கிரகநிலை: சுக் | சூரி., சந் | செவ்,புத ராகு | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்

**மீனம்** — முத்தான வாய்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் வளர்ச்சியை கூட்டிக் கொள்ளலாம், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்** — காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**இடபம்** — பெருமைகள் வந்து சேர பெருமானை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** — அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** — வளர்ச்சிப்பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**கடகம்** — வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** — எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** — கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு** — கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வியாபார விரோதம் விலகும்.

**விருச்சிகம்** — எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகள் முன்னேற்றம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** — சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நண்பர்களிடம் பழகும் போது விழிப்புணர்வு தேவை, மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள்.

**கன்னி** — சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.

# தனியார் மருந்தகங்களுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

வடமாகாணத்தில் அனுமதிப் பத்திரத்துடன் இயங்கிவரும் 81 தனியார் மருந்தகங்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வடமாகாண சுகாதாரப் பகுதியினர் மற்றும் தனியார் வைத்தியசாலை நிர்வாகிகளுடனான கலந்துரையாடலின் போது குறித்த விடயம் தொடர்பில் ஆளுநரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

தனியார் மருந்தகங்களில் மருந்து வழங்கும் போது சிட்டை வழங்க வேண்டும், மருந்தக அனுமதிப்பத்திரம் மற்றும் அங்கீகாரம் பெற்ற மருந்தாளரின் பெயர் காட்சிப்படுத்த வேண்டும், மருந்து வழங்குநர் தனது பெயரைக் காட்சிப்படுத்த வேண்டும் மற்றும் அங்கீகாரம் பெற்ற மருந்தாளர்கள் மருந்தகங்களில் இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் உள்ளடக்கிய சுற்றுநிருபம் வடமாகாண சுகாதார பணிமனை ஊடாக சகல மருந்தகங்களுக்கும் அறிவிக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (5-10)

# 16 வர்த்தகர்களுக்கு 46 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்குப் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 46 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததாகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளர் முகமட் சாவிக் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அதிகாரசபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறிய 16 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (5-10)


# சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பூசைகள், வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று திருவீதியுலா இடம்பெறும். (5)




# மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மீசாலைச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். கொடிகாமம் பகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீசாலைச் சந்திப் பகுதியில் வலதுபுறமாக திரும்ப முற்பட்ட வேளை அதே திசையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் பின்புறமாக மோதி பின் வீதி ஓரமாகக் காணப்பட்ட மதிலுடன் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றது.

இதில் நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த 22 வயது புஸ்பதேவன் சுரேந்திரன் என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்தில் சிக்கி வீதியில் கிடந்த இளைஞனை மீசாலைச் சந்தியில் நின்ற ஆட்டோ சாரதிகள் துரிதமாகச் செயற்பட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-30)

# தென்னைச் செய்கையை மேம்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்னைப்பயிர்ச்செய்கை சபையினால் தென்மராட்சி பிரதேசத்திற்குட்பட்ட 60 கிராம உத்தியோகத்தகர் பிரிவுகளிலுமுள்ள கற்பகதரு சங்கங்களின் தலைவர்களுக்கான கலந்துரையாடல் தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சங்கங்களின் வளர்ச்சி, தேவைகள் மற்றும் தென்னை தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் தென்னைக்குச் சாத்தியமான பிரதேசமாகிய தென்மராட்சியிலிருந்து கூடியளவு தேங்காய்கள் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வது பற்றியும் இங்கு தேங்காய்களது விலை குறைவடைந்திருப்பது பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டது.

தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் சங்கங்களினால் உயர் மட்ட விலையினை நிர்ணய விலையாக நியமிக்க அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தென்னை வளர்ப்பாளர்கள், குறிப்பாக கெற்பேலி பிரதேசங்களில் தென்னைத்தோட்டங்களில் மண் அகழப்படுவதாகவும் உயர் தென்னைகளைக் கொண்ட கைவிடப்பட்ட காணிகள் பெருமளவானவை உரிமையாளர் அற்ற நிலையில் காணப்படுவதனால் அக்காணிகளில் கருவண்டு, செவ்வண்டு போன்ற தாக்கங்கள் ஏற்பட்டு அவற்றால் அவை அருகிலுள்ள காணிகளுக்கும் தாக்கத்தினை ஏற்படுத்துவதாகவும் இதற்குரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறும் மக்களால் கோரப்பட்டிருந்தது. மேலும் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், காணிகள் சுத்தப்படுத்துவதற்கும் ஒழுங்கமைப்பதற்கும் என நிதி கிடைத்துள்ளதாகவும் அதற்குரிய தரவுகளை தென்னை கற்பகதரு சங்கங்கள் ஊடாக பெற்றுத்தரும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் எனக்கூறப்பட்டது. மேலும் பிராந்திய முகாமையாரால் கருத்துத் தெரிவிக்கும் போது கற்பகதரு சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை கூட்டும் வகையில் அனைத்து தென்னை வளர்ப்பாளர்களையும்சங்கத்தில்இணைத்துதென்னை வளர்ப்பினை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. (5-9)

# மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

மார்க்கண்டுசுவாமிகளின் குருபூசை தின நிகழ்வு இன்று 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பண்டத்தரிப்பு, பிரான்பற்று, மார்க்கண்டு சுவாமிகள் சபை மண்டபத்தில் சபையின் ஸ்தாபகர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறும். (5)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மாவட்ட/நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட சான்றுப்பொருட்களின் பகிரங்க ஏலவிற்பனையானது எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் ஊர்காவற்றுறை மாவட்ட/ நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் திருமதி.பிருந்தா சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (5)

# யாழில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட வர்த்தகர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாத கும்பலால் தாக்கப்பட்டு தலையில்படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று வர்த்தக நிலைய உரிமையாளரை கடுமையாக தாக்கியதில் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3-5-10)

# யாழ்.யோகா உலகத்தின் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

நல்லூர் யாழ்.யோகா உலகத்தின் புதிய பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் தேரடி அருகிலுள்ள அறுபத்துமூன்று நாயன்மார் குரு பூசை மண்டபத்தில் வைத்தியர் க.சோதிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஆரோக்கியத்திற்கான யோகா வழிமுறைகள் எனும் தொனிப்பொருளில் திருமதி. சாவித்திரி ரவிச்சந்திரனின் (யாழ்.பல்கலைக்கழகம்) கருத்துரையும் யோகா உலகம் அமைப்பு மாணவர்களின் யோகா ஆற்றுகையும் இடம்பெறும்.

யோகா பயிற்சி வகுப்புக்கள் தினமும் காலையும் மாலையும் 6 மணி முதல் 7 மணி வரை இரு பிரிவுகளாக நடைபெறும். (5)

# பொதுக்கூட்டம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட படப்பிடிப்புத் துறை சார்ந்த அனைவரையும் ஒன்றாக இணைந்து புதிய அமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (3-5)



வடமாகாண சிறுவர் பணியகத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி கருணாலயத்தில் வெசாக் தின கொண்டாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாதுகாப்புப் படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# வடக்கு மாகாண அரச அலுவலர்கள் மக்களுக்கு மனிதாபிமானத்துடன் சேவை செய்ய வேண்டும்



## ஆளுநர் ராகவன் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரச ஊழியர்களும் போருக்குப் பின்னரான இத் தேசத்தில்இருக்கின்ற மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையிலும் மனிதாபிமானத்துடனும் பணியாற்ற வேண்டும் என்று ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ்.நூலக கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொள்முதல் நடைமுறை மற்றும் ஒப்பந்த நிர்வாக பாடநெறியை **(CIPPCA 2018/2019)** பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் நீங்கள் கற்றுக்கொண்ட இந்த விடயங்கள் வெறுமனே ஒரு காரியாலயத்தின் அடிப்படையாக மட்டுமல்ல. ஒரு நாகரிகத்தின் சுமிக்ஞையாக இருக்க வேண்டும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

எந்த மாதிரியான சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும். அது உங்களுக்கும் உங்கள் நாகரிகத்திற்கும் உங்களை பயிற்றுவித்த ஆசானுக்கும் அடிப்படையாக உங்கள் மனச்சாட்சிக்கும் மத்தியிலே உள்ள ஒரு கேள்வி. என்னுடைய பிரார்த்தனை எல்லாமே நீங்கள் நல்ல ஒரு நாகரிகத்தின் பயணத்திற்கு அடிப்படையாக இருப்பீர்களென எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார். (இ-7)


## உளமார வாழ்த்துகின்றோம்



பதின்னான்காம் ஆண்டு அகவை பூர்த்தியாகி
பதினைந்தாம் அகவையில் காலடி பதிக்கும்
யாழ்.மின்சார நிலைய வீதி

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**

(உரிமையாளர் - என்.நித்தியானந்தன்)
021 222 6953, 077 722 5310
அவர்களை சிறப்புற உளமார வாழ்த்துகின்றோம்.
இன்று போல் என்றும் எல்லோரும் போற்றிட
நல்லோர் வாழ்த்திட நல்லதே செய்து
நன்றே நிகழ்ந்திட நல்வாழ்த்துக்கள்!

வாழ்த்துபவர்: திரு.இ.ஸ்ரீதரன்
வேனுகா ரவல்ஸ், நாச்சிமார் கோவிலடி.
(9009)



## வேலைவாய்ப்பு

**N.G.C**

Northern Group of Compeny வடக்கில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை: 18-30 (C-6562)

இல.646, 01 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு: 021 790 4574, 077 511 3914



## பசுக்கன்று விற்பனை

14 மாதங்கள் வயதுடைய ஊசிக்கு பிறந்த A.S இனத்தைச் சேர்ந்த பசுக்கன்று விற்பனை. **077 272 3763** (9002)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறிவித்தல்



### 2019 உயர் திருவிழாக் காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்தல், உடை தேங்காய் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த உயர் திருவிழா 2019.07.02 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 2019.07.17 ஆம் திகதியன்று நிறைவு பெற உள்ளது. இக்காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு, நிர்வாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும் உடை தேங்காய்க்காக பகிரங்க ஏலம் கூறுதலும் 09.06.2019 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு:-**

1. குளிர்பானக் கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
2. ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை பத்தாவது நாள் திருவிழாவுக்கு முன்னதாகச் செலுத்தி முடிக்க வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.
(C-6540)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 1<br>கி.பா:33<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BBA,முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9709 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 2<br>கி.பா: 36 ¼ செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.Management, Journalism, Presenter<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/9717 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 1உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.Sc, MPA, தனியார் தொழில்Australia<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,ஆங்கிலஅறிவு. (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9710 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Scபட்டதாரி, M.L.T<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில்(உள்நாடு)<br>தொ.இ: G/9718 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி 3<br>கி.பா: 26 ¾<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Scபட்டதாரி, Civil Engineeer, Canada<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி(உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9712 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 22 ¼ செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்B.Scபட்டதாரி,விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: Engineer, Lecturer, Banker<br>தொ.இ: G/9719 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: A/L,உள்நாடு<br>தொ.இ: B/9714 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:B.Sc, Ass.Lecturer<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார்தொழில் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/9724 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இலங்கையில் ஏற்பட்டுள்ள தீவிரவாத அச்சுறுத்தல்

# இந்தியாவுக்கும் பாதிப்பாகும்-தொண்டமான் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள தீவிரவாத அச்சுறுத்தல் என்பது இந்தியாவுக்குமான அச்சுறுத்தலாகவே தான் கருதுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஆறுமுகம் தொண்டமான், இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே இந்த விடயத்தை தெரிவித்தார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"நரேந்திர மோடி அதிக பெரும்பான்மையுடன் மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது இந்தியா பலமான ஒரு அரசாக இருக்கப்போகின்றதை உணர்த்துகின்றது.

இந்தியவில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வுகளும் இலங்கையிலும் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அந்தவகையில் மத்திய அரசு பலமடைந்தால் இலங்கையின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.


இதேவேளை பிரதமர் மோடி அடிக்கடி இலங்கைக்கு வருகை தந்தால் இந்திய வம்சாவளியினருக்கு புதிய உத்வேகம் ஏற்படும்.

அத்துடன் மலையக பகுதிகளில் வீடமைப்பு திட்டம், வைத்தியசாலை ஆகியவை இந்திய நிதியுதவின் கீழ் தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகின்றது. ஆகையால்மோடியின்வருகையை நாம் எப்போதும் எதிர்பார்க்கின்றோம்.


இதேவேளை தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுடன் இணைந்தே செயற்படுவோம்" என ஆறுமுகம் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## புகைத்தலால் பாதிப்புக்கள் குறித்து விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் விநியோகம்









வடமராட்சி இளையோர் அமைப்பால் சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினமாகிய நேற்று முன்தினம் புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மக்களுக்கு வழங்கப்பட்டன.

## நிதியமைச்சின் ஊடகப் பணிப்பாளருக்குப் பிணை வழங்கப்பட்டது குறித்து தெளிவுபடுத்த வேண்டும்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் அமுலிலுள்ள நிலையில் நிதியமைச்சின் ஊடகப் பணிப்பாளர் ஹரசன் அலி, பொலிஸ் பிணையில் விடுவிப்பு செய்யப்பட்டமை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

நாட்டின் சட்டம் அனைவருக்கும் ஒரே விதமாகச் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்திற்கு எதிரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பிணை வழங்கியமை தொடர்பான விடயங்களைப் பொலிஸார் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

நாட்டில் அமுலிலுள்ள சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை. தகுதிகளுக்கு அமைய சட்டம் மாற்றப்படுவதாகவும் சுதந்த தேரர் குற்றம்சாட்டினார். (இ-7)

## வீடு ஒன்றில் கொள்ளை

மாத்தறை-தல்பாவில பிரதேசத்தில் இரு பெண்களின் தங்க மாலைகளை இருவர் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை வீடு ஒன்றில் நுழைந்து இவ்வாறு கொள்ளையடித்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பெண்களுக்கு மயக்க நிலையை ஏற்படுத்தி கொள்ளையடித்து சென்றுள்ள நிலையில் 77 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

## அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து வியாழேந்திரன் அடையாள உண்ணாவிரத போராட்டம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளார்.


மட்டக்களப்பு, காந்தி பூங்கா விற்கு முன்பாக நேற்றுக் காலை 7 மணியளவில் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் பதவியிலிருந்து விலக்கப்பட, விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கண்டி தலதாமாளிகைக்கு முன்பாக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார். இதன்போது அவருடைய ஆதரவாளர்களும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## மூடப்பட்ட குழியொன்றிலிருந்து பெருந்தொகையான கைக்குண்டுகள் மீட்பு



தனமல்விலப் பகுதியின் குமாரகம சந்திக்கருகாமையிலுள்ள காணியொன்றில் மூடப்பட்ட குழியொன்றிலிருந்து வெடி மருந்துகள் கொண்ட பொதியொன்றினை தனமல்விலப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

மூடப்பட்ட குழியொன்றிலிருந்த மீட்ட பொதியில் டெட்டனேட்டர்கள், கைகுண்டுகள் 195, அமோனியம் னைட்டிரேட் 250 கிராம், பிளக் பவுடர் 50 கிராம், ரி.56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் சன்னங்கள் ஐந்து உள்ளிட்ட பெருந்தொகையிலான இரும்புத் தூள்கள் ஆகியன இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை சம்பவம் குறித்து எவரும் கைது செய்யப்படவில்லையென பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (7)

# இலங்கையில் நீதி கிடைக்குமென நான் ஒருபோதும் நம்பவில்லை

## திருமலையில் கொல்லப்பட்ட மாணவனின் தந்தை விரக்தி

(திருமலை)

எனது மகனின் படுகொலைக்கு இலங்கையில் நீதி கிடைக்கும் என நான் ஒருபோதும் நம்பவில்லை என திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவரான ரஜிகரின் தந்தை மனோகரன் தெரிவித்தார்.

அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது மகன் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார். அவர் மிகவும் அமைதியானவர்.

அவர் மேசைப்பந்து பயிற்றுவிப்பாளர், அவர் மருத்துவராக வரவிரும்பினார்.

ஆனால் அனைத்தும் தற்போது அழிக்கப்பட்டுவிட்டது.

திருகோணமலை கடற்கரையில் அன்றைய தினம் அந்த மாணவர்கள் எங்களைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் எனச் சத்தமிட்டார்கள்.

அதன் பின்னர் திடீரென படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

அதன் பின்னர் இரு மாணவர்கள் உயிருடன் உள்ளனர் எனவும் ஐந்துபேர் கொல்லப் பட்டுவிட்டனர் எனவும் எனக்குத் தகவல் கிடைத்தது.

நான் வைத்தியசாலைக்குச் சென்ற வேளை அவர்களின் உடல்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன. நான் பிரேத அறையில் உடலைத் திறந்தேன். முதலில் இருந்தது எனது மகனின் உடல்.

இலங்கையில் உரிய நீதி கிடைக்காது. நான் கலப்பு நீதிமன்றமொன்றையே விரும்புகின்றேன். அல்லது சர்வதேச குற்றவியல்



நீதிமன்றத்தை எதிர்பார்க்கின்றேன், நான் ஒருபோதும் இலங்கையைச் சேர்ந்த சில நீதிபதிகளை நம்புவதில்லை.

நான் பணமோ, வேறு எதனையுமோ கேட்கவில்லை, நான் நீதியையே கேட்கின்றேன்.

நான் எனது மகனுக்கு சர்வதேச நீதியைக் கேட்டு நிற்கின்றேன், அதனைக்கோராவிட்டால்நான் ரஜிகரின் தந்தையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அம்பாறையில் கடும் வரட்சி

## 39,421 பேர் பாதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் 11,381 குடும்பங்களைச் சேர்ந்த 39,421 பேர் இதுவரை வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நெல் உற்பத்தியில் பிரதான பங்களிப்பைச் செலுத்தி வரும் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேசத்தில் 2,649 குடும்பங்களைச் சேர்ந்த 8,329 பேரும் திருக்கோவில் பிரதேசத்தில் 306 குடும்பங்களைச் சேர்ந்த 1,110 நபர்களும் பொத்துவில் பிரதேசத்தில் 195 குடும்பங்களைச் சேர்ந்த 3,738 பேரும் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் 1,078 குடும்பங்களைச் சேர்ந்த 3,577 பேரும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 204 பேரும் மகாஓயா பிரதேசத்தில் 1,574 குடும்பங்களைச் சேர்ந்த 5,994 பேரும் அம்பாறை பிரதேசத்தில் 96 குடும்பங்களைச் சேர்ந்த 356 பேரும் பதியத்தலாவ பிரதேசத்தில் 3,168 குடும்பங்களைச் சேர்ந்த 11,282 பேரும் தமன பிரதேசத்தைச் சேர்ந்த 531 குடும்பங்களில் 2,124 நபர்களும் உஹன பிரதேச செயலாளர் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 145 நபர்களும் தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் 690 குடும்பங்களைச் சேர்ந்த 2,570 பேரும் அம்பாறை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# முஸ்லிம்களின் ஆடை தொடர்பில் விரைவில் சுற்றுநிருபம் - மஹரூப்

(கொழும்பு)

அலுவலகங்களில் முஸ்லிம்கள் அணியும் ஆடை தொடர்பான சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படவுள்ளதாகநாடாளுமன்றஉறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.



அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் ஆடை தொடர்பாக பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டிருந்த சுற்றுநிருபத்தின்படி முஸ்லிம் பெண்கள் அலுவலகங்களில் அபாயா அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் பலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தச் சுற்றுநிருபத்தின்படி முஸ்லிம் பெண்களின் அடிப்படை உரிமை மீறப்படுவது தொடர்பாக நான் உடனடியாக பிரதமரை தொடர்புகொண்டு தெளிவுபடுத்தினேன்.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே சில முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னுடன் உரையாடியதாகவும் அலுவலகங்களில் முஸ்லிம்கள் அணியும் ஆடை தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடத் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது பிரதமர் தெரிவித்தார்.

மேலும், முஸ்லிம் விவகார அமைச்சு இந்தச் சுற்றுநிருபம் சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் ஹலீமும் என்னிடம் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து அரசியல், பொருளாதாரம், கலாசாரம் என சகல துறைகளிலும் முஸ்லிம்களைக் குறிவைத்து இனவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பின்னால் நன்கு திட்டமிடப்பட்ட பாரிய அரசியல் நிகழ்ச்சி நிரலொன்று உள்ளது.

இந்த நடவடிக்கைகளைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டு கருத்துக்களைத் தெரிவிப்பதாலும் அதற்கு எதிர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாலும் இப்போதுள்ள சூழ்நிலை மேலும் மோசமடைய வாய்ப்புள்ளது. அவ்வாறு செய்வதையே இனவாதிகள் எதிர்பார்த்துள்ளனர்.

எனவே இந்தச் சூழ்நிலையில் பொறுமையுடன் செயற்படுமாறு எமது சகோதரர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த இனவாதச் சூழ்ச்சியை தோற்கடித்து அசாதாரண நிலையைப் போக்க முஸ்லிம் அரசியல்வாதிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் உலமாக்களுடன் சேர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆகவே இந்த நடவடிக்கைகளுக்கு உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிலர் ஆட்சியைப் பிடிப்பதற்கு கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்

(கொழும்பு)

சிலர் ஆட்சியைப் பிடிப்பதற்கு கனவு கண்டு கொண்டிருக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

காலி, அக்மீமன பகுதியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எந்தவொரு முயற்சியையும் முன்னெடுக்காமல் எதிர்க்கட்சியினர் ஆட்சியைப் பிடிப்பதற்கு கனவு காண்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் டிசெம்பர் மாதமளவில் 25 இலட்சத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வரலாம் எனவும் தற்போது இந்தியா, ஜேர்மன் உட்பட சில நாடுகள் இலங்கை பாதுகாப்பான நாடு என அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)



# கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது

(கனுகெட்டிய)

கனுகெட்டிய, ஹீங்கம பிரதேசத்தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 2.35 கிலோ கிராம் கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கு கடற்படை வீரர்கள் மற்றும் பட்டிய பொல பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளும் இணைந்து கனுகெட்டிய பிரதேசத்தில் நேற்று நடத்திய சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கார் ஒன்றில் இந்த கஞ்சா தொகையை கொண்டு செல்லும் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹீங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 56 மற்றும் 31 வயதுடைய இரண்டு பேரே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (7)


## அகவை ஒன்றில் நினைவஞ்சலி



அமரர் யாகேஸ்வரி செல்லையா
[ வைகாசி துவாதசி–அபரபக்கம்]

மண்ணில் 27.01.1936 விண்ணில் 10.06.2018

அனைத்தையும் அகிலத்தில் தந்து
எமை ஆளாக்கிய அன்னையே
அகவை ஒன்றல்ல ஆயிரம் ஆனாலும்
எம் இதயத்தில் என்றும்
நிறைந்திருப்பாய்

அன்னாரின் ஆண்டு திவஷ நிகழ்வுகள் 03.06.2019 திங்கட் கிழமை (நாளை) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இதில் கலந்து கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் பிரிவுத் துயர் என்றென்றும் ஆறாது. உங்கள்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சித்தம்பாதி, கரணவாய், கரவெட்டி

பேரன்: க.நிரோஜன் (கவின்)

C 6568


# பாகிஸ்தானுக்கான விமானசேவை ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த 3 மாதங்களின் பின்னர் ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்று நேற்று நண்பகல் கராச்சி விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்ட பாதுகாப்பு முறுகல் நிலைமையினால் கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முதல் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நேரடி விமான சேவை இடைநிறுத்தப்பட்டிருந்ததாகவும் விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (7)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி



(கொழும்பு)

இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்ட ஜனாதிபதி மீண்டும் தாயகம் திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமர் நரே ந்திர மோடியை நேற்று முன் தினம் டில்லியில் வைத்து சந் தித்து பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளார்.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் மோடியின் இரண் டாவது பதவியேற்பு வைபவம் டில்லியில் ஜனாதிபதி மாளி கையில் கடந்த விழாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிலையில், பதவியேற்பு நிகழ்வையடுத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி விட்டு இரவு தாயகம் திரும்பி யமை குறிப்பிடத்தக்கது. (7)

# அடிப்படைவாதிகளை அரசாங்கம் ஒருபோதும் பாதுகாக்காது

## அஜித் மன்னப்பெரும உறுதி

(கொழும்பு)

சில சக்திகள் தமது சுய இலா பங்களுக்காக அடிப்படைவா தத்தைத் தூண்ட முயற்சிப்பதாக தெரிவித்த இராஜாங்க அமை ச்சர் அஜித் மன்னப்பெரும, அர சாங்கம் அடிப்படைவாதிகளுக்கு ஒருபோதும் இடமளிக்காது என வும் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஒவ்வொரு சமூகத்துக்கும் தனியான சட்டங்கள் காண ப்படுகின்றன. இனிவரும் கால ங்களில் அனைத்து சமூகத்தின ருக்கும் பொதுவான சட்ட திட்ட ங்களைக் கொண்டுவர நடவடி க்கை எடுக்கப்படும். அவசரகால சட்டத்தின் கீழ் தடை விதிக்கப் பட்டுள்ள புர்கா ஆடைக்கும் சில அமைப்புகளுக்கு எதிர்காலத்தில் முற்றாக தடை விதிக்கப்படும். அடிப்படை வாதிகளுக்கு அரசா ங்கம் ஒருபோதும் இடமளிக் காது.

சமத்துவத்தையும் நல்லிண க்கத்தையும் கட்டியெழுப்புவதே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான குறிக்கோளாகும். நாட்டின் அமை திக்கு சவாலை ஏற்படுத்துபவர்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (7)

# தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை பார்வையிட்ட இராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

தலவாக்கலை - ஒலிரூட் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவா ரண உதவிகளை வழங்க நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாக விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வே.இரா தாகிருஷ்ணன் தெரிவித்துள் ளார்.

குறித்த தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந் திருந்த 24 வீடுகள் சேதமடை ந்ததுடன், இந்த வீடுகளில் குடி யிருந்த 24 குடும்பங்களைச் சேர் ந்த 103 பேர் நிர்க்கதி நிலைக் குள்ளாகியுள்ளனர். தற்போது இவர்கள் அப்பகுதியில் உள்ள மண்டபத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

இவர்களைப் பார்வையிடு வதற்காக அமைச்சர் வே.இரா தாகிருஷ்ணன் ஒலிரூட் தோட்ட த்திற்கு நேற்று முன்தினம் விஜய மொன்றை மேற்கொண்டு ள்ளார்.





இதன்போது விசேட பிர தேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சின் ஊடாக பாதிக்கப் பட்ட இம்மக்களுக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி ஒதுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாக கூடாரங்களை அமைப்பதற்கு இந்த நிதி ஒது க்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமை ச்சர் தெரிவித்துள்ளார். (7)

# இண்டாவது நாளாகவும் தொடரும் அத்துரலிய ரத்ன தேரரின் போராட்டம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின் உணவு தவிர்ப்புப்போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்துள்ளது.



கண்டி தலதாமாளிகைக்கு முன்பாக, அத்துரலிய ரத்ன தேரர் நேற்று முன்தினம் இந்த போராட்டத்தை ஆரம்பித்தார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன், மாகாண ஆளுநர்களான ஹிஸ் புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும் உள்ளிட்ட 4 அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து அவர் இந்தப் போராட் டத்தை முன்னெடுத்துள்ளார்.

இதேவேளை அத்துரலிய ரதன தேரரின் போராட்டத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் மேலும் சில பௌத்த மத குரு மாரும் பொதுமக்களும் போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(வத்தளை)

வத்தளை பகுதியில் போதைப் பொருளுடன் சந்தேக நப ரொருவர் கைது செய்யப்பட்டு ள்ளார்.

வத்தளை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் திட்டமிட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு களின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊட கப்பிரிவு தெரிவித்துள்ளது. (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 200 | 170 | 200 |
| தக்காளி | 140 | 120 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 160 | 120 | 100 |
| கோவா | 100 | 80 | 120 | 90 | 120 |
| கரட் | 80 | 160 | 160 | 110 | 200 |
| பூசணி | 80 | 60 | 70 | 65 | 80 |
| புடோல் | 100 | 90 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 100-200 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 160 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 130 | 100 | 90 | 100 |
| லீக்ஸ் | 150 | 120 | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 150 | 80 | 140 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 100 | 160 | 120 |
| போஞ்சி | 250 | 260 | 140 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | – | 70 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 350 | 400 | 280 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 20-40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 280 | – | 200 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 60 | – | 120 |

# வெளியிலிருந்து விமர்சிப்பதை விடுத்து எதிரணியினர் தெரிவுக் குழுவில் பங்கேற்கலாம்

## ஆசு மாரசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழு வில் பங்கேற்காமல் வெளியில் இருந்து விமர்சிப்பதை விட எதிரணி பாராளுமன்ற உறுப்பி னர்கள் அந்தக் குழுவின் விசா ரணை நடவடிக்கைகளில் பங்கு கொள்வது அவசியமாகும் என் றும் எதிரணி உறுப்பினர்கள் பங் கேற்பதால் சிக்கல்கள் எதுவும் ஏற்படப் போவதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் பேரா சிரியர் ஆசுமாரசிங்க தெரிவித் தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியாளர் சந்திப்பில் மேற்கண்ட வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற தெரிவுக் குழு வினூடாக இதுவரை மேற் கொள்ளப்பட்ட விசாரணைகள்



தேசிய பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்படாத வகையிலேயே அமை ந்திருந்தன. ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் தொட ர்பில் அனைவரும் பொறுப் புக்கூறுவது அவசியமாகும்.

உயிர்த்த ஞாயிறன்று இடம் பெற்ற குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்கவென நியமிக்கப்பட்டுள்ள பாராளு மன்ற தெரிவுக்குழுவின் விசா ரணை நடவடிக்கைகளை ஊடக ங்களில் வெளியிடுவதைப் போன்று ஏனைய பாராளுமன்ற குழுக்களின் விசாரணைகளை யும் ஊடகங்களுக்கு பகிரங் கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் மாத்திரமல் லாமல் ஏனைய நாடுகளிலும் பாராளுமன்றத்தில் நியமிக் கப்படும் இதுபோன்ற விசார ணைக்குழுக்களின் நடவடிக் கைகளை ஊடகங்களில் வெளி யிடுகின்றன.

அதேபோன்று அந்த நாடுக ளின் ஊடகங்களும் இது தொடர் பில் பொறுப்புடன் செயற்படுகின் றன. ஆகவே இந்த தெரிவுக் குழுவின் விசாரணைகளை மக் களுக்கு தெரியப்படுத்தும் போது தகவல்களை திரிபுபடுத்தாமல் வெளியிடுவது அவசியமாகும் என அவர் தெரிவித்தார். (7)

## கன்னியா பிள்ளையார் ஆலய விவகாரம்

# தொல்பொருள் திணைக்களம் வரலாறுகளை திரிபுபடுத்துகிறது

## இராவண சேனை குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

250 வருடகால திருகோணமலை கன்னியா பிள்ளையார் ஆலய வரலாறுகளை பௌத்த மயமாக்கலோடு தொல்பொருள் திணைக்களம் திரிபுபடுத்துவதாக இராவண சேனை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

புராண இதிகாசங்களின் படி இராவணன் தனது தாயின் இறுதிக்கிரியை மேற்கொள்வதற்காக விஷ்ணுவின் உத்தரவின் பேரில் 7 கிணறுகளை அமைத்ததாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

வரலாற்றுக்கு முந்தைய பதிவுகளின்படி குறித்த கன்னியாப் பிள்ளையார் ஆலயம் உருவாகுவதற்கு முன் சிவன் ஆலயம், முருகன் ஆலயம் அங்கு அமைந்திருந்தமைக்குரிய தொல்லியல் ஆதாரங்களும் கிடைத்துள்ளன.

250 வருடங்களுக்கு முன்னர் ஆங்கில வரலாற்று ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்ட நூலில் அகத்தியர் மனம் கவர்ந்த இடமாக கன்னியாவைக் குறிப்பிட்டுள்ளார். கங்குவேலி அகத்தியர் ஸ்தபனச் சிவன் ஆலயம் மற்றும் திருமங்களாய் சிவன் ஆலயம் என்பவற்றில் அகத்தியர் வந்து தங்கியமை தொடர்பான புராதன வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன.

கன்னியாவைச் சூழவுள்ள ஒரு ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பில் யாத்திரிகர்கள் மடம், அன்னதானமடம், அந்தியேட்டி மடம் எனப் பாரிய கட்டட நிர்மாணங்களைக் கொண்ட பகுதியாக கன்னியா அமைந்திருந்தது.

இலங்கையை ஆட்சி செய்த அந்நிய நாட்டவரான ஒல்லாந்தர், போத்துக்கீசர் கன்னியா ஆலயத்தையும் அதனை சூழவிருந்த கட்டட நிர்மாணங்களையும் உடைத்தெறிந்தார்கள்.

30 வருடகால உள்நாட்டுப் போர் நிறைவடைந்த நிலையில் குறித்த ஆலயத்தை மீள நிர்மாணம் செய்வதற்காகப் பிரதேச சபையின் உதவியுடன் குறித்த ஆலயத்தின் பரம்பரையினரால் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் தொல்பொருள் திணைக்களம் குறுக்கீடு செய்து குறித்த பகுதி 1983, 1987 காலப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகத்தெரிவித்துபுனரமைப்புவேலைகளை நிறுத்துமாறு பணித்ததும் 1800 ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சியாளர்களால் தமிழ்க் குடிமகன் ஒருவரின் பெயரில் குறித்த ஆதனம் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த நிலையில் தொல்பொருள் திணைக்களம் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

தொல்பொருள் திணைக்களம் கன்னியா பிள்ளையார் ஆலயத்தைப் பாதுகாப்பதை நாம் வரவேற்கின்றோம். எனினும் காலத்தால் முந்திய இந்து மதக் கோட்பாடுகள், சின்னங்கள் மாற்று மதத்துடன் திரிபுபடுத்தி இன நல்லிணக்கத்தை குழப்பும் வகையில் செயற்படுவதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதென இராவண சேனை அமைப்பின் தலைவர் தெரிவித்தார். (இ-10)

## நீரில் மூழ்கிய நிலையில் ஒருவர் சடலமாக மீட்பு

(பண்டாரவளை)

பண்டாரவளை - பனங்கல கங்கையில் நீரில் மூழ்கிய நிலையில் நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை கடற்படையினால் குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பல்லேவல பிரதேசத்தினைச் சேர்ந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு மீன்பிடிக்கச் சென்றுள்ள நிலையில் குறித்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

# களனி பல்கலைக்கழகத்தின் பீடங்களை திறக்க தீர்மானம்

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களை நாளை 3 ஆம் திகதி திறப்பதற்கு, பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் தீர்மானம் எடுத்துள்ளதாக அப்பல்கலைக்கழகத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய களனி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம், வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகிய பீடங்களை திறப்பதற்கு களனி பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரிகள் தீர்மானம் எடுத்துள்ளதாக அப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மாணவர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்ததால், களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பீடங்களும் தற்காலிகமாக கடந்த வியாழக்கிழமை மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# அத்துரலிய ரத்ன தேரர் பெரிதாக அரசிற்கு ஒன்றும் செய்ததில்லை

## பாலித சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு அத்துரலிய ரத்ன தேரர் பெரிதாக செய்த உதவியொன்று இல்லையென பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

ரதன தேரர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேரரின் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அத்துரலிய ரத்ன தேரர் ஒரு காலத்தில் ஒரு பக்கத்தில் இருப்பார். இன்னுமொரு காலத்தில் அடுத்த பக்கத்துக்கு பாய்வார். தேரர் பாயும் வேலையை மட்டும் தான் செய்கின்றார். தேரர் எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேறாத போது இவ்வாறு செய்கின்றார். மத வழிபாடுகளில் ஈடுபடாமல் இருந்துவிட்டு, தேரர் சொல்லும் விடயங்களை ஏற்க நாம் தயாரில்லை.

அரசாங்கத்துக்கு அதிகாரத்துக்கு வருவதற்கு இதுபோன்றவர்களின் உதவிகள் தேவையில்லை. நாட்டு மக்களே தமது உரிமையை பிரயோகித்துள்ளனர். மக்களின் ஆதரவு இன்னும் எங்களுக்கு இருக்கின்றது எனவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (7)



# புத்தக விற்பனை நிலையத்தில் தீ

(பண்டாரவளை)

பண்டாரவளைப் பகுதியின் கினிகம என்ற இடத்தில் புத்தக விற்பனை நிலையமொன்று திடீரென்று தீப்பிடித்துள்ள சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இத்தீப்பரவல் சம்பவத்தினால் 5 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் காகிதங்கள் முற்று முழுதாக தீக்கிரையாகியுள்ளன.

உயிராபத்துக்கள் எதுவும் இச்சம்பவத்தில் இடம்பெறவில்லை.

இது குறித்து பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மின் ஒழுக்கின் காரணமாகவே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப--கட்ட விசாரணைகளின் பின் தெரியவந்துள்ளது. (7)

# தேசிய பாதுகாப்பே எமக்கு முக்கியம்; தெரிவுக்குழுவில் நம்பிக்கையில்லை

## பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்கால அரசியல் நோக்கங்களைக் காட்டிலும் தேசிய பாதுகாப்பு எமக்கு முக்கியமாக காணப்படுகின்றது. இதன் காரணமாகவே தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளவில்லை, மறுபுறம் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலும் நம்பிக்கை கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பாதுகாப்பு பிரதானிகள் முன்வைக்கும் விடயங்கள் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய இரகசியத் தகவல்கள். தெரிவுக் குழுவின் கலந்துரையாடலினை ஊடகங்கள் நேரலை ஒளிபரப்பு செய்வது பொருத்தமற்றது.



தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் அரசாங்கத்தின் நோக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளது. நாட்டின் பாதுகாப்பு தொடர்பிலான இரகசியத் தகவல்களை பகிரங்கப்படுத்துவது புலனாய்வுப் பிரிவின் மீது ஏனைய புலனாய்வு தரப்பின் முகவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை மழுங்கடிக்கச் செய்யும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் எவற்றை ஊடகங்களுக்கு வழங்க வேண்டுமோ அதை மாத்திரம் அரசாங்கம் வழங்கினால் போதும். பாதுகாப்பு சார் இரகசிய தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கிய வேண்டிய கட்டாயம் அல்ல, அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் முன்னுக்குப் பின் முரணாகவே காணப்படுகின்றது என மேலும் தெரிவித்தார். (7)

# தேரரின் போராட்டத்தை வலுப்படுத்திய கத்தோலிக்க திருச்சபையின் மதகுரு!

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் கத்தோலிக்க திருச்சபையின் மதகுருவொருவரும் நேற்றுச் சனிக்கிழமை இணைந்தார்.

ராகம பிரதேசத்தைச் சேர்ந்த மதகுருவான மென்ரூட் அந்தோனி என்பவரே தேரருக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் இணைந்தார்.



இதேவேளை குறித்த போராட்டத்துக்கு பொதுமக்களும் ஆதரவு தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# இராணுவத்திடம் சரணடைந்த உறவுகளுக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தராதது ஏன்?

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி

(பனிக்கன்குளம்)

**கடந்தகால இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்த உறவுகளுக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தராதது ஏன் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.**

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் 817 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போதே மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளனர். இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட, சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமலாக்கப்பட்டுள்ள தமது உறவுகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் நாட்டின் தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகளால் பெரும் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் அச்சம்வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஐ.எஸ். என்ற சர்வதேச பயங்கரவாத அமைப்பு தனது உள்ளூர் முகவர்களைப் பயன்படுத்தி நடத்தியிருந்த தொடர் தற்கொலைத்தாக்குதலையடுத்து எம் நாட்டிற்கு படையெடுத்துள்ள அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல மேற்குலக நாடுகளின் புலனாய்வாளர்கள் எம் நாட்டு புலனாய்வாளர்களுடன் இணைந்து தாக்குதல்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஐ.எஸ்.ஆயுததாரிகளின் தற்கொலை தாக்குதல்கள் தொடர்பில் நாட்டுடன் இணைந்து சர்வதேச சமூகம் விசாரணைகளை முன்னெடுப்பது போல், போரின் இறுதி நாட்களில் இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க ஏன் சர்வதேச சமூகம் முன்வராது மௌனம் காக்கின்றது என்று வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதலையடுத்து அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுவரும் நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமது பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் தமது போராட்டத்திற்கு தீர்வு தராது என்ற நிலையில் சர்வதேசமும் தமது பேராட்டம் நடைபெறுகின்றதா? என்று அறிவதற்கும் முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதி தமது மாவட்டத்திற்கு முன்னெடுக்கும் விஜயத்தின் போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களினதும், நில ஆக்கிரமிப்புக்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-281)

# கைக்குண்டு மீட்பு


ஆனமடுவ - சிலாபம் வீதியின் ரதஓலாஓயா பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றை கண்டெடுத்துள்ளதாக பல்லம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாலத்துக்கு அருகே உள்ள பற்றைக்குள் சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்று கிடப்பதாக நபர் ஒருவர் வழங்கிய தகவல் ஒன்றை அடுத்து, அங்கு சென்ற பொலிஸார் போத்தல் ஒன்றில் அடைக்கப்பட்ட கைக்குண்டை மீட்டுள்ளனர்.

SHG 87 வகையைச் சேர்ந்த குறித்த கைக்குண்டு, வெடிக்கக் கூடிய நிலையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இதுவரை எவரும் கைது செய்யப்பட்டவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(7)

# சிறுகைத் தொழிலாளர்களை சந்தித்த புத்திக்க பத்திரண





(பனிக்கன்குளம்)

கைத்தொழில் வாணிப பிரதி அமைச்சர் புத்திக பத்திரண நேற்று முன்தினம் முல்லைத்தீவிற்கு பயணம் மேற்கொண்டு மாவட்டத்தில் உள்ள கைத்தொழிலாளர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் கைத்தொழில் உற்பத்தியாளர்களுடனான விசேட கலந்துரையாடல் மற்றும் குறைகளை அறிந்துகொள்ளும் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கைத்தொழில் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் பிரதி அமைச்சர் இதன்போது கேட்டறிந்து கொண்டார். இதேவேளை அவர்களுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் கோ.தனபாலசுந்தரம், கைத்தொழில் முயற்சி அதிகார சபையின் அதிகாரிகள், மாவட்ட செயலக தொழில் பயிற்சி அதிகாரிகள், ஐ.டி.பி. அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (7-281)

# திறன் வகுப்பறை திறந்து வைப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் முதலாவது திறன் வகுப்பறை நேற்று முன்தினம் மாங்குளம் சண்முகரட்ணம் வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் சண்முகரட்ணம் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி. அ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி த.பங்கயச்செல்வன், சுன்னாகம் ரோட்டறிக்கழகத் தலைவர் திருவாதவூரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா பிரேமகாந்த், சுன்னாகம் ரோட்டறிக்கழகத்தினுடைய செயலாளர் த.வாமதேவன், உறுப்பினர் ரெஜினோல்ட், பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் த.தயாபரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (7-281)

# நுழைவாயில் திறப்பு



(பனிக்கன்குளம்)

முள்ளியவளை, செங்குந்தா வீதியில் அமைந்துள்ள நரசிம்ம வைரவர் கோவிலின் நுழைவாயிலை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் திறந்து வைத்தார்.

கடந்த 2018 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரவிகரனால் குறித்த நரசிம்ம வைரவர் கோவிலின் நுழைவாயில் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் கோவிலின் நுழைவாயில் நேற்று முன்தினம் ரவிகரனால் திறந்து வைக்கப்பட்டது. விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய இந் நிகழ்வானது, தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், அதனையடுத்து கோவிலினுடய நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் நரசிம்ம வைரவர் கோவிலினுடைய வருடாந்த பொங்கல் விழாவும், பூசைகளும் சிறப்பாக இடம்பெற்றன. (7-281)

உலகத்தில் வாழ்ந்து காண்பிக்க வேண்டும் சாகும் வரை அல்ல. நம்மை வெறுத்தவர்கள் வாழ்த்தும் வரை ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியலில் பதற்றத்தை தரப்போகும் அத்துரலிய தேரரின் உண்ணாவிரதம்

2019 ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து முஸ்லிம் அரசியல்வாதிகள் மீதான எதிர்ப்பு தென்பகுதியில் வலிமையடைந்து வருகிறது.

இதன் ஓர் அம்சமாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோரின் பதவிகளைப் பறிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்துள்ளன.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கும் நாள் குறிக்கப்பட்டுவிட்டது.

மேற்படி மூவரும் முஸ்லிம் அரசியல்வாதிகளாக இருந்தபோதிலும் அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் ஆதரவைப் பெற்றவர்கள் என்பதுடன் ரிஷாத் பதியுதீனுக்கு அமைச்சுப் பதவியை வழங்கியவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்றால், ஹிஸ்புல்லாவுக்கும் அசாத் சாலிக்கும் ஆளுநர் பதவிகளை வழங்கியவர் ஜனாதிபதி மைத்திரி என்ற அளவில் நிலைமை இறுகிப் போயுள்ளது.

இஸ்லாமியத் தீவிரவாதம் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தோடு முஸ்லிம் மக்களின் பொருளாதாரம் படு வீழ்ச்சி கண்டுள்ளது.

சிங்களக் குடும்பமொன்றின் திருமண வீட்டில் முஸ்லிம் ஒருவர் உணவு சமைத்தார் என்பதற்காக; திருமண வீட்டுக்கு வந்தவர்கள் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர் எனும்போது, முஸ்லிம் மக்களின் வர்த்தக இயங்குநிலைகள் மிகவும் மந்தமாக இருக்கப் போவது உறுதியாகிறது.

அதிலும் குறிப்பாக, இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் உணவுச்சாலைகளை வைத்திருக்கக் கூடிய முஸ்லிம் வர்த்தகர்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள் எங்ஙனம் எதிர்கொள்ளப்படும் என்ற கேள்விக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்களான ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோரின் பதவிகளைப் பறிக்க வேண்டுமென்ற கோரிக்கையுடன் அத்துரலிய ரத்தின தேரர் கண்டி தலதா மாளிகை முன்றலில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அத்துரலிய ரத்தின தேரர் ஆரம்பித்துள்ள மேற்படி உண்ணாவிரதப் போராட்டம் தென்பகுதி அரசியலில் பெரும் சர்ச்சைகளை - குழப்பங்களை ஏற்படுத்தவே செய்யும்.

அதாவது அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடிப்பது எங்ஙனம் என்ற விடயத்தில் மண்டையை உடைத்து நிற்கும் வேளையில்,

இப்போது அத்துரலிய தேரரின் உண்ணாவிரதம் சமகால அரசியலில் பரபரப்பான விடயம் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

ஆக, மூன்று முஸ்லிம் அரசியல்வாதிகளும் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்வது தான் ஒரே வழி.

இதற்காக ஜனாதிபதியும் பிரதமரும் சம்பந்தப்பட்ட மூன்று பேருடனும் பேச்சு நடத்தி, உங்கள் பதவிகளை விட்டு விடுங்கள் என்று கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனினும் அத்தகையதொரு சூழ்நிலைக்குத் தாங்கள் தள்ளப்பட்டால், அடுத்த கணமே பயங்கரவாத குற்றப்புலனாய்வுத்துறை தங்கள் மீது பாயும் என்பதுடன் கைது, விசாரணை என்பன இடம்பெறாவிட்டால் அதனை வலியுறுத்தியதாகவும் உண்ணாவிரதப் போராட்டம் நடக்கும் என்ற நடுக்கமும் குறித்த மூவரிடமும் ஏற்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் மேற்குறித்த மூவர் தொடர்பில் அவர்களைக் காப்பாற்றுபவர்கள் மீதும் சந்தேகம் எழும் என்பதால், அடுத்து வரும் அரசியல் நிலைமை பரபரப்பாக இருப்பது தவிர்க்க முடியாததே.

# யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் வீட்டுத் திட்டங்களை இன்று மக்களிடம் கையளிப்பார்

(யாழ்ப்பாணம்)

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் என்ற அடிப்படையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ். மாவட்டதற்கு விஜயத்தை மேற்கொண்டு வீட்டுத்திட்டங்களை மக்கள் மயமாக்கும் நிகழ்வில் பங்கு கொள்கிறார்.

30 வருடகால யுத்தத்தையடுத்து 2019ஆம் ஆண்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னெடுப்பில் 10 ஆயிரம் பயனாளிகளால் முன்னெடுக்கப்படும் கல்வீட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு அமைச்சின் கீழ், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்த வீட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் கீழ் யாழ்.மாவட்டத்தில் 2,500 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 1,500 வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,300 வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் 1,200 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் 1,000 வீடுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,000 வீடுகளும, திருகோணமலை மாவட்டத்தில் 1,000 வீடுகளும் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 500 வீடுகளும் உள்ளடங்கலாக 10ஆயிரம் வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் 4,750 வீடுகள் வாக்குப் பணக் கணக்கெடுப்பின் கீழ் ஜனவரி மாதம் ஆரம்பிக்கபட்டுமுடிவுறும்கட்டத்தை அடையவுள்ளதாக அமைச்சின செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும், எஞ்சிய 5,250 வீடுகள் ஆரம்பிக்கப்பட்டு அவை ஓகஸ்ட் மாத இறுதிக்குள் முடிவுறுத்தப்படும் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வீட்டுத்திட்டங்கள் அலகு ஒன்றுக்கு ஒரு மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படுகின்றது எனவும் இதற்கென 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவை பயனாளிகளால் முன்னெடுக்கப் படுகின்றது என்ற காரணத்தால் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கும் திறன் விருத்திக்கும் உள்ளூர் வேலை வாய்ப்புக்கும் பாரிய பங்களிப்பு பெறப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும், இவ்வீட்டுத் திட்டங்களுக்கான நிதி அந்தந்த மாவட்டத்திலேயே சுழற்சிப் படுத்தப்படுவதால் அந்தந்த மாவட்டங்களுக்கு பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது.

மேலும், பிரதமரின் யாழ். மாவட்ட விஜயத்தில் திக்கம் பனைசார் உற்பத்திப் பொருட்களை உருவாக்கும் தொழிற்சாலைக்கான கட்டட வேலைத் திட்டங்கள் நாளை ஒப்பந்தகாரர்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு 56 மில்லியன் செலவில் வைத்திய உபகரணங்களும அருணோதயா கல்லூரிக்கு 55 மில்லியன் ரூபாய் வகுப்பறைகளும் ஒன்றுகூடல் மண்டபமும் தேசிய இளைஞர் ஆளுமை சேவை மண்டப கட்டட பயிற்சி வளாகத்திற்கு 50 மில்லியன் ரூபாயும் எழுதுமட்டுவாழ்-கிளாலி வீதி புனரமைப்பதற்கு 81 மில்லியன் ரூபாய் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ)

# தேசத்தின் வீரர்களை புறந்தள்ள முடியாது 9 பேரையும் சேவையில் அமர்த்துங்கள்

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை

உள்நாட்டுப் போரின் போது மனித உயிர்களைப் பாதுகாத்த அம்புலன்ஸ் சாரதிகளைத் தற்போது அதே சேவையில் அமர்த்துவதற்குத் கல்வித் தகைமையை பரிசீலிக்கத் தேவையில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததாக வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ் பொது நூலகத்தில் இடம்பெற்ற வைபவததில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போரின் போது ஒரு உயிரையேனும் காப்பாற்றத் துடிக்காத சில அரச அதிகாரிகள் போரின்போது தமது உயிரைச் துச்சமென நினைத்து அம்புலன்ஸ் சாரதிகளாகச் சேவையாற்றிய தேசத்தின் வீரர்களிடம் கல்வித் தகைமையை நுணுக்கமாக பரீசிலிக்கக் கேட்பது மனிதாபிமானமற்ற செயலாகும்.

இறுதி யுத்தத்தில நான்கு பாரிய தேசத்தின் இராணுவத்தால் போர் தொடுக்கப்பட்டு மரணத்தின் விளிமபு வரை சென்று வாழத்துடிக்கும் மக்களுக்கு எங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்த் தெரிவித்ததோடு குறித்த அம்புலன்ஸ் சாரதிகளுக்கு நியமனத்தை வழங்குமாறு பணிப்புரை விடுத்ததாகத் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் உள்ள அரச நிர்வாகத்தில் இப்படியான சில குறைபாடுகள் இருப்பதை நான் அவதானிக்கிறேன். எனக்கு தேர்தலில் போட்டியிடும் எண்ணமுமில்லை. அது பற்றிச் சிந்தித்ததும் இல்லை. ஆகவே தான் அரச அதிகாரிகளின் நிர்வாகச் செயற்பாடு தொடர்பில் இனியும் பொறுமை காக்க முடியாதென ஆளுநர் காட்டமாகத் தெரிவித்தார். (ம-10)

## பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை பதவி விலகுமாறு

### வட மாகாண ஆளுநர் உத்தரவு

வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பதவி விலகுமாறு வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உத்தரவிட்டுள்ளதாக அறிய முடிகிறது.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவை வினைத்திறனாக மாற்றும் ஓர் நடவடிக்கையாக ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவி விலகல் உத்தரவு அமைந்துள்ளதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10)

## 12 மில்லியன் பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் கட்டுநாயக்க ஊழியர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பெண் துப்புரவு பணியாளர் ஒருவர் தங்க ஆபரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு கிலோ 187 கிராம் நிறையுடைய தங்க ஆபரணங்களுடன் குறித்த பெண், நேற்று சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

பெண் ஊழியர் தங்க ஆபரணங்களை விற்பனை செய்வதற்கு முயன்றபோது விமான நிலையத்தின் பாதுகாப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்க ஆபரணங்களின் பெறுமதி சுமார் 11.5 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. விமான பயணியொருவரால் தங்க ஆபரணங்கள் குறித்த ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருவதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன மேலும் தெரிவித்தார். (ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு, தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். ஒளியில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதர, சகோதரிகளை வெறுப்போர் இருளில் தான் இருக்கின்றனர்.
- எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே. அவர் எல்லாருக்கும் மேலானவர். அவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுகிறவர். எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் அவரே.
- நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.
- நீங்கள் மற்றவர்களை விட உயர்ந்தவர்களென்று சொன்னவர் யார்? நீங்கள் சகோதரர்கள் அல்லவா? ஏன் ஒருவருக்கொருவர் தீங்கிழைத்துக் கொள்கிறீர்கள்? தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள்.
- கடவுளைச் சார்ந்து தான் நாம் வாழ்கின்றோம். இயங்குகின்றோம். இருக்கின்றோம். கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதர சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும்.

# உலகக் கோப்பை 2019 வெல்லப் போகும் அணி எது?



இங்கிலாந்தில் 12 ஆவது உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் நடந்து வரும் நிலையில், எந்த அணி கோப்பையை கைப்பற்றும் என்பது குறித்து பார்ப்போம்.

12 ஆவது உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் தொடர் நேற்றைய தினம் இங்கிலாந்தின் லண்டன் நகரில் தொடங்கியது. 10 அணிகள் பங்குபெறும் இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் சமபலத்துடன் மோதவுள்ளன.

• நடந்த முதல் லீக் போட்டியில் போட்டியை நடத்தும் இங்கிலாந்தை, தென்னாபிரிக்க அணி எதிர்கொண்டது. ஜாம்பவான் வீரர் டிவில்லியர்ஸ் இல்லாத நிலையில், இந்த உலகக் கோப்பையில் களமிறங்கியிருக்கும் தென்னாபிரிக்கா தனது கடந்தகால வரலாற்றை மாற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த போட்டியில் 104 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் தோல்வியுற்றது.

• இங்கிலாந்தைப் பொறுத்தவரை சொந்த மண்ணில் விளையாடுவது மிகப்பெரிய பலம் என்று கூறப்பட்ட நிலையில், தென்னாபிரிக்காவுடனான போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் அதனை நிரூபித்துள்ளது. அந்த அணியில் துடுப்பாட்டம், பீல்டிங், பந்துவீச்சு என அனைத்து வகையிலும் சமபலத்துடனான வீரர்கள் உள்ளனர். எனவே, இங்கிலாந்துக்கு கோப்பையை கைப்பற்றும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

• உலகக்கோப்பைக்கு முன்னதாக இங்கிலாந்துடன் நடந்த ஒருநாள் தொடரில் மிரட்டலான ஆட்டத்தை பாகிஸ்தான் வெளிப்படுத்தியது. தொடரை இழந்தாலும் அந்த அணியின் துடுப்பாட்ட வரிசை மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது. எனவே, பாகிஸ்தான் அணிக்கும் கோப்பையை கைப்பற்றும் வாய்ப்பு இருப்பதாக கணிக்கப்பட்டது.

• ஆனால், தனது முதல் லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவு எதிர்கொண்ட பாகிஸ்தான், 21.4 ஓவரில் 105 ஓட்டங்களுக்கு சுருண்டது. பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவு அணி, 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து இலக்கை எட்டி, வெற்றி பெற்று தனது கணக்கை தொடங்கியுள்ளது. எனினும், இங்கிலாந்தின் தட்பவெப்ப நிலை கூட பாகிஸ்தான் வீரர்கள் தடுமாற காரணமாக இருக்கலாம் என்பதால், அடுத்தடுத்த போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தினை அந்த அணி வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

• அதிரடி வீரர்களைக் கொண்ட மேற்கிந்தியத்தீவு அணி, இளம் தலைவரான ஹோல்டரின் தலைமையில் வெற்றியுடன் உலகக் கோப்பையை தொடங்கியுள்ளது. அந்த அணியில் அனுபவ வீரர் கெய்ல் அரைச்சதம் விளாசியிருப்பது சக வீரர்களுக்கு உற்சாகத்தை அளித்துள்ளது. எனவே, இவ் அணி இந்தத் தொடரில் ஆதிக்கம் செலுத்தும் எனலாம்.

• இலங்கை அணியைப் பொறுத்தவரை பந்துவீச்சை மிகப் பெரிய பலமாகக் கூறலாம். காரணம், அனுபவ வீரரான மலிங்காவின் மிரட்டலான பந்துவீச்சு தான். ஐ.பி.எல் இறுதிப்போட்டியில் தனது சிறப்பான பந்துவீச்சின் மூலம் மும்பை அணிக்கு கோப்பையைப் பெற்றுத் தந்தார்.

• ஆனால், துடுப்பாட்ட வரிசையில் அஞ்சலோ மத்யூஸ், குசல் பெரேரா, திசர பெரேரா ஆகியோரையே இலங்கை அணி பெரிதும் நம்பியுள்ளது. இவர்களுடன் மற்ற வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால், இலங்கை அணிக்கும் கோப்பையை கைப்பற்றும் வாய்ப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

• நியூசிலாந்து அணியைப் பொறுத்தவரை, கேன் வில்லியம்சன் தலைமையில் ராஸ் டெய்லர், ட்ரெண்ட் போல்ட், கப்தில் போன்ற சிறப்பான வீரர்களை கொண்டுள்ளது. டெய்லருக்கு கடைசி உலகக்கோப்பை என்பதால் அவரது ஆட்டம் சிறப்பாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் குப்தில், வில்லியம்சன், மன்ரோ, லாதம் ஆகியோரும் துடுப்பாட்டத்தில் மிரட்டக் கூடியவர்கள். பந்துவீச்சிலும் மிரட்ட டிம் சௌதி, சோதி, போல்ட் ஆகியோரும் உள்ளனர்.

• ஹோலி தலைமையில் சிறப்பான ஃபார்மில் உள்ள இந்திய அணியும் உலகக் கோப்பையை கைப்பற்றும் கணிப்பில் உள்ளது. டோனிக்கு கடைசி உலகக்கோப்பை தொடர் என்பதால் அவரை வெற்றியுடன் வழியனுப்ப சக அணி வீரர்கள் முற்படுவார்கள். ரோஹித் ஷர்மா, ஷிகர் தவான், ராகுல் போன்ற துடுப்பாட்ட வீரர்களும், ஹர்திக் பாண்ட்யா, விஜய் ஷங்கர், ஜடேஜா போன்ற ஆல்-ரவுண்டர்களும், புவனேஷ்வர்குமார், பும்ரா, ஷமி போன்ற பந்துவீச்சாளர்களும் மிரட்டத் தயாராக உள்ளனர். இந்திய அணியும் சமபலத்துடன் இருப்பதால் கோப்பையை வெல்லும் வாய்ப்பு பெரிய அளவில் உள்ளது.

• உலகக்கோப்பையில் எப்போதும் ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலிய அணியில், தற்போது தடை நீங்கி ஸ்மித் மற்றும் வோர்னர் இணைந்துள்ளனர். பின்ச் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியில் அனுபவ வீரர் ஷான் மார்ஷ், அதிரடி வீரர் மக்ஸ்வெல், ஸ்டார்க் ஆகியோர் இருப்பதால் அவுஸ்திரேலிய அணிக்கு கோப்பையை வெல்லும் வாய்ப்பு உள்ளது.

• டாப்-8 நாடுகளை தவிர்த்து, திடீரென மிரட்டக் கூடிய அணியாக பங்களாதேஷ் உள்ளது. மோர்தசா தலைமையிலான அணி, சமீப காலமாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. முன்னதாக நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடரை கைப்பற்றி அசத்தியது. எனவே, இந்த தொடரில் அந்த அணி ஆச்சரியம் அளிக்கும் வகையில் எந்த அணியை வேண்டுமானாலும் வெளியேற்றலாம்.

• பங்காதேஷ் அணியைப் போல் திடீரென மிரட்டக்கூடிய அணியாக ஆப்கானிஸ்தான் அணி உள்ளது. அந்த அணியில் இளம் வீரர் ரஷீத் கான் சர்வதேச போட்டிகளில் கலக்கி வருகிறார். துடுப்பாட்டத்தில் முகமது நபி, அஸ்கார் ஆப்கன் ஆகியோர் சிறப்பாக செயல்படுபவர்கள். இந்த அணியும் உலகக்கோப்பையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

### இங்கிலாந்து இளவரசி முன்பு

## பாரம்பரிய உடையில் கலக்கிய பாகிஸ்தான் அணித் தலைவர்



உலகக்கோப்பை கிரிக்கெட் தொடக்க விழாவில், பிரித்தானிய ராணியின் முன்பு பாகிஸ்தான் அணித்தலைவர் அணிந்து வந்த உடை பெரிய விமர்சனத்திற்குள்ளாகி உள்ளது.

12 ஆவது உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் துவக்க விழா லண்டனில் நடைபெற்றது. மிகவும் எளிமையான முறையில் நடந்த இந்த விழாவில், பிரித்தானிய மகாராணி எலிசபெத் கலந்துகொண்டார்.

பக்கிங்ஹாம் பேலஸில் உள்ள மாலில் இவ்விழா நடைபெற்றது. இந்தத் தொடரில் கலந்துகொள்ளும் 10 அணிகளின் தலைவர்களும் கோட் சூட் உடையில் ராணி எலிசபெத்தை சந்தித்தனர்.

அதன் பின்னர் அவருடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். ஆனால், பாகிஸ்தான் அணித் தலைவர் சர்ப்ராஸ் அகமது அணிந்து வந்த உடை தான் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்குக் காரணம், அவர் மட்டும் பாகிஸ்தானினின் பாரம்பரிய உடையான பைஜாமா அணிந்து, அதன் மேல் கோட் அணிந்திருந்தார். எல்லா நாட்டு அணித் தலைவர்களும் கோட் சூட்டில் வந்திருக்கும்போது, இவர் மட்டும் ஏன் இப்படி உடை அணிந்தார்? என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சிலர் அவரது உடையை கிண்டல் செய்த நிலையில், சிலர் அவர்கள் நாட்டின் பாரம்பரிய உடையைத்தான் உடுத்தி இருக்கிறார் என்று ஆதரவாகவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க)

## எமது ஆக்ரோசம் தொடரும் மேற்கிந்திய தீவுகளின் தலைவர்



பாகிஸ்தானுடன் விளையாடியது ஒரு போட்டியா. இனிவரும் போட்டிகளில் எங்களின் ஆக்ரோசமான ஆட்டத்தைப் பார்ப்பீர்கள் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் ஜேசன் ஹோல்டர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் லீக் போட்டியில், பாகிஸ்தான்-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின. முதலில் ஆடிய பாகிஸ்தான் 21.4 ஓவரில் 105 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 13.4 ஓவர்களிலேயே இலக்கை எட்டியது.

கிறிஸ்கெய்ல் அதிரடியாக 50 ஓட்டங்கள் விளாசினார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆட்டம் ஒரு தரப்பாக அமைந்தது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. இந்நிலையில் வெற்றி குறித்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவன் ஹோல்டர் கூறுகையில்.

'எங்களைப் பொறுத்தவரை இது ஒரு போட்டியே அல்ல. எங்களின் ஸ்டைல் இப்போது ஆக்ரோசமாக களத்தில் விளையாடுவது தான். எங்களுக்கு எதிராக எந்த அணி விளையாடினாலும், உச்சபட்சமாக ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெறுவோம். சில நேரங்களில் விக்கெட்டுகளையும் வீழ்த்துவோம்.

இன்றைய நவீன கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸ் முழுவதும் எதிரணியின் விக்கெட்டுகளை வீழ்த்தாமல், எதிரணியை நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாது. ஆதலால், தொடக்கத்தில் ஓட்டங்களைக் கொடுத்தாலும் விக்கெட்டுகளை வீழ்த்துவோம். நாங்கள் தொடர்ந்து ஆக்ரோசமாக இருக்கவே விரும்புகிறோம். (க)

## வெற்றியுடன் தொடங்கியது மகிழ்ச்சி இங்கிலாந்து தலைவர் பூரிப்பு




உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி தொடரை வெற்றியுடன் தொடங்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று இங்கிலாந்து தலைவன் இயான் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடந்து வரும் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் முதல் லீக் போட்டியில், இங்கிலாந்து அணி 104 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது. அரைச்சதம் விளாசியதுடன், விக்கெட்டுகளை வீழ்த்தி, அபாரமான கட்ச் பிடித்த இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்நிலையில், வெற்றி குறித்து பேசிய இங்கிலாந்து தலைவன் இயான் மோர்கன் கூறுகையில், 'இந்த ஆட்டத்தில் நாங்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டோம். நாங்கள் பெரிய ஸ்கோர் குவிக்க விரும்பினோம்.

ஆடுகளத்தின் தன்மை எங்களது திட்டத்தை செயல்படுத்த அனுமதிக்கவில்லை. இருப்பினும் அனுபவத்துடன் கூடிய சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். இத்தகைய ஆட்டத்தை விளையாட கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

பென் ஸ்டோக்ஸ் பட்டிங், பந்துவீச்சு மட்டுமன்றி பீல்டிங்கிலும் சிறப்பாக செயற்பட்டார். பெலக்வாயோ அடித்த பந்தை பென் ஸ்டோக்ஸ் அருமையாக கட்ச் செய்தார். மேட்ச் வின்னரான அவர் மற்ற வீரர்களுக்கும் உத்வேகம் அளிக்கக் கூடியவர்.

எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசினர். போட்டித் தொடரை வெற்றியுடன் தொடங்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது' என தெரிவித்துள்ளார். (க)

## காணாமலாக்கப்...

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று மதியம் தமிழரசுக் கட்சியின் யாழ் அலுவலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியாவில் இருந்து வந்த சிலர் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக, கட்சியின் வாலிபர் முன்னணியுடன் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது. இப்போராட்டம் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்றுவரை காணாமல் ஆக்கப்படடவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பதை போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர். மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை என குற்றம் சாட்டினர். இலங்கை அரசின் சுக போக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோடி ரூபாய் பணத்துக்கு விலை போய்விட்டனர். இவர்கள் மக்கள் நலனில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எனவே இவர்கள் பதவிகளை துறக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்: காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கத்துடன் கதைக்க ஏன் தயங்குகின்றீர்கள்?. உங்களால் தீர்வு பெற இயலாது என்றால் புதிய தலைமுறைக்கு வழிவிடுங்கள், ஏன் போர்க்குற்றவாளிகளை பாதுகாத்து கால அவகாசம் கொடுத்தீர்கள் போன்ற வர்சகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-3)

## தனியார் பேருந்...

ள்ளது.

குறித்த பேருந்து தரிப்பிடமற்ற பகுதியில் சடுதியாக தரிக்க முற்பட்டபோது, அதிக வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களுமே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் சடலம் கிளிநாச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ம-312)

## ரணிலும் அவரது...

ள்ளார். அவருடன் அமைச்சர்கள் குழுவும் விஜயம் செய்துள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று மாலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்த பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவினருக்கு யாழ். கோட்டையில் வரவேற்பளிக்கப்பட்டது.

மேற்படி வரவேற்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதனிடையே, பிரதமரின் யாழ். விஜயத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதமர் தங்கியுள்ள இடம் மற்றும் அவர் கலந்துகொள்ளும் நிகழ்வுகள் இடம்பெறுகின்ற பிரதேசங்களிலும் பெருமளவிலான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு கடும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அதிகாரப் பகிர்வு...

களை ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையாக வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கேள்வி - உங்களது நாட்டில் தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்ற பிரதேசங்களில் அதிகாரப் பகிர்வு விடயம் மந்தகதியாக இருப்பதற்கு காரணம் என்ன?

எமது அரசியல் யாப்பிற்கு அமைய 1987 ஆம் ஆண்டிலிருந்தே நாம் அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றோம். அதற்கமைய அரசியலமைப்பின் 13வது சீர்திருத்தத்தின் மூலம் பெருமளவு அதிகாரங்களை பகிர்ந்தளித்திருக்கின்றோம். ஆகையால் தற்போது தேவைப்படுவது இன்னும் மேலதிக அதிகாரங்களைப் பகிர்வதை விட 13வது சீர்திருத்தத்திற்கு அமைவாக உரிய முறையில் செயற்படுத்துவதே ஆகும். காரணம் வடக்கிலும் தெற்கிலும் சாதாரண மக்களின் கோரிக்கையாக தமக்கு சிறந்ததோர் பொருளாதார நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதே இருந்து வருகின்றது. ஆகையால் இங்கே நீங்கள் சுட்டிக் காட்டிய நிலைமை எமது நாட்டில் இருப்பதாக நான் உணரவில்லை என்றார். (ம-3)

## முல்லை விசுவம...

தொட்டியடி இந்தியன் வீட்டுத்திட்ட பகுதியில் வசித்துவரும் 26 வயதுடைய த.கிருசாந்தினி என்ற ஒருபிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை உறவினர்கள் சென்று பார்த்த போது இவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (ம-281)

## செப்ரெம்பரில்...

வழங்கிய செவ்வியிலேயே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டின்போது ஜனாதிபதி வேட்பாளர் குறித்த விபரம் அறிவிக்கப்படும்.

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அறிவிக்குமாறு அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலும் கட்சித் தலைவர்கள் என்னிடம் வலியுறுத்தினர்.

தமது வேட்பாளர் யார் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் அறிவிக்கவில்லை. எனவே, உரிய நேரத்தில் உரிய வகையில் எமது தரப்பு அறிவிப்பு வெளியாகும் என்றும் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நாட்டிற்குள் அநு...

மாதம் உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதல்களை தொடர்ந்து வெளிநாட்டு படைகள் இலங்கைக்குள் வர முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்கர்கள் மற்றும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இணைந்து வெளிநாட்டு படையினரை இலங்கைக்குள் வர அனுமதிக்க வேண்டாம் என்று தெரிவித்திருந்தனர்.

இந்நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு இன்று கருத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து சாட்சியமளிக்கத் தயார்

## ஞானசார தேரர் தெரிவிப்பு

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் கொடூரமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சாட்சியமளிக்க தயார் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், போலியான ஊடகக் கண்காட்சிகளை நடத்தாது உண்மையான முறையில், சாட்சி விசாரணைகளை நடத்தினால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த முக்கிய விடயங்களை அம்பலப்படுத்த தயார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவு குழுவில் சாட்சியம் வழங்க முடியும்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சாட்சி விசாரணைகள் வெறும் கண்துடைப்பு நாடகம். இந்த சாட்சி விசாரணைகளால் புலனாய்வுப் பிரிவினர் மேலும் பலவீனமடைவர்.

இந்தப் பிரச்சினையை மெய்யாகவே தீர்க்க விரும்பும் தரப்பிடம் என்னிடம் உள்ள தகவல்களை வழங்கத் தயார்.

புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களை பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அழைத்து ஊடகங்களின் முன்னிலையில் விசாரணை செய்வது இளம் தம்பதியினர் முச்சந்தியில் வெட்ட வெளியில் தேனிலவை அனுபவிப்பதற்கு நிகரானது எனவும் அவர் இதன்போது விமர்சித்துள்ளார். (ம-3)

### கடந்த கால மனக்கசப்புக்களை மறந்து

# எதிர்கால நலன் குறித்து சிந்திப்போம்: சிறீதரன் எம்.பி

நாட்டிலே ஈழத்தமிழர்களும், இஸ்லாமியத் தமிழர்களும் ஒன்றிணைந்து, கௌரவமாக வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்பதே எம்முடைய தேவையாக இருக்கின்றது. அதனைக் கருத்திற்கொண்டு தான் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் நாங்கள் தீர்மானம் எடுப்போம். கடந்தகால மனக்கசப்புக்களை மறந்துவிட்டு, எதிர்கால நலன் குறித்து சிந்திப்பதெனில் இதுவே எமது தெரிவாக இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் தமது நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்கவில்லை. குறித்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பாதுகாக்கும் விதமாக கூட்டமைப்பு செயற்படும் என்று எதிரணியினர் தெரிவித்துவரும் நிலையில், இதுபற்றி வினவிய போதே சிறீதரன் எம்.பி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இணைந்த வடக்கு - கிழக்கு என்ற வார்த்தையை நாங்கள் பயன்படுத்துகின்றோமெனில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்களின் ஆதரவும் எமக்கு தேவையாகும். வடக்கு, கிழக்கு மக்களின் நலனைக் கருத்திற்கொள்வதாக வெறுமனே வார்த்தைகளில் கூறிவிட்டு, முஸ்லிம் மக்கள் குறித்து சிந்திக்காமல் இருப்பது தவறாகும்.

அந்தவகையில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் நாங்கள் ரிசாத் பதியுதீன் என்ற ஒரு தனிநபர் குறித்து சிந்திக்கவோ, கவனத்திற்கொள்ளவோ மாட்டோம். மாறாக அனைத்து முஸ்லிம் மக்களின் நிலை குறித்து சிந்தித்து, அவர்களின் நலன் கருதியே இவ்விடயத்தில் தீர்மானம் மேற்கொள்வோம் என்றார். (ம-3)

## ஹிஸ்பு...

சாகர தேரர் தலைமையிலான பிக்குகள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், இந்த கோரிக்கைகளை எழுத்து மூலம் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்தனர். (ம-3)

## மரண அறிவித்தல்



**இரத்தினம் ஶ்ரீஸ்கந்தராசா (சிறி)**

*அல்லியவத்தை கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் ஶ்ரீஸ்கந்தராசா அவர்கள் நேற்று (01.06.2019) சனிக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், யோகராசா, காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, கனகலிங்கம் மற்றும் உதயராசா (பிரான்ஸ்), பிறேமா (ஜேர்மன்), சிவராசா, சிலோனா, அற்புதராசா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புனிதவதி, சித்திராதேவி, ஆனந்தி, ஜெயராசா, சந்திரா, சற்குணராசா, தர்சினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2019) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.* (சி-6527) **தகவல்: குடும்பத்தினர்.**

சுபிரி வாசனா
திகதி 2019/06/01
சீட்டிழுப்பு இலக்கம் 1430
எழுத்து 05 வெற்றி இலக்கம் 08 15 24 62 43 68
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01-06-2019
சீட்டிழுப்பு இலக்கம் 944
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 0 7 3 9 6 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 2135
ஆங்கில எழுத்து Q வெல்லப்பட்ட இலக்கங்கள் 09 14 17 39
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 01/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 188
ஆங்கில எழுத்து T வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 09 24 41
தேசிய லொத்தர் சபை

## பலாலியில் கண்...

னரால் சிரமதானம் செய்யப்படுவது வழமை. அதேபோன்று நேற்றும் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. அதன்போது கல் ஒன்றை இராணுவத்தினர் அகற்ற முற்பட்ட போது. அந்தப் பகுதியில் கண்ணி வெடி ஒன்று வெடித்தது.

அதன்போது சிப்பாய் ஒருவர் இடுப்புக்கு கீழ் பகுதி முற்றாக சிதைவடைந்த நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று இராணுவப் பதில் பேச்சாளர் மேஜர் ஜெனரல் றொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பலாலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-3-9-10-101)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-6232)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

காணி விற்பனைக்கு
திருநெல்வேலி பனிக்கர் லேனில் நல்ல சூழமைவில் உள்ள 1 3/4 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
உடனடித் தொடர்புகளுக்கு:-
071 449 7871

விற்பனைக்கு
சித்தன்கேணி பிள்ளையார் கோவில் வீதியில் இரண்டு பரப்புக் காணி, நான்கு பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0711173291
(9014)

PERSONAL CLASS
(விசேட வகுப்புக்கள்)
தரம்-9,10,11 மாணவர்களிற்கான கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்
தொடர்பு- 0761570107

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை
(C-6493)

SUBRA
சித்தன்கேணி
2019 A/L இறுதிக்கருத்தரங்கு
ஆரம்பம் 05.06.2019 புதன்
கணக்கீடு: V.P.விஸ்வறாஜ் BBA (ACC - Spl)
நேரம்: காலை 6.15 – 8.30
வணிகக்கல்வி: P.S.றிசி (BBA (Hons) Hrm. Spl, PGDE)
ஆரம்பம் 05.06.2019 புதன்
நேரம்: காலை 8.45 – 10.30


# மரண அறிவித்தல்

மலர்வு 21 . 10 . 1943



உதிர்வு 30 . 05 . 2019

## திருமதி மகாலிங்கம் சாரதாதேவி

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சாரதாதேவி அவர்கள் கடந்த (30.05.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், மகாலட்சுமி, சண்முகலிங்கம் (லண்டன்), சற்குருநாதன் (சுவிஸ்), நாகதீபன் (அமெரிக்கா), நாகரூபன் (லண்டன்) நந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற விவேகானந்தா மற்றும் வாசுகி, நிலோஜினி, யாழினி, சோபா, ஜெயகணேசன் ஆகியோரின் அன்பு மாமியும், தங்கரத்தினம், சரோஜினிதேவி, இந்திராணி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராசேந்திரம் (சண்முகம்), மகேந்திரராணி, மாலினி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகையா, நீதிராசா, பாலசுப்பிரமணியம், கனகரத்தினம், அமிர்தகௌரி, காலஞ்சென்ற சிவசம்பு, சிவலிங்கம், பிரியநாதன், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தங்கராஜா, மனோகரி, மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதீஸ்குமார்- ராதிகா, சுரேசன்- ரோசி, யதுசானி, பானு, சாருஜா, கஜராம், சங்கவி, அக்ஷ்சதா, அச் சுதன், சபரீசன், பிரணவன், சொரூபன், இந்துஜன், கயானன், அபிநயா ஆகி யோரின் பேர்த்தியும், சங்கீர்த், சாரங்கன், அஷ்வினி, ஆருக்ஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில். (9010)

தகவல்:
குடும்பத்தினர்

## தனி அரசாங்க...

ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியுள்ளதாவது, எமக்கு அரசாங்கம் அமைந்தாலும், எமக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது முட்டாள் தனத்தினால், எமக்கு எதிரான தரப்பினரையும் நாம் இணைத்துக் கொண்டோம். இவர்கள்தான் எமக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். அனைத்து செயற்பாடுகளின்போதும் எம்மை வீழ்த்தினார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினரால் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ள முடியாத நிலைமை கடந்த காலங்களில் ஏற்பட்டது.

எனினும், ஒக்டோபர் மாத அரசியல் சூழ்ச்சிக்குப் பின்னர், தற்போதைய நிலைமையில் எமக்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க முடியுமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, அடுத்த பொதுத் தேர்தலுடன் நாம் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கமொன்றையே ஸ்தாபிப்போம் என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன் என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (ம-3)


சிங்கள மொழி கற்பிக்கப்படும்
பேச, எழுத, வாசிக்க பிரத்தியேகமான முறையில் சிங்கள மொழி கற்பிக்கப்படும்
தொடர்புகளுக்கு
0750480935

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ, 1988ம் ஆண்டு பிறந்த, 6 அடி உயரம் உடைய, சுவாதி நட்சத்திரம், செவ்வாய் தோசம் அற்ற, கிரக பாவம் 06, CIMA, BSc முடித்த கொழும்பில் தனியார் நிறுவனத்தில் பிரதம நிறைவேற்று கணக்காளராக வேலை செய்யும் மணமகனுக்கு உள்ளூர் மணமகள் தேவை.
0750284640
(சி-6560)

DMI Jaffna பொருளியல் A/L 2019 கருத்தரங்கு
ஆரம்பம் (3.6.2019) திங்கள் - 3 மணி
புதன்: 10 - 2 மணி
(C-6551)
வெளிமாணவர்களும் பங்கு கொள்ளலாம் S.S. சிறி (அடுத்த நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்)

கடை விற்பனைக்கு உண்டு
மானிப்பாய் றவுண்டப்போட் சந்தியில் மருந்துக்கடை, புடவைக்கடை, நகைக்கடை இவை மூன்றும் நடத்தக் கூடிய வகையில் சகல வசதிகளுடன் இருக்கின்றது.
தொடர்புகளுக்கு:
0761119180, 0756434535
வைபர்: 0016478919714
(8998)

வேலை ஆட்கள் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல்யமான நியூ லலிதா நகைக்கடைக்கு படித்த வேலை ஆட்கள் தேவை.
இடம்: கிளிநொச்சியில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி முன்பாக உள்ள நியூ லலிதா நகை மாடம்.
நேரம்: புதன்கிழமை (05.06.2019) காலை 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். (9016)

காணிகள் விற்பனைக்கு
கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் 5 1/2 பரப்பு காணி நன்நீர் கிணற்றுடன் விற்பனைக்குள்ளது. மூன்று துண்டுகளாக பிரித்துக் கொடுக்கப்படும். மற்றும் சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் திருமண மண்டபம், ஹோட்டல், தொடர்மாடி அமைக்கக்கூடிய 5 பரப்பு காணியும் விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு: 076 863 7930, 077 790 5438, 021 222 7246
(9012)

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான Deutsch மொழியை இலகுவான வழியில் S.கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது.
புதிய வகுப்புக்கள் 06.06.2019 அன்று ஆரம்பிக்கப்படுகின்றது.
ஆரியகுளம் சந்தி (புத்த விகாரைக்கு எதிரே) முதலாம் மாடி.
தொடர்புகளுக்கு: 077 970 7322
(9013)


## கட்டா...

பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து, அமைச்சர் ரிசாத் பதியூதீன், ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது என்றும் இதன் ஒரு அங்கமாக, அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் ஆனால், அது இன்னும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ம-3)

## குரு...

சன்ன ஜயசுமன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் செயற்பாடுகளின் அடிப்படையில் பார்க்கும் போது, குறித்த மருத்துவர் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்


# வலம்புரி

## சங்குநாதம்

நாதம் 219

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 02.06.2019 | தொலைபேசி : 021 222 3378



# அண்டை நாட்டு உறவு

# பதற்றம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

## இந்துசமயத்தை ஏமாற்றிய டாக்டர் ஜெஹான் பெரேரா

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் எழுந்தார். இலங்கை பௌத்த நாடல்ல, அது ஓர் இந்துத் தமிழ் நாடு என்று முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியதற்கு நாங்கள் நன்றி கூறித் தீர்மானம் நிறைவேற்ற வேணும்.

(பண்டிதர் பரமலிங்கம் அதிரடியாகக் கூறினார் பண்டிதரின் கருத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்ட ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் எழுந்து நின்று நன்றித் தீர்மானம் நிறைவேற்றி அமர்ந்தனர். இதனைத் தொடர்ந்து மூப்பர் குரல் கொடுத்தார்.)

**மூப்பர்:** இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று சிங்களப் பேரினவாதம் கூறுகிறது. சில பௌத்த தேரர்களும் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளும் கூறுகின்ற கருத்துக்களைக் கேட்டால் தலை வெடிக்கும்.

(இவ்வாறு மூப்பர் கூறியதும் ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் உசார் அடைந்தவர்களாக தங்கள் நெற்றிகளை உயர்த்திக் கொண்டனர்).

மூப்பர் கூறிய கருத்தைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில், என்ன மூப்பர் சொல்லுறியள் கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:** ஏன் கங்காணியார் நீங்கள் பேப்பர் பார்க்கிறதில்லையோ? இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேற வேணும் எண்டல்லோ சொல்லுகினம்.

**விதானையார்:** அவர்கள் அப்பிடிச் சொல்லுகினம். ஆனால் நாங்கள் எங்கட மண்ணில மாட்டிறைச்சிக் கடை வைக்கிறதுக்கு அனுமதி கொடுக்கிறம்.

**பண்டிதர்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் சரியானது. இது சிவபூமி. எங்கட நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா கூறியது போல இலங்கை ஓர் இந்துத் தமிழ்நாடு. காலசூழ்நிலையில சில பல மதங்கள் ஊடுருவி மத மாற்றம் செய்திருக்கலாம். அதற்காக எங்கட பூர்வீகத்தை நாங்கள் கைவிட முடியாது.

**சாத்திரியார்:** விதானையார் இப்ப நாங்கள் என்ன செய்ய வேணுமெண்டு சொல்லுறியள்.

**விதானையார்:** தமிழர் தாயகத்தில் மாட்டிறைச்சிக் கடைக்கு முற்றாகத் தடை விதிக்க வேணும். இல்லை எங்களுக்கு மாட்டிறைச்சிக்கடை தேவையெண்டு யாரேனும் கூறினால் அவர்களுக்கு சரியான விளக்கம் கொடுக்க வேணும்.

**சிறாப்பர்:** இதுகளெல்லாம் இனிச் சாத்தியப்படுமோ?

**விதானையார்:** ஏன் சாத்தியப்படாது. எங்கட இந்து இளைஞர்கள் ஒன்று திரண்டால் இந்து சமயத்தைப் பாதுகாக்கிறது ஒரு பெரிய வேலையல்ல.

**கங்காணியார்:** அண்டை நாடான இந்தியாவில திரும்பவும் பிரதமராக நரேந்திரமோடி வந்திருக்கிறார். இலங்கையிலும் சிவசேனை இயக்கத்தைப் பெருமெடுப்பில் உருவாக்க வேணுமெண்டு அவரிட்ட கோரிக்கை விடுத்தால் எல்லாம் சரியா வரும்.

**வாத்தியார்:** மருதனார் மடம் சிவன் கோயிலிலை பூசைசெய்த அர்ச்சகர் ஒரு முஸ்லிமாக மாறியவர் எண்டு செய்தி வந்ததல்லோ. முஸ்லிமாக மாறின ஒருவர் சிவபூசை செய்திருக்கிறார் எண்டால் எங்கட இந்துமத குருமார்கள் என்ன செய்யினம்.



**பண்டிதர்:** இந்துக் குருமார் தங்கட குடும்பப் பொருளாதாரத்தைப் பார்க்கிறது எங்க? சைவசமயத்தைப் பாதுகாக்கிறது எங்க?

**சாத்திரியார்:** ஏன் பண்டிதர் அப்பிடிச் சொல்லுறியள். சர்வமதப் பேரவையில எங்கட இந்து அமைப்புகளும் இருக்கினம் தானே.

**பண்டிதர்:** சர்வமதப் பேரவையில இருக்கிறதோ. ஏனைய சமயங்கள் தங்கட அலுவல்களைச் செய்ய இவையளைக் கறிவேப்பிலையாகப் பயன்படுத்துகினம் பாருங்கோ. இவர்களுக்கும் வேறு இடம் கிடைக்காததால சர்வமதப் பேரவையில இருக்கினம்.

ஆனால் டாக்டர் ஜெகான் பெரேரா இந்துசமயத்தைத் தட்டி விட்டிட்டு கத்தோலிக்க மதத்தின்ர அமைப் போட சேர்ந்து வடக்கில சில திட்டங்களைத் தயாரிக்கப் போறாராம்.

**சிறாப்பர்:** அட சங்கதி அப்படியோ.

**கங்காணியார்:** இப்ப இந்து அமைப்புகள் என்ன செய்யப் போகினமாம்.

**பண்டிதர்:** சர்வமதப் பேரவையில இருந்து விலகப் போவதாகக் கூறுகினம்.

**சாத்திரியார்:** இவர்களாவது விலகிறதாவது. ஒரு அமைப்பு விலகினால் இன்னொரு இந்து அமைப்பு அங்க இணைந்து கொள் ளும். ரோசம் கெட்டவியள் தானே.

**சிறாப்பர்:** சர்வமதப் பேரவையில இருந்து விலகிப் போட்டு என்னதான் செய்யிறது.

**விதானையார்:** அப்பவே எங்களுக்குத் தெரியும். சமாதானம், நல்லிணக்கம் என்ற பெயரோட டாக்டர் ஜெகான் பெரேரா வாறார். ஆனால் அவர் ஒரு குறித்த மதம் சார்ந்துதான் செயற்படுவார். அவரின்ரை நோக்கம் இதுதான் என்பது இப்ப தெரியுதுதானே .

**வாத்தியார்:** சரி... சரி... நாங்கள் பலதையும் பத்தையும் ஆராயிற கூட்டம். மதங்கள் பற்றி இழுத்தால் அது கூடாது. எங்கட சமூகத்துப் பிரச்சினைகளை ஆராய்வம். அது புண்ணியமாகவாவது இருக்கும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் கங்காணியார் கார்த்திகேயன் எழுந்தார்.

**கங்காணியார்:** வடமராட்சி கரணவாய் கிழக்கில கேபிள் வயர் மூல மாக மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் இறந் தவர்களல்லோ. அவர்கள் இறந்து ஒரு வருடமாயிற்று. இன்னமும் அந்தக் குடும்பத்திற்கு எந்த இழப்பீடும் கிடைக்கவில்லையாம்.

**மூப்பர்:** என்ர கடவுளே! தந்தையும் மகனும் இறந்து போனால் அந்தக் குடும்பம் எவ்வளவு தூரம் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கும். இதுபற்றி எங்கட அனர்த்த முகாமைத்துவம் சிந்திக்கிறதில்லைப்போல.

**வாத்தியார்:** இப்ப வடக்கிற்கு வந்திருக்கிற ஆளுநர் ஒரு தமிழர். பொதுவில எல்லா விடயங்களிலும் அவர் அவதானம் செலுத்திறதைக் கவனிக்கக் கூடியதாக இருக்குது.

எனவே கரணவாய் கிழக்கில சட்டவிரோத கேபிள் இணைப்புக் காரணமாக மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் உயிரிழந்த அந்தக் குடும்பத்திற்குரிய இழப்பீடுகள் கொடுக்கப்பட வேணும். அந்தக் குடும்பத்தின் அவலநிலையை ஆளுநர் நேரில் சென்று பார்த்தால் கூட தகும்.


இழப்புகளை அனுபவிக்கிற குடும்பங்களுக்கு இந்தச் சமூகமும் அரச கட்டமைப்புகளும் பக்கதுணையாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது என்பதை நிரூபிக்க வேணும். அதுதான் அவர்களை ஆற்றுப்படுத்தும்.

இவ்வாறு வாத்தியார் கூற, இதனை ஒரு தீர்மானமாக நிறைவேற்ற வேண்டுமெனப் பண்டிதர் கோரிக்கை விட, அனைவரும் குறித்த தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

ஆலடியில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு தனது ஆதரவும் இருப்பதை உணர்த்துவது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழர்களின் தொல்லியல் சான்றுகளை மாற்றியமைக்கின்ற கொடுமையின் உச்சம்



சிங்கள ஆட்சியாளர்களின் முழுமையான நோக்கம் தமிழ் மக்களை பலவீனப்படுத்துவதாகும். எனினும் இந்த உண்மையை தமிழ் அரசியல் தலைமை உணர்ந்து கொள்ளவில்லையா? அல்லது உணர்ந்து கொள்ளாதது போல் நடிக்கிறதா? என்பதுதான் புரியாமல் உள்ளது.

எதுவாயினும் இன்றைய தமிழ் அரசியல் தலைமையை அரசாங்கம் கொள்வனவு செய்துவிட்டது என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

இதன்காரணமாக தமிழர் தாயகத்தில் நடக்கின்ற நிட்டூரம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமை குரல் கொடுக்கப் போவதில்லை என்பது உறுதி.

இவ்வாறு தமிழ் அரசியல் தலைமை அரசின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்ற வேளையில், தாம் செய்யவேண்டிய அத்தனை ஆக்கிரமிப்புக்களையும் செய்வதென சிங்களப் பேரினவாதம் முடிவு செய்துள்ளது.

இந்த ஆக்கிரமிப்பின் அடிப்படையில்தான் முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை அபகரிக்கின்ற முயற்சியிலும் கன்னியா வெந்நீரூற்றில் புத்தர் சிலையை அங்குரார்ப்பணம் செய்வதிலும் பெரும் பிரயத்தனங்கள் நடக்கின்றன.

ஆக, தமிழ்மக்களின் பூர்வீக வரலாறுகளைத் தமக்குரிய இடங்களாக மாற்றுகின்ற ஒரு பெரும் சதித்திட்டம் அரங்கேறுவதை நாம் அவதானிக்க முடியும்.

இதுதவிர, வரலாற்று உண்மைகளை மாற்றியமைத்து பௌத்த சிங்கள வரலாற்றுக்குச் சார்பாக எழுதுகின்ற கருமத்தில் சிங்கள வரலாற்றாசிரியர்கள் இரவு பகலாகச் செயற்படுகின்றனர்.

இதற்காக மாணவர்களின் வரலாற்றுப் புத்தகங்களில் பௌத்த சிங்களமும் சிங்கள மன்னர்களின் வரலாறுகளுமே இடம்பிடித்துள்ளன.

நம் தமிழ் வரலாற்றை தமிழ் மாணவர்களே கற்க முடியாத அளவிற்கு நிலைமை வந்துவிட்டது.





## தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டிய நேரமிது

இந்த அவலநிலையில் இருந்து விடுபடுவதற்கும் எங்கள் தமிழ் இனத்தின் பூர்வீக வரலாற்றை பதிவு செய்வதற்குமாக தமிழ் வரலாற்றைத் தமிழ் மாணவர்கள் கற்கின்ற வகையில் வரலாற்றுப் புத்தகங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற கருத்தை இவ்விடத்தில் பல தடவைகள் முன்வைத்தோம்.

எனினும் ஆனதொன்றுமில்லை. மாறாக சிங்கள வரலாற்றாசிரியர்கள் தாம் நினைத்தபாட்டில் தமக்குச் சாதகமாக வரலாறுகளை ஆக்கிக் கொள்கின்ற கொடுமை நடந்தாகின்றது. இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு தொல்லியல் திணைக்களமும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

தொல்லியல் சான்றுகளைப் பாதுகாத்தல் என்ற பெயரில் தமிழ் இனத்தின் வரலாறுகள் அழிக்கப்படுகின்ற அக்கிரமம் நடக்கும்போது, அதுபற்றி நம் இனம்; தட்டிக் கேட்கத் தயங்கினால், இந்த நாட்டில் தமிழினத்தின் இருப்பு என்பது கேள்விக் குறியாகிவிடும். பௌத்தத்தைப் பொறுத்தவரை பௌத்த தேரர்கள் அதற்காகத் தங்களை அர்ப்பணித்து நிற்கின்றனர்.

கத்தோலிக்கம் திருச்சபை என்ற பலமான அமைப்பினூடு துறவற சபைகளை ஸ்தாபித்து அவர்களூடு தங்கள் சமயத்தைப் பாதுகாக்கின்றன.

இஸ்லாமியம் பற்றிக் கூறவே தேவையில்லை. மார்க்கம் என்பது தான் ஒவ்வொரு இஸ்லாமிய மக்களினதும் வாழ்வு. ஆக, இந்து சமயம் மட்டும்தான் பழைய வரலாற்றுடன் காலம்கடந்து போகிறது. அந்தத் தொன்மையான வரலாறுகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கோசத்தை பலமாக எழுப்புவதற்கு இந்து சம யத்தில் ஒருபெரும் அமைப்பு இல்லை என்றாயிற்று.



இந்த ஆரோக்கியமற்ற சூழ்நிலையைப் பயன்படுத்துவதில் தமிழ் அரசியல் தலைமையில் இருக்கக் கூடிய ஒரு சிலர் ஈடுபட்டிருப்பதும் தெளிவாகிறது. எது எவ்வாறாயினும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை, பழைமையை, தொன்மையைப் பாதுகாக்கின்ற பெரும்பணி நமக்கு முன்பாக இருக்கிறது.

ஒவ்வொரு தமிழ் மகனும் தான் வதியும் ஊரின் பெருமையை, அங்கிருக்கின்ற வரலாற்றுச் சான்றுகளை, தொல்லியல் எச்சங்களைப் பாதுகாக்கத் தலைப்படவேண்டும்.

இல்லையேல் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழினம் இந்த நாட்டின் வந்தேறு குடிகள் என்பதாகக் கணக்கு முடிக்கப்படும்.

இலங்கையைப் பொறுத்தவரை இனிவரும் காலங்களில் பௌத்த பீடங்களின் அதிகாரம், ஆளுமை என்பன மேலோங்கி நிற்கும் என்பது சர்வநிச்சயம்.

இதற்குச் சான்றாக ஞானசாரதேரர், அத்துரலிய ரத்னதேரர், மட்டக்களப்பு சுமன ரத்னதேரர் போன்றவர்கள் களமிறங்கிப் போராடத் தலைப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் அரசியல்வாதிகளை உடனடியாகப் பதவி நீக்க வேண்டும், அவர்களைக் கைது செய்து விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் அத்துரலிய ரத்ன தேரர் கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை ஞானசாரதேரர் விடுத்த அறிக்கை ஒன்றில் இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யத் தவறினால், அந்தப் பணியை நாங்கள் செய்வோம் எனக் கூறியுள்ளார்.

ஆக, முஸ்லிம் இனத்திற்கு எதிராக பௌத்த பீடங்கள் கங்கணம் கட்டியுள்ளன. பௌத்த பீடங்களின் எச்சரிக்கையை ஆட்சியாளர்கள் உதாசீனம் செய்தால், அதன் விளைவு வேறுவிதமாக இருக்கும். எனவே இச்சந்தர்ப்பத்தில் இந்து அமைப்புக்கள்- தமிழ் மக்கள் தங்களை ஒற்றுமையினூடு பலப்படுத்த வேண்டும். இதுவே இன்றைய உடனடித் தேவையாக இருக்கும்.

திருநீலகண்டன்

# அன்பின் மகத்துவம்

பகைவனுக்கு அருள்வாய் என பாரதியார் கூறியுள்ளார். அன்பு என்பது வாழ்வின் வளர்ச்சி. ஒவ்வொரு நாளையும் அன்புடன் ஆரம்பித்து அன்பில் நிரப்பி, அன்போடு அந்நாளை கழிக்க வேண்டும்.

ஒரு கிராமத்தில் பெண்மணி ஒருவர் தன் வீட்டின் வாசலில் மூன்று பேர் நிற்பதைக் கண்டு அவர்களிடம் உங்களை எனக்கு தெரியாது. ஆனால் நீங்கள் பசியோடு இருப்பதை உணர்கின்றேன். உள்ளே வந்து உணவு உண்டு போகும்படி அழைத்தாள்.

அதற்கு அவர்கள் "தங்கள் கணவர் வீட்டிற்கு திரும்பி



வந்ததும் வருகிறோம்" எனச் சொல்லி திண்ணையில் உட்கார்ந்தார்கள்.

சிறுது நேரத்தில் அவளது கணவன் வந்ததும் விடயத்தை அறிந்து அவர்களை சாப்பிட அழைத்தார்கள். அப்போது அவர்கள் அன்பு, வெற்றி, செல்வம் என தங்களது பெயர்களைச் சொல்லி "நாங்கள் மூவரும் ஒரே நேரத்தில் உள்ளே வந்து உணவு உண்ணமாட்டோம்" என்று கூறினார்கள்.

உடனே அவ்வீட்டார் நாம் அன்பை முதலில் அழைத்து உணவு பரிமாறுவோம் என அன்பை அழைத்தார்கள். அப்போது அன்பு எழுந்து உள்ளே செல்ல மற்றைய இருவரும் எழுந்து அன்பைத் தொடந்தார்கள். அப்போது வீட்டார்கள் நாம் அன்பைத்தானே முதலில் அழைத்தோம் என்றார்கள்.

அதற்கு அவர்கள் "நீங்கள் செல்வத்தையோ அல்லது வெற்றியையோ அழைத்தால் மற்றைய இருவரும் பின்தங்கியிருப்போம். ஆனால் நீங்கள் அன்பை அழைத்தபடியால் அவர் போகுமிடமெல்லாம் நாங்கள் இருவரும் செல்வோம்" என்றார்கள். வாழ்க்கை என்பது ஒரு மகிழ்ச்சி. புன்னகையுடன் அதை வாழ்த்த வேண்டும். அன்பு ஒரு பொக்கிஷம். அதை எப்போதும் வைத்திருக்க வேண்டும். உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளையும் நேசிக்கும் மனம் பாரதியாரிடம் இருந்தது. மனிதனை மனிதனாக்குவது அன்பு. அன்பின் அடிப்படையில் ஏற்படும் ஜீவகாருண்யம், நேசம், பாசம்.

**"அற்ற குளத்தினறு நீர் பறவைபோல்**
**உற்றுழித்தீர்வா குறவல்லர் அக்குளத்தின்**
**கொட்டிய மாம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டியறுவா குறைவு"**

**ஔவையார்**

**-சிவனடியான்-**




# என் அன்பு அம்மா



வார்த்தைகள் இல்லாத வடிவம்
அளவுகோல் இல்லாத அன்பு
சுயநலம் காட்டாத முகம் என் "அம்மா"

அன்பு, அக்கறை, அரவணைப்பு, பாசம்
நேசம், தியாகம் என எல்லா
உணர்வுகளையும் ஒரே இடத்தில்
பெற முடிந்தால்
அது தான் உண்மையான வாழும்
கடவுள் என் "அம்மா"

நான் பார்த்த முதல் முகம்!
நான் பேசிய முதல் வார்த்தை!
நான் மறக்கவே முடியாத முதல் ஓவியம்!
என் "அம்மா"

வார்த்தைகள் இல்லாது பேசினேன்
கண்கள் இல்லாமல் ரசித்தேன்
காற்றே இல்லாமல் சுவாசித்தேன்
கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன்
என் தாயின் கருவறையில் மட்டும்

உலகில் ஏழு அற்புதங்கள்
இருப்பதாக சொல்வார்கள்
ஆனால் நான் கூறும் ஒரே ஒரு
அற்புதம் என் "அம்மா"

அம்மா அம்மா அம்மா!
அம்மா அம்மா அம்மா!

**ஜெ.கவிசாந்தன்,** தரம் 4, யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி, SOS சிறுவர் கிராமம், நல்லூர்.



**ந.அனுசியா,**
தரம் 3பி, கல்வியங்காடு.

ஆசிரியர்: "டேய் ராமு, இன்னும் பத்து நாளில் உலகம் அழியப்போகுதுன்னு வைச்சுக்கோ. அப்போ கடவுள் கிட்டே என்ன வேண்டிக்குவே?"

ராமு: "அன்னிக்கு ஸ்கூல் லீவு விடணும்னு வேண்டிக்குவேன் சார்"



"மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் வயசாகி இருக்கலாம்... அதுக்குன்னு பொண்ணுவீட்டுக்காரங்க இப்படிப் பேசக்கூடாது..."

"ஏன்...?"

"மாப்பிள்ளைக்கு என்ன போடுவீங்க...?" னு கேட்டா, "பல்செட் போட்றோம்" னு சொல்றாங்க!"








## கரும்பும் அரசியல்வாதிகளும் ஒன்று என்கின்றார்களே உண்மையா?

## காதல் கசந்தால் என்ன செய்யலாம்?

## ஜனாதிபதியும் பிரதமரும் இனியாவது ஒன்று சேர்வார்களா?

**சயன் — யாழ்ப்பாணம்**

**என்ன நம்மாளுகளின் சத்தத்தையே காணோம். எல்லோரும் ஊமையோ?**

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு கொடுப்பதா இல்லையா என்பதை பூப் போட்டுப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

பேச வேண்டிய இடத்தில் பேசாத பேச்சும் செய்ய வேண்டிய இடத்தில் செய்யாத செயலும் பின் பேசி, செய்து பயனேதும் இல்லை என்பதே எமது நிலைப்பாடு.

**தனுஸ் — உடுவில்**

**கரும்பும் அரசியல்வாதிகளும் ஒன்று என்கின்றார்களே உண்மையா?**

கரும்பு நீண்டு வளரக் கூடியது தண்ணீரை உறிஞ்சி அதை நல்ல சுவையாகத் தருகிறது. கல்வி என்பது நுனியில் இருந்து அடியை நோக்கி கரும்பை உண்பது போன்றது. ஆரம்பத்தில் கசக்கும் பின்பு நல்ல இனிப்பான சுவைதரும்.

இப்படி கரும்பின் பயன் சொல்லிக் கொண்டே போகலாம்.

கரும்பையும் அரசியல்வாதிகளையும் இணைத்துக் கூறிக் கொள்ளக் கூடியது ஒன்றே ஒன்று தான்.

கரும்பு நுனியில் கசக்கும், அடியில் இனிக்கும். அரசியல்வாதிகள் எந்தப் பக்கமும் கசப்பானவர்கள் அவ்வளவுதான்.

**வதனன் — யாழ்ப்பாணம்**

**காதல் கசந்தால் என்ன செய்யலாம்?**

வலையில் மீன் அதிகமாக சிக்கிவிட்டது. உடனே அதை உப்புத் தடவி கருவாடு போடுவார்கள் அல்லவா. அப்படித்தான் காதலும் கசந்தால் கருவாடு போடுங்கள். அப்போது தானே ஊருக்கே நாறும்.

**சங்கரசிவன் — வதிரி**

**ஜனாதிபதியும் பிரதமரும் இனியாவது ஒன்று சேர்வார்களா?**

ஒன்று சேரவேண்டும். இல்லையேல் அது இந்த நாட்டிற்கும் நல்லாட்சிக்கும் நல்லதல்ல. ஆனாலும் அவர்கள் ஒன்றுசேர்வது போலத் தெரியவில்லை. ஏனென்றால் நாளுக்கு நாள் இவர்கள் இடைவெளி அதிகமாகிக் கொண்டு போகிறது போலவே தெரிகின்றது.

எமக்குத் தீர்வு கிடைக்கப் போகின்றது என்று நாம் அதிகம் நம்பியது இந்த நல்லாட்சியை. அதிலும் ஏமாற்றம் என்றால் தமிழினம் பாவப்பட்ட இனம் என்பதில் தவறேதும் இல்லை.

**யனுசன் — ஸ்கந்தபுரம்**

**ரிசாத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியளிக்குமா?**

எதிர்க்கட்சி கொண்டு வந்திருக்கும் இந்தப் பிரேரணையில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவாகத் தெரியப்படுத்த வேண்டும். அதை விடுத்து கூட்டமைப்பு அவசரப்படாது ஆறுதலாக ஆழ்ந்து, சிந்தித்து முடிவெடுக்கும் என்ற பேச்சுக்கள் தேவையில்லை.

ரிசாத்தின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டமைப்பு ஆதரவு, ஆதரவு இல்லை என்ற இரண்டில் ஒரு பதிலையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் பதிலாக அல்ல.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**நிலா — சுழிபுரம்**

**வியாசருக்கு ஆண்டவன் பக்தி உண்டோ? ஆலயம் செல்வதுண்டோ?**

ஆண்டவனில் பக்தி கொண்டு ஆலயம் செல்வதால் மட்டும் மனிதன் பூரணம் அடைந்து விடுவான் என்பது பொய்யான விடயம்.

முதலில் மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும். ஆண்டவன் ஒன்றுதான். அவன் அன்பையும் கருணையையும் மட்டுமே விரும்புவான்.

சமூக மேற்தட்டு, கீழ் தட்டு என்கின்ற வேறுபாடுகளை அவன் சந்நிதியில் காட்டுவது அவனுக்கு இம்மியும் பிடிக்காது. அதைப் புரிந்து கொண்டால் சரி.

**பரமேஸ் — வதிரி**

**தமிழனைத் தமிழன் ஆளும் வரைக்கும் தமிழுக்கு விடிவு கிடைக்காதா?**

என்னது தமிழனைத் தமிழன் ஆள்வதா? அடப் போங்கடா. வடக்கின் முதலாவது முதலமைச்சர் என்ற பெருமையுடன் புனிதமான ஒரு நீதியரசரை கொண்டு வந்துவிட்டு அவர் நேர்மையாகச் செயற்படுவது பிடிக்காமல் அவரை சபையை நடத்த விடாது குழப்பம் கூச்சல் போட்டு நந்தவனத்திலோர் ஆண்டி எனப் பாட்டுப் பாடி நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொடுத்து முதுகில் குத்தும் கூட்டம் இருக்கும் வரை தமிழனைத் தமிழன் ஆள முடியாது. இது சத்தியம்.

**நேதாஜி — வதிரி**

**தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது என ஜனாதிபதி அடித்துக் கூறிவிட்டாரே?**

அன்புமிகு ஜனாதிபதி அவர்களே! தமிழ் மக்களாகிய எங்களுக்கு உங்கள் மேல் அதிக மதிப்பும் மரியாதையும் இருக்கின்றது. அரசியல் கைதிகளை விடுவிப்பேன் என்ற உங்களின் உறுதிமொழியை நம்பியே நாம் அனைவரும் ஒன்றிணைந்து உங்களுக்கு வாக்களித்தோம்.

தமிழ் மக்கள் எனக்கு வாக்களிக்காது விட்டிருந்தால் எனது கதை முடிந்திருக்கும் என நீங்களே கூறியிருந்தீர்கள்.

இப்போது சிறையில் வாடும் எம் உறவுகளை விடுவிக்க முடியாது என்றால் உங்களைப் பாதுகாத்த எங்களுக்கு நீங்கள் செய்யும் உபகாரம் இதுவா? சிந்தியுங்கள் ஐயா. எம் சொந்தங்களை விடுவியுங்கள் ஐயா. இதுமன்றாட்டமான வேண்டுகோள்.

**தர்ணிகா — கௌந்தில்**

**தெரிந்திருந்தும் குண்டுத் தாக்குதலை தடுக்கவில்லையே?**

தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஜனாதிபதியோ அப்படி எனக்கு எதுவும் அறிவிக்கவில்லை. எனக்கு தாக்குதல் தொடர்பில் ஏதும் தெரியாது என்று அடித்துக் கூறுகின்றார்.

யார் சொல்வது சரி, யார் சொல்வது தவறு என்பதை காலந்தான் பதிலைச் சொல்ல வேண்டும்.

இனியொரு முறை இப்படிப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் இருந்து எம்மக்களைக் காக்க அரசு முனைப்புடன் செயற்பட வேண்டும். அவ்வளவு தான்.

**சுதன் — குப்பிளான்**

**மக்களை உசுப்பேற்றிவிட்டு கூட்டமைப்பு உயிரோடு இருக்கப் பார்க்கிறதா?**

தம்பி சுதன், அவர்களுக்கு உசுப் பேற்றும் அரசியல் தாண்டா தெரியும்.

தெரிந்ததை அவர்கள் மக்களில் அப்ளே செய்கின்றார்கள். அதில் அவர்கள் வெற்றியும் கண்டார்கள், கண்டு கொண்டிருக்கின்றார்கள்.

இப்போது வாயை மூடிக் கொண்டு இருக்கின்றார்கள். ஏன் என்று தெரியவில்லை. ஆனால் தேர்தல் என்று வந்துவிட்டால் சும்மா செவிலு கிழியும். அப்படிப் பேசுவார்கள்.

**கோகிலன் — வரணி**

**பாடசாலைகளில் ஆண்கள் அணியும் நீளக் காற்சட்டை மேலங்கி போல பெண்களுக்கும் கொண்டு வந்தால் பெண் பிள்ளைகள் அனுபவிக்கும் பாதிப்பிரச்சினை தீர்ந்து விடுமல்லவா?**

எமக்குப் புரிந்து என்ன பயன் புரிய வேண்டியவர்களுக்குப் புரிய வேண்டுமே.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**



## பாலைவனத்து ரோஜாக்கள்

பா.கலாதேவி, சண்டிலிப்பாய்

பரந்தவெளியில்
பகல் இரவு தெரியாது
புல் இல்லை பூண்டுமில்லை
மரம் இல்லை செடியில்லை

காற்றின் வேகத்தின் அனல்
கொட்டும் வெப்பத்தால்
போட்ட சட்டையும்
வெப்பத்தால் உருகியதே

உயிருள்ள ஜீவன்கள்
எவற்றையும் அறியவில்லை

மனித சஞ்சார வாசம்
ஒரு துளியும் இல்லை

வேறு விலங்குகள் கூட
ஒரு துளியும் இல்லை
ஆங்காங்கே
மனற்குவியல்கள்
அருமையாக குவிக்கப்பட்டன

தென்றல் தரும் ரோஜாவாக
மனற்குவியல்
பாலைவனத்து ரோஜாக்கள்

### விவசாயி



உப்பு வியர்வைநிலத்தில் சிந்தி
வறுமையை ஒழிக்கப் போராடும்
புரட்சிக்காரன் விவசாயி

### அடையாள அட்டை

மனித இனத்தின்
உயிரின் முகவரி
அடையாள அட்டை

மா.செழியன், வேலணை-03

### மெழுகுவர்த்தி



விழி இல்லாமலே அழுது
தன்னை உருக்கி
ஒளியேற்றும் ஓர் விதவை
மெழுகுவர்த்தி

### நிலவு

இருண்ட
வான தேசத்தில் எழுந்த
தேசியக்கொடி நிலவு

## உண்மை

கற்றல் கற்பித்தல் நின்றது உண்மை
கடவுளையும் நம்ப மறுத்தது உண்மை
பிரபல தெருவெல்லாம் பேரடங்கியது உண்மை
ஊரெல்லாம் ஊரடங்கியது உண்மை

பல்லுயிர் இறைவனடி சேர்ந்ததும் உண்மை
பல்கலைக்கழக படலைகள்
பெரும்பூட்டிட்டதும் உண்மை
இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்ததும் உண்மை
இயற்கையும் கண்ணீர் வடித்ததும் உண்மை

அச்சத்தால் ஆண்டவனுக்கும்
அர்ச்சனைகள் மறுக்கப்பட்டது உண்மை
அநாதரவாய் பொருளது நம்மையும்
அநாதரவாக்கி விடுமோ என்றே
உள்மனம் உரைத்ததும் உண்மை

எதிரில் நிற்பவன் எதிரியா நண்பனா
உள்மனம் அறிய நினைத்ததும் உண்மை
பொது இடத்திற்கே செல்ல
கால்களும் தயங்கியதும் உண்மை

உயிர்த்த ஞாயிறில் உயிர் போனதும் உண்மை
ஆண்டவனுக்கும் குருதி
அபிஷேகம் நடந்ததும் உண்மை
உண்மை உண்மை இத்தனையும் உண்மை
உள்நெஞ்சம் உருக விரல்கள் வருடிய உண்மை

த.லக்ஸ்மன், நல்லூர்




## சொல்லிவிடு

செவ்வரத்தையே நீ
புலரும் பொழுதினிலே
மலருகின்றாய்
நானோ
புலர்ந்தும் புரைமல்
பதுங்கு குழியினுள்
புழுங்குகின்றேன்
உன் மீது
எனக்கு பொறாமைதான்
நீயோ
பூத்துச் சிரிக்கின்றாய்
நானோ
பதுங்கு குழியினுள்
அழுகின்றேன்
செல் மழை போல்
பொழிகின்றது
நீ உதவி செய்வாயா?
இறப்பனோ இருப்பனோ
தெரியவில்லை-நான்
கடவுளின் கழுத்தில்- நீ
மாலையாகும் போது
என் துயரங்களைச்
சொல்லிவிடு

ஜெ. உமாசுதன், அல்வாய்

## யாமென்ன செய்ய பரம்பொருளே!

கொட்டமடிக்கும் கெட்டிக்காரர்
மத்தியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது
எதுவும் தெரியாத ஏதிலிக் கூட்டமொன்று

வெட்டவெளிகளைக்காட்டி
நாம் நட்ட பயிர்கள் என்றவுடன்
மாற்றுக்கதை ஏதுமின்றி
விளைச்சல் பிரமாதம் என்று
விளம்பரம் செய்பவரிடம்
பேசிப்பயனேதும் உண்டோ?

உண்ண உணவில்லை
உறங்க வீடில்லை
செல்விழுந்த இடங்களின் தடங்களோ
இன்னும் மறையவில்லை
கைகாலிழந்த சிறுவர்கள்
உயிரற்ற கால்களுடன்
இயங்காமல் முடங்குகிறார்

இந்த லட்சணத்தில் எமக்கு
எல்லாம் கிடைத்துவிட்டதாய்
வெள்ளை வேட்டி கட்டிய வீரர்
வேசம் போடுகிறார்
இங்கொருகதை அங்கொருகதை சொல்லி

நல்லம் நமக்கென்ன என்று
தம் வங்கிக் கணக்குகளை
வண்டி நிறைத்தால் போல் நிறைத்துவிட
அது ஊதி வெடிக்கும் நிலையில்
இருந்தும் புதுப்பிக்கிறார் புதுக்கணக்கை...

நம் தமிழர் தியாகத்தை
நம் தமிழர் உயிர்மூச்சை
நம் தமிழர் இரத்தத்தை
விற்றுப் பிழைப்பதற்குப் பெயர்
உம் அடைமொழியில்
அரசியல் என்றால்
யாமென்ன செய்ய பரம்பொருளே!

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 449




## கருணைக்கடலே

கொண்டாட்டங்களில்
குப்பையில் கொட்டும்
உண்டியை உணர்வீரா?
உழவரை உயர்த்துவீரா?
பண்டிகை பண்டம் ஈகை
புரிந்துணர்வீரா ஒரு
கைக்கவளமும் உயிரை
காத்திடும் கருணைக்கடலே

வைகதன்
கொக்குவில்

## மௌனத்தின் தேடல் -450



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## புண்ணியம்

மனிதா பசியால் கையேந்தும்
எமக்கு ஒருவேளை
உணவேனும் நீ தந்திடு
எங்களுக்குப் பசியும் தீரும்
உங்களுக்கு வாழ்வில்
புண்ணியமும் சேரும்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## பசிப்பிணி

பணக்காரன் கொட்டும்
உணவின் மிச்சம்
பணிவோடு ஏந்திடும்
ஏழ்மையின் உச்சம்
பசிப்பிணி கண்டு
உன்பணி மறக்காதே
சோதனைகள் தாண்டியே- பல
சாதனைகள் உண்டு
வெறும் சோற்றுக்கே
பிறந்ததல்ல உன் யாக்கை
உலகை வென்றிடவே
வந்ததுதான் வாழ்க்கை

யோ.யனுசன்
ஸ்கந்தபுரம்

## உலகை உயர்த்தும்

கொடுமையில் கொடுமை
குழந்தையில் வறுமை
கொடுத்திட நீளும் கை
குபேரனின் குணக் கை
ஏந்திடும் இளசின் கை
எழுந்திடும் நம்பிக் கை
சார்ந்த தம் உறவிலாக் கை
சதாவும் உலகை உயர்த்தும் கை

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

## வெற்றி உனதே

பசியின் கொடுமையால்
பலநாள் துடித்த பாலகன்
உணவைக் கண்டதும்
உள்ள உவகைப் பூரிப்போடு
கைநீட்டி அதைத்தான்
பெற்றிட நினைக்கிறான்
இரப்பது இளிமை- அதைவிட
இரப்போர்க்கு ஈயாதது இழிமை
இரப்பதும் ஈவதும் சிறப்பன்று
உழைத்துண்டு வாழ்வதே உயர்வு
என்று நீ உணர்ந்து நடைபோடு
எதிர்காலத்தில் ஏழ்மையொழிந்து
வெற்றியுனதேயாகும்

சி.திவ்வியா, யா/ப.மெ.ம.வி

## பசி எனும் நோய்

உள்ளம் கொள்ளை
கொள்ளும் தேகமதில்
கொள்ளையர்கள் கூடி
கொட்டம் அடித்தால்
கிட்ட கிடந்த நீரும்
எட்டப் போனதால்
களத்து மேட்டில்
காயவேண்டியது
கலத்தில் காய்ந்ததால்
உழைக்கு சேர வேண்டியது
ஊராங்கை போனதால்
ஒட்டியது வயிற்றில்
ஒற்றமடித்தது
பசி எனும் நோய்
ஏற்றம் இருக்கும்
உணவெனும் மருந்து
கிட்ட கிடந்திடுமே
பசி எனும்
நோய் தீர்க்க

கிளியூர் எஸ்.கே. இசை

## முகம் மலர்வு

வயிற்றுப் பசியால்
துவண்டு விழும் நேரத்தில்
ஓர்கரம் உணவுத்தட்டு
வழங்கி நிற்பதுவும்
ஓர் உத்தம செயலன்றோ?
மைந்தனே
உணவைக் கண்டதும்
உன் முகமும்
உள்ளமும் உடலும்
மலர்ந்து பூரிப்படைவதைப்
பார்க்கும் போது
அனைவரும் உவகை
கொள்கிறோம்
தம்பி! நாளைய
உலகு உனக்கானது
பலருக்கும் உணவு வழங்கும்
கரங்களாக மாறட்டும்

அபி குலமாலிகா
சங்கானை

## ஏக்கம்

வண்ணக் கனவுகளுடன்
வட்டமிடும் வயதில்
ஒரு கோப்பை
சோற்றுக்காய் ஏங்கும்
இந்தச் சிறுவனின் எதிர்காலம்
என்னவோ?- உன்னை
பாதுகாக்க வேண்டியவர்கள்
எங்கே பரிதவிக்கவிட்டு
சென்றனரோ?
விளையும் பூமியில்
விளைந்த முத்தொன்று
உணவிற்கு ஏங்குவதை
ஏற்கலாமோ?
கல்வியை ஆயுதமாய் எடு
பாலகனே கலங்காதே
காலம் கனியும்
உன் ஏக்கம் தீரும்

ப.ஷயந்து, கரணவாய்

# கல்வியே எங்கள் மூலதனம்!

**சில்**என்ற குளிர்ந்த நீர் முகத்தில்பட்டு சுய நினைவிற்கு வந்தான் ரகு. உடலெல்லாம் ரணமாக வலித்தது. மரண வலி. "அம்மா" என்று முணகிக் கொண்டான். கையைக் காலை அசைக்க முடியவில்லை. இரண்டு கைகளும் கால் களுடன் பின்புறமாக மடக்கிக் கட்டப்பட்டிருந்தது. உடம்பில் இடுப்புப் பகுதி தவிர மிகுதி அம் மணமாக இருந்தது. உதடுகள் வெடித்து எச்சில் விழுங்க முடியாத நிலை. வாயில் உமிழ்நீருடன் இரத்தமும் வழிந்தது.

உடம்பு முழுவதும் சப்பாத்துக் கால்களால் மிதியுண்டு உட்காயங்கள். இரும்புக் கம்பிகளுக்கு அப்பால் நான்கு அடி அகலம் கொண்ட அந்தக் குறுகிய இடத்தில் தன் இளமையை மட்டுமல்ல எதிர்காலத்தையும் தொலைத்தவனாக சுருண்டு கிடந்தான் ரகு. அவனது மனமோ அனலில் அகப்பட்ட ஆலிலை போல் கருகிக் கிடந்தது. "ஐயகோ" என்று கத்தி அழுதாலும் தீராது அவனது வேதனை. ரகுவின் இந்த நிலைக்குக் காரணம் தான் என்ன?

அன்று திங்கட்கிழமை காலை ஏழுமணி. மாணவர்கள் வெண்ணிறப் பட்டாம்பூச்சிகளாக பாடசாலைக்கு வருகை தந்த வண்ணம் இருந்தனர். கள்ளம் கபடமற்ற அந்த முகங்களைப் பார்த்தாலே மற்றவருக்கும் உற்சாகம் பிறக்கும். வெறும் கட்டடங்களாக இருந்த பாடசாலை இப் போது உயிர்பெற்று எழுவது போல் இருந்தது. சில மாணவர் தமக்கு என ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்யத் தொடங்கினர்.

பல மரங்களைக் கொண்டமைந்த அந்தப் பாடசாலை ஓர் சோலையாகவே காட்சியளித்தது. சனி, ஞாயிறு. தினங்களில் அதிகமான சருகுகளை அவை உதிர்த்திருந்தன. தனக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் சருகுகளைக் கூட்டி அள்ளும் மாணவர்களை மேற்பார்வை செய்தவாறு நின்றிருந்தான் ரகு.

அந்தக் கிராமத்துப் பாடசாலையில் சிரேஷ்ட மாணவத் தலைவன் மட்டுமல்ல கல்வி மற்றும் விளையாட்டிலும் அவன் கெட்டிக்காரன். விஞ்ஞானப் பாடத்தைத் தன் உயர்தரப் பிரிவாக தெரிவு செய்திருந்தான். ஏழை மக்களுக்கு குறைந்த செலவுடன் வைத்தியம் செய்யவேண்டும் என்பது அவனது இலட்சியம்.

தனது நண்பன் ராமிற்கு ஒதுக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடப் பிரதேசம் சுத்தம் செய்யாதிருப்பதை அவன் காணத் தவறவில்லை. ராம் பாடசாலைக்கு வரவில்லை என்பதைப் புரிந்து கொண்டான். அவன் நண்பனின் பிரதேசத்தைத் துப்புரவு செய்ய முன்வரவும் பிரார்த்தனை மணி ஒலிக்கவும் சரியாக இருந்தது. நண்பனின் பிரதேசம் மட்டுமல்ல அவனின் மனமும் சுத்தம் செய்யப்பட வேண்டும் என எண்ணிய ரகுவிடம் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

"டோய் மல்லி... எழும்புறது... சரியா..." என்றான் நீரைக்கொட்டிய அந்தச் சிறைக்காவலாளி. இரும்புக் கதவை திறந்து உள்ளே வந்தான். " நாளைக்கு கோட்டுக்குப் போறது சரி" என்றவாறு கட்டுக்களை மெல்ல அவிழ்த்துவிட்டான். "ஐச் ஐயாக்கிட்ட ... இங்க நடந்தது எதுவும் சொல்லுறதில்லை... சரியா..." தமிழைச் சப்பித் துப்பியவாறு எச்சரிக்கை செய்தான். எழும்ப முடியாது மெல்ல சுவரோடு முதுகைச் சாய்த்தவாறு இருந்தான் ரகு.

" எப்படியிருந்த நான் இப்படி ஆயிட்டேனே" அவன் மனம் விம்மியழுதது. இரண்டு கிழமைகளுக்கு முன்புதான் ஓர்நாள் ரகு தன் நண்பன் ராமுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தான். "ஏன்டா நீஒழுங்கா ஸ்கூலுக்கு வாறதில்லை. படிப்பை கைவிட்டாச்சோ...." மௌனியாகவே நின்றான் ராம்.

"உன்னை நம்பி ஒரு குடும்பம் இருக்கு புரிஞ்சுக்க" என்றான் ரகு." எனக்கு பல வேலை இருக்கும். நீ படி. உன்னை யார் மச்சான் தடுத்தது" என்றான் ராம். அவனது வார்த்தைகளில் வெறுப்பின் சாயல் இருந்தது. "ஏன் மச்சான் உப்படிக் கதைக்கின்றாய்?"" நீ டொக்டரா வா. முதல் அதைச் செய். என்னைப் பற்றிக் கவலைப்படாதே" என்றான் ராம். "உன்ர அம்மா, அப்பா எவ்வளவு கஷ்டப்படுகினம்?" ஆதங்கப்பட்டான் ரகு. ஆத்திரம் கொண்டவனாக ரகுவின் சேட் கொலரைப் பிடித்தான் ராம்."நீ உன்ர வேலையை மட்டும் பார்" என்றான் அழுத்தமாக.

திடுக்குற்றான் ரகு. என்ன ஒரு கோபம். கண்கள் சிவப்பேறி அப்படி ஒரு பயங்கரம். கோபத்தால் அவன் உடல் நடுங்கியது. தன்னையே கட்டுப்படுத்த முடியாதவ னாக நின்றிருந்தான் ராம். ஒருபோதும் நண் பனைக் அக் கோபத்தில் பார்த்ததில்லை. ஏன் இந்த மாற்றம். சிறிது காலமாக அவன் போக்கே சரியில்லை. ஒருமுறை ரகுவைத் தேடி குரு வந்திருந்தான். "வா மச்சான்., என்ன இங்கால காத்தடிச்சிருக்கு?""சும்மா உன்னைப் பார்த்திட்டுப் போவம் என்று வந்தேன்டா" என்றான் குரு.

குருவும் ரகுவும் தனியார் கல்வி நிறுவனத்தில் ஒன்றாகப் படிக்கும் சிநேகிதர்கள். குரு நகரப் பாடசாலையொன்றில் கல்வி கற்கின்றான். "எப்படிப் போகுது தம்பி படிப்பு" என ரகுவின் தாய் விசாரித்தாள். "ஊக்கம்எடுக்கின்றேன்அம்மா" என்றான் குரு அடக்கமாக. அவர்களைக் கதைக்கவிட்டு அடுக்களைக்கு போனாள் தாய்.

"டேய் மச்சான்" என்றவாறு கதிரை நுனிக்கு வந்து அங்குமிங்கும் பார்த்தான் குரு."என்ன மச்சான், ஏதேனும் பிரச்சி னையா?" "உவன் ராமின் போக்கு சரியில்லை" "நானும் கவனித்தேன்... ஸ்கூலுக்கு அவன் ஒழுங் கில்லை. "ரவுன் பக்கம் மினக்கெடுறான். பாக்குப் போடுறான் போல இருக்கு""கேட்கப் போனா சண்டைக்கு வாறான்" என்றான் ரகு. "இன்னும் என்னென்ன பழகி உள்ளானோ?" சந்தேகப்பட்டான் குரு."இத இப்படியே விடமுடியாது மச்சான்" என அழுத்திக் கூறினான் ரகு. அம்மா கொண்டு வந்த தேநீரை இருவரும் அருந்தினார்கள். பின்பு விடைபெற்றுச் சென்றான் ரகு. முன்னரே திட்டமிட்டதுபோல் ரகுவின் தலைமையில் மாணவர் குழுவொன்று ஆயத்தமானது. போதை ஒழிப்பு பதாகைகளுடன் நகரின் முக்கியமான அந்த இடத்தில் ஒன்றுகூடினர். போதை ஒழிப்பு தொடர்பான கோஷங்களை எழுப்பினர். ரகு உச்ச சுரத்தில் கோஷமிட்டான். ஏனையவர்களும் அடியொற்றி கோஷமிட்டனர்.


சிறுகதை

சில நிமிடங்கள் சென்றிருக்கும். எங்கோ இருந்து வேகமாக உந்துருளிகள் சில வந்து நின்றன. அதில் தலைக் கவசம் அணிந்து வந்த குண்டர் கூட்டம் ஒன்று இவர்களைத் தடிகள், கம்பிகள், கொண்டு தாக்கத் தொடங்கியது. மாணவர் எல்லோரும் "மாணவர் சக்தி மாபெரும் சக்தி" எனக் கோஷமிட்டனர். கோஷங்கள் மெல்ல மெல்லத் தேய்ந்து மரண ஓலங்களாக மாறின. வந்தவர் கள் மின்னல் போல் மறைந்தனர். சிறிது நேரத்தில் பொது மக்கள் அங்கு கூடிவிட்டனர். பொலிஸாரும் வந்தனர். ரகுவை பொலிஸார் கைது செய்தனர். மீதிப்பேர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கலகத்தில் ஈடுபட் டவர்களின் தலைவன் என ரகு மீது குற்றம் சுமத்தப்பட்டது. இரும்புக் கம்பிகளில் கோலால் தட்டப்படும் ஓசை கேட்டு திடுக்குற்று எழுந்தான் ரகு. விடிந்திருந்தது. இன்று திங்கட்கிழமை. நீதிமன்றில் அவன் குற்றம் விசாரிக்கப்பட வுள்ளது. அவன் காலைக்கடன்களை முடித்து குளிப்பதற் குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டன.

நேரம் முற்பகல் 10.30. நீதிமன்றம் அவன் சினிமாவில் பார்த்தது போல் இருக்கவில்லை. இவனது வழக்கு விசாரணைக்கு வந்தபோது வழக்கறிஞர் ஒருவரால் நீதிபதிக்கு வழக்கின் விபரம் தெரிவிக்கப்பட்டது. நீதிபதி தனது மூக்குக் கண்ணாடி வழியாக அவனை அளவிடுவது போல் உற்றுப் பார்த்தார்.

" நீர் உம் குற்றத்தை ஒப்புக் கொள்கின்றீரா?" "ஆம் ஐயா" என்று தயக்கத்துடன் கூறிய ரகு "உங்களிடம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றேன் ஐயா" என்றான். நீதிபதி என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்தார்." எம் பிரதேசத்தில் மாணவரை இலக்கு வைத்து போதைப்பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. அதனால் தான் நாங்கள்..." நீதிபதி கையசைத்து இடைமறித்தார்.

" மாணவர்கள் நீங்கள் ஒருபோதும் சட்டத்தைக் கையில் எடுக்கக்கூடாது. உங்கள் கடமை எதுவோ அதைமட்டும் செய்யுங்கள். சட்டம் தன் கடமையைச் செய்யும்" என்றார் அழுத்தம் திருத்தமாக." மூன்று மாதங்களில் உயர்தரப் பரீட்சை வருவதால் என்னை மன்னித்து விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்றான் ரகு கண்கள் பனிக்க.

ஐம்பதாயிரம் சரீரப் பிணையில் ரகு விடுதலை செய்யப்பட்டான். அம்மா மற்றும் வகுப்பாசிரியருடன் ராமும் வந்திருந்தான். தாய் ஓடிவந்து அவனைக் கட்டிப் பிடித்து கதறியழுதார். "உனக்கு ஏனப்பு இந்தப் பொல்லாத வேலை" கடிந்து கொண்டாள் தாய். ராமைப் பார்த்ததும் ரகுவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவனிடம் மாற்றம் தெரிந்தது. " மச்சான்... என்னடா நீ... எனக்காக... இப்படியெல்லாம்..." வார்த்தைகள் வெளிவரவில்லை. ரகுவைக் கட்டியணைத்தான்.

இருவரது நட்பையும் பார்த்து ஆசிரியர் அகமகிழ்ந்தார். "வீட்ட போய் கதைப்பம்" என்றார். அனைவரும் ரகுவின் வீட்டிற்குப் போனார்கள். ஆசிரியரின் அறிவுரைகளும் ரகுவின் தியாக உணர்வும் ராமின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. இவ்வுலகில் மாற்றம் ஒன்றுதானே நிலையானது.

ஆசிரியர் செருமிக்கொண்டு மாணவர் இருவரையும் பார்த்துக் கூறினார். " ஒரு காலத்தில் தமிழன் இங்கு கல்வியில் கொடி கட்டிப் பறந்தான். அப்போ தரப்படுத்தல் என்ற ஒன்றால் அவனது பல்கலைக்கழக அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது.

இதுவே இனப்பிரச்சினைக்கு வித்திட்டது. ஆனால் இப்போ தரப்படுத்தல் இல்லாவிட்டால் எமது பல்கலைக்கழக அனுமதி மிகச் சொற்பமாக இருக்கும். அந்தளவிற்கு எமது கல்வி மட்டம் வீழ்ச்சியடைந்து விட்டது. எமது மாகாணம் கல்வி அடைவு மட்டத்தில் பின்தங்கியிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

"இதற்கெல்லாம் யார் காரணம்?" ஆதங்கப்பட்டான் ரகு. "நாம் தான் காரணம்" என்றார் ஆசிரியர் அமைதியாக. மாண வர் இருவரும் அதிர்ந்து போயினர். ஆசிரியர் மெல்லச் சிரித்தவாறு தொடர்ந்தார்."எமது மாணவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் விநியோ கம், மட்டுப்படுத்தப்படாத இணையம், தாராள மதுபான வர்த்தகம், வன்முறையைத் தூண்டும் சினிமா போன்றன எம் மாணவர்களின் கல்விக்கு குந்தகம் விளைவிக்கின்றன.

எனவே இவற்றையெல்லாம் வெற்றிகொண்டு கல்வியில் முன்னேற நாம் செய்யவேண்டியது யாதெனில்" என்று கூறி இருவரையும் பார்த்தார். மாணவர் இருவரும் மந்திரத்திற்கு கட்டுண்டவர்கள் போல் ஆசிரியரை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் உதடுகள் உதிர்க்கப் போகும் வார்த்தைக்காக இருவரது மனங்களும் ஏங்கின.

**" மாணவர்கள் எந்தவொரு பொறிக்குள்ளும் அகப்படாது படிக்க வேண்டும். இந்தப் படிப்பின் மூலமே நாம் பலவற்றையும் சாதிக்க முடியும். எமது உரிமைகளையும் வென்றெடுக்க முடியும்"** என்று அழுத்தமாக இடித்துரைத்தார் ஆசிரியர். மாணவர்கள் மனம் புத்துயிர் பெற்று திடசங்கற்பம் பூண்டது. ஆசிரியர் சில நொடிகள் கண்களை மூடியபடி இருந்தார். பின் **" கல்வியே எங்கள் மூலதனம்"** என்றார். அது உதட்டில் இருந்து வெளிவந்த வார்த்தை அல்ல. அது மாணவர்களின் நாடி நரம்பெல்லாம் ஓடிப் பாய்ந்தது. மாணவர்களும் ஒரு சேர உரத்துக் கூறினர்.

**" கல்வியே எங்கள் மூலதனம்"**

**சி.சிறீரங்கன் உரும்பிராய்**

# அவர் இல்லாத அந்த நாள்





ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் பிறக்கப்போகிறது என்றாலே, தி.மு.கவினருக்கு கொண்டாட்டம்தான். ஜூன் 3 ஆம் திகதி கருணாநிதியின் பிறந்த நாளைக் கொண்டாட அறிவாலயமும் கோபாலபுரமும் தயாராகிவிடும்.

கருணாநிதி இல்லாமல், அவரின் பிறந்தநாள் கொண்டாடப்படும் முதலாமாண்டு இது. வழக்கமாக, கருணாநிதியின் பிறந்தநாள் வருவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே தி.மு.கவைத் தனி உற்சாகம் தொற்றிக்கொள்ளும். பட்டிமன்றம், கருத்தரங்கம், கவியரங்கம் என்று தி.மு.கவின் ஒவ்வோர் அணியின் சார்பிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.

இரு தினங்களுக்கு முன்பாகவே கோபாலபுரம், சி.ஐ.டி. நகர் இல்லங்கள் விழாக் கோலம் பூண்டுவிடும். பூக்களாலும், இளநீர், பாக்கு போன்ற பலவிதமான தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு கலகலப்பான சூழல் வந்துவிடும்.

சி.ஐ.டி. நகர் வீட்டில் இரவு தங்கும் கருணாநிதி, காலை 4 மணிக்கெல்லாம் எழுந்து தயாராகிவிடுவார். டி.ஆர்.பாலு உள்ளிட்ட தி.மு.கவினர் அங்கு போய், கருணாநிதிக்கும் ராஜாத்தியம்மாளுக்கும் பட்டு வேட்டி, பட்டுச் சேலை பரிசளித்து ஆசீர்வாதம் பெறுவார்கள்.

பிறகு, அங்கு மரக்கன்று நட்டுவிட்டு, அதிகாலை 5.30 மணிக்கெல்லாம் கோபாலபுரம் வந்து, தன் தாய் தந்தையின் புகைப்படங்களுக்கு மாலைகள் அணிவிப்பார் கருணாநிதி. அவர் முன்னிலையில் ஸ்டாலின் உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து கேக் வெட்டி மகிழ்வார்கள்.

பிறகு அப்போது வந்திருக்கும் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துவிட்டு, காலை ஏழு மணி அளவில் அண்ணா நினைவிடத்துக்கும், பெரியார் நினைவிடத்துக்கும் சென்று வணங்குவார். அங்கிருந்து எட்டரை மணி அளவில் அவர் கோபாலபுரம் திரும்பும்போது, அவரைச் சந்திப்பதற்காக கோபாலபுரமே வி.ஐ.பிக்களால் நிரம்பியிருக்கும். தெருமுனைவரை மிக நீண்ட வரிசையில் காத்திருப்பார்கள்.

தி.மு.கவின் முன்னணித் தலைவர்கள், எம்.பி., எம்.எல்.ஏக்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், பல்கலைக் கழக துணைவேந்தர்கள், திரைப்படத் துறையினர், தொழிலதிபர்கள் என முக்கியப் பிரமுகர்கள் பலரும் வந்துவிடுவார்கள். தா.பாண்டியன், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், பீட்டர் அல்போன்ஸ், கோபண்ணா, இல.கணேசன், தொல்.திருமாவளவன், ரவிக்குமார் என்று பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் வந்து வாழ்த்துவார்கள்.

இன்னொருபுறம், தமிழகம் முழுவதிலுமிருந்து தி.மு.கவின் முக்கிய நிர்வாகிகள் முதல் கடைக்கோடி தொண்டர்கள் வரை குடும்பம் குடும்பமாகத் திரண்டு வந்து, அண்ணா அறிவாலயத்தில் காத்திருப்பார்கள். பலாப்பழம், ஆட்டுக்குட்டி, முயல்குட்டி, ரூபாய் நோட்டு மாலை என்று பலவிதமான அன்பளிப்புகளைக் கையில் வைத்துக்கொண்டு அவர்கள் வரிசையில் நின்றுகொண்டிருப்பார்கள்.

கருணாநிதி வந்து மேடையில் அமர்ந்தவுடன், ஒவ்வொருவராக மேடைக்கு வந்து சால்வையையும் மாலையையும் அணிவிப்பார்கள். அன்பளிப்புகளை வழங்குவார்கள். அப்போது கருணாநிதியிடம் உற்சாகம் கரைபுரளும். எல்லோரையும் கிண்டலடித்து, அந்தச் சூழலை கலகலப்பாக மாற்றுவார்.

அவருக்குப் பக்கத்தில் கட்சி நிதிக்காக ஓர் உண்டியல் வைப்பட்டிருக்கும். கட்சியினர் அதில் பணம் போடுவார்கள். 'எவ்வளவுய்யா போட்டே' என்று அந்தக் கரகரப்பான குரலில் கிண்டலாகக் கேட்பார்.

ஒருமுறை, கண்டோன்மென்ட் சண்முகம் என்ற எம்.எல்.ஏ. அந்த உண்டியலில் பணம் போட்டார். 'எவ்வளவுய்யா போட்டே?' என்று கருணாநிதி கேட்க, 'ஐம்பதாயிரம் போட்டேன் தலைவரே' என்றார் சண்முகம். உடனே, 'எனக்கு என்ன வயசு?' என்று கேட்டார் கருணாநிதி.

'எம்பத்தெட்டு வயசாகுது தலைவரே' என்று சண்முகம் சொல்ல, 'அப்ப.. மீதிப் பணத்தைப் போட்டுட்டு போ' என்றார் கருணாநிதி. அவர் வேகமாக கீழே இறங்கி ஓடிச்சென்று, அங்கிருந்த நண்பர்களிடம் பணத்தைப் புரட்டி உண்டியலில் போட்டுவிட்டு, 'போட்டாச்சு தலைவரே..' என்று சொல்ல, கருணாநிதி உட்பட அங்கிருந்த அனைவரும் கலகலவென்று சிரித்தனர்.

அந்த நிகழ்ச்சிக்குப் பின், செய்தியாளர்களைச் சந்தித்துவிட்டு சி.ஐ.டி. நகர் சென்றுவிடுவார். அங்கு ஒரு பெரிய கூட்டம் காத்திருக்கும். எல்லோருக்கும் மதிய உணவு தயாராகும். சாப்பிட்டுவிட்டு சற்று நேரம் உறங்கும் கருணாநிதி, சரியாக மாலை 4 மணிக்கு எழுந்து கீழே இறங்கி வருவார்.

5.30 மணிவரை வரிசையாக நின்று, சால்வை அணிவித்து, அவரிடம் எல்லோரும் வாழ்த்துப் பெறுவார்கள். பிறகு, மாலை 5.30 மணிக்கு கோபாலபுரம் வந்துவிடுவார். இப்படியாகத்தான், ஒவ்வோர் ஆண்டும் கருணாநிதியின் பிறந்தநாள் உற்சாகத்துடன் கடந்து செல்லும்.

ஆனால், அவர் உடல்நிலை சரியில்லாமல் போனதால், 2018ஆம் ஆண்டு அவரது பிறந்தநாள் கொண்டாடப்படவில்லை. கோபாலபுரம் வந்த வி.ஐ.பிக்கள் அனைவரும் மு.க.ஸ்டாலினை மட்டும் பார்த்துவிட்டுச் சென்றனர்.

அவர் மறைந்த பிறகு வரும் முதல் பிறந்தநாள் இது. பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு தி.மு.கவினர் திட்டமிடுகிறார்கள். ஆனாலும், தலைவர் இல்லையே என்கிற ஏக்கத்தையும் சோகத்தையும் உடன்பிறப்புகளிடம் பார்க்க முடிகிறது.

## 'என் பிறந்த நாளில் நீ ஊரில் இல்லையா?'

கருணாநிதியின் பிறந்தநாள் அனுபவம் குறித்த நினைவுகளை அவருடன் நெருங்கிப் பழகிய திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

"தலைவர் கலைஞரின் பிறந்தநாள் என்பது தி.மு.கவினருக்கு பெரிய திருவிழா. அன்றைய தினம் தலைவரைப் பார்ப்பதற்கு பத்து மணிகூட ஆகலாம் என்கிற நிலையில், காலை 5 மணியிலிருந்தே தொண்டர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள்.

தி.மு.கவை நான் ஆதரிக்கத் தொடங்கிய பிறகு, பெரும்பாலான ஆண்டுகளில் கலைஞரின் பிறந்தநாளுக்குச் சென்று அவரிடம் வாழ்த்துப் பெற்றிருக்கிறேன். காலையில் கோபாலபுரம் சென்றால், தொண்டர்களின் நெரிசலில் சிக்கிக் கொண்டுதான் வீட்டுக்குள் நுழையவே முடியும்.

அதனால், காலை 5.30 மணிக்கெல்லாம் கோபாலபுரம் போய்விடும் வழக்கத்தை வைத்துக்கொண்டேன். காலையிலேயே பெரியார் நினைவிடத்துக்கும், அண்ணா நினைவிடத்துக்கும் புறப்படுவதற்கு முன்பாக தலைவரைப் பார்த்து விடுவேன்.

நினைவிடங்களுக்குப் போய்வந்த பிறகுதான், தொண்டர்களை அவர் சந்திப்பார். அன்றைய தினம் கட்சியின் மூத்த தலைவர்கள், தலைவருடன் சேர்ந்து அமர்ந்து காலை உணவு சாப்பிடுவார்கள். தலைவரின் பிறந்தநாளில் இரண்டு மூன்று முறை அவருக்கு அருகில் அமர்ந்து காலை உணவு சாப்பிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

2012ஆம் ஆண்டு டெசோ மாநாடு. அதையொட்டி கிட்டத்தட்ட 40 நாட்கள் அவர்கூடவே இருந்தேன். அதன் பிறகு லண்டனுக்கு என் பிள்ளைகள் வீட்டுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தேன். அதைக் கேள்விப்பட்டு, 'என் பிறந்த நாளுக்கு நீ ஊரில் இல்லையா?' என்று கேட்டார். நான் தயக்கத்துடன், 'ஆமாம் ஐயா.. லண்டன் போகிறேன்' என்று சொன்னேன். உடனே அவர், 'உன்னோட பிறந்தநாளுக்கு நான் வாழ்த்துகிறேன். என் பிறந்தநாளுக்கு நீ வாழ்த்த மாட்டியா?' என்று கிண்டலாகக் கேட்டார்.

கடும் தோல்வியைச் சந்தித்த 2014 ஆம் ஆண்டும்கூட, எப்போதும்போல அதே மகிழ்வோடுதான் பிறந்தநாளைக் கொண்டாடினார். நான் அறிவாலயம் சென்றபோது, 'தலைவர் சி.ஐ.டி நகர் போய்விட்டார்' என்று சொன்னார்கள். உடனே, சி.ஐ.டி. நகர் போனேன். 'அறிவாலயத்தில் ரொம்பக் கூட்டமாக இருந்தது. அதான் பார்க்க முடியவில்லை' என்று சொன்னேன். சிரித்துகொண்டே, 'வா.. சாப்பிடுவோம்' என்று சொல்லி என்னைச் சாப்பிடவைத்தார்.


கடைசியாக, 2016ஆம் ஆண்டு, ஜூன் 3 ஆம் திகதி பெரியார், அண்ணா நினைவிடங்களுக்குச் சென்றுவிட்டு, காலை உணவு உண்பதற்காக வந்தபோது அவரைச் சந்தித்தேன். மஞ்சள் துண்டு எதுவுமில்லாமல் கைபனியனுடன் இருந்தார். 'வா... வந்து படம் எடுத்துக்கொள்' என்று அன்போடு சொன்னார். அப்போது அவரருகே நின்று படம் எடுத்துக்கொண்டேன். அதுதான், அவருடன் நான் எடுத்துக் கொண்ட கடைசிப்படம்.

புன்னகையோடு என்னை அவர் அழைத்த அந்தக் காட்சி, இன்னும் என் மனக்கண்ணில் தேங்கிநிற்கிறது. அதன் பிறகு, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் ஐயாவின் பிறந்தநாளில் அவரைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை."

ஜூனியர் விகடன்

# facebook

# குளத்தில் முதலைகள்



குமாருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. பக்கத்தில் இருக்கும் ஆற்றில் இறங்கி ஓடி மறுமுனையில் ஏறி தப்பித்து ஓடி விட லாமா? அல்லது எதிரே இருக்கும் ஒற்றையடி பாதையில் ஓடி விட லாமா? அல்லது பின்புறம் இருக்கும் புதர் காட்டில் புகுந்து ஓடிவிட லாமா? என பலவாறு யோசித்தான்.

சரி. ஆனது ஆகிவிட்டது. நடப்பது நடக்கட்டும். துணிச்சலோடு நின்றான். ஆபிசர்ஸ் இருவரும் தலைக்கவசத்தை கழட்டி கொண்டே கெட்ட கெட்ட வார்த்தைகளால் குமாரை திட்ட தொடங்கி விட்டார்கள். திட்டியதோடு இல்லாமல் முகத்தில் ரெண்டு குத்தும் ஓங்கி ஒரு உதையும் விட்டார்கள். பட்டினியோடு இருந்த குமாருக்கு ரொம்பவும் வலித்தது. பேச வார்த்தைகள் வரவில்லை. மணியும் ஐயா சிலையும் மௌனமாக நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'திருப்பி கட்ட முடியாதுன்னா என்னாத்துக்கு கடன் வாங்க வேண்டும்?' என பச்சை பச்சையாக கேட்டார்கள்.

ஆபிசர்ஸ் தன் முதலாளிக்கு போன் போட்டார்கள்.

அண்ண. குமாரை கண்டு பிடித்து விட்டேன். என்ன செய்யலாம்?' வழக்கம் போல் என்ன செய்வீங்களோ. அதையே செய்து விடுங்கள்.'

போன் கட் ஆனது.

மணியை டாக்சியை எடுத்து கொண்டு கிளம்ப சொன்னார்கள். மணி சொன்னான்.

நான் ஒரு தடவை அண்ணன் கிட்ட பேசி பார்க்கிறேன். குமாரின் டாக்சியை கம்பனிகாரன் இழுத்துக் கொண்டான். வேலை இல்லாமல் இருக்கான்.'

நீ அந்த பணத்தை திருப்பி செலுத்துவதாக ஜாமின் சொல்லு குமாரை விட்டு விடுகிறோம்.'

மணி ரொம்பவும் யோசித்தான். மணி இரண்டு வட்டி தவுக்கேயிடம் வட்டிக்கு கார்டு வாங்கி இருந்தான். ஒரு கார்டு ஐம்பது வெள்ளி. ரெண்டு கார்டு நூறு வெள்ளி. டாக்சி வாடகை அறுபது வெள்ளி. வீட்டுக்கு அன்றாடம் ஐம்பது வெள்ளி கொடுக்க வேண்டும். பிறகு டாக்சி ரிப்பேர், சாப்பாட்டு செலவு, சிகரெட் செலவு, நான்கு நம்பர் செலவு, கேம் கடை செலவு என அவனுக்கே இழுத்து பறித்து சமாளிக்க முடியாத சூழலில் தான், தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான். குமாருக்கு ஜாமின் கொடுக்க போய் தான் ஏதாவது பெரிய .சிக்கலில் மாட்டிக் கொண்டால் என்ன செய்வது. தன் குடும்ப நிலை என்னாவது என்று யோசித்தான்.

குமாருடைய நிலையை யோசித்து பார்த்தான். கேம் கடையில் நிறைய பணத்தை இழந்து விட்டான். அந்த சூழலில் அவனின் டாக்சி வேறு ரிப்பேர் ஆகி விட மூன்றாவதாக ஒரு கார்டு வாங்கியாக வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டான். நாள் ஒன்றுக்கு 150 வெள்ளி கட்ட வேண்டி இருந்தது. நாள் வட்டி இல்லாமல் மாத வட்டிக்கும் கடன் வாங்கி இருந்தான். டாக்சி வேறு ரிப்பேர் ஆகி செலவு. அவனால் சாமாளிக்கவே முடியாமல் போனது. இந்த சூழ்நிலையில் டாக்சி வாடகையை முறையாக கட்டவில்லை என கம்பனிகாரன் டாக்சியை பிடுங்கி கொண்டான். நான்கு திசைகளிலும் இருந்த பூதங்கள் எல்லாம் குமாரை பிடித்து நசுக்க தொடங்கியது.

மாத வட்டிக்கு கடன் கொடுத்தவர்கள் வீட்டில் வந்து கேட்காத கேள்வி எல்லாம் கேட்டு போனார்கள். மனைவி, குழந்தைகள் எதிரே வந்து கத்தி கலாட்டா செய்ததில் குமார் வெட்கத்தாலும் வேதனையாலும் தடுமாறி போயிருந்தான்.

பணம் இல்லாவிட்டால் வீட்டில் பிரச்சனை வரத்தானே செய்யும். வீட்டில் பிரச்சினை சீன பட்டாசு போல் படபடபடவென வெடிக்க தொடங்கியது. அந்த சத்தத்தை அவனால் தாங்க முடியவில்லை. சத்தம் அவன் காதை அடைக்கவே, தன் மனைவியை அடித்து விட்டான். மனைவி நேரே பொலிஸில் போய் புகார் செய்து விட்டார். தன் கணவன் தன் அடித்து விட்டதாகவும், ஊர் சுற்றி கடன் வாங்கி வைத்திருப்பதாகவும் இனி தன் கணவனுடன் சேர்ந்து வாழ முடியாது. விவாகரத்து வேண்டும் என பொலிஸ் நிலையத்தில் கேட்டார். போலிஸ் சார்ஜனும், 'அம்மா! இங்கு நீங்கள் புகார் மட்டும் தான் கொடுக்க முடியும். விவாகரத்து எல்லாம் பதிவு இலாகா அல்லது நீதிமன்றத்தில் தான் வாங்க முடியும்' என்று ஆலோசனை கூறி அனுப்பி வைத்தார்.

குமாருடைய மனைவி தன் குழந்தைகள் இருவரையும் அழைத்து கொண்டு அவர் அம்மா வீட்டுக்கு போய் விட்டார். நாசிக் லெம்மாக் வியாபாரம் செய்தாவது தன் குழந்தைகளை காப்பாற்ற வேண்டும் என்கிற வைராக்கியத்தோடு பஸ் ஏறி விட்டார்.

வட்டிக்காரர்கள் துரத்துவதால் குமார் வீட்டு பக்கமும் போகவில்லை. குமாரின் நிலையை யோசித்த மணிக்கு தன் அடி வயிறு கலக்கியது. இப்போ ஏதோ மணி சமாளிக்கக்கூடிய சூழலில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். மணியின் மனைவி மூக்கு கண்ணாடி விற்கும் கடையில் வேலை செய்து வருகிறார். அவருக்கு சம்பளம் மாதம் 1500 வெள்ளி. ஏதோ அவனால் தத்தி தவழ்ந்து தன் குடும்பத்தை மனைவியின் உதவியோடு வளர்க்க முடிகிறது. தன் சக்தியை மீறி கடன் வாங்கி அல்லது அடுத்தவருக்கு ஜாமின் சொல்லி மாட்டிக் கொண்டால் என்ன செய்வது என்று யோசித்தான்.

இதை எல்லாம் யோசித்துக் கொண்டு இருக்கும் போதே ஆபிசர்ஸ் இருவரும் மணியை அங்கிருந்து கிளம்ப சொல்லி மிரட்டினார்கள். மணியும் வேறு வழி இல்லாமல் அங்கிருந்து கிளம்பினான்.

குமாரையும் காப்பாற்றியாக வேண்டும். அதே சமயத்தில் தானும் மாட்டிக் கொள்ளக்கூடாது. மணி யோசித்து கொண்டே டாக்சி எடுத்துக் கொண்டு கிளம்பினான். கிளம்பியவன் சிறிது தூரம் போனதும், டாக்சியை ஒரு மூலையில் நிறுத்தி விட்டு இறங்கினான். மெதுவாக நடந்து ஐயா கோவிலுக்கு போய், ஆபிசர்ஸ் கண்ணில் படாமல் அங்கிருக்கும் புதர் பக்கம் போய் ஒளிந்து கொண்டான். நிலைமை கை மீறி போனால் என்ன ஆனாலும் உள்ளே நுழைந்து குமாரை காப்பாற்றி ஆக வேண்டும் என உறுதியாக இருந்தான்.

இதற்கிடையில் மணி ஒரு யோசனை செய்தான். குமார் இனி டாக்சி ஓட்டியோ அல்லது இங்கிருந்து கொண்டு வேறு ஏதாவது வேலை செய்து கடனை எல்லாம் கட்டி, எல்லா சிக்கலிலும் இருந்து மீண்டு வருவது இயலாத காரியம். மணியின் மச்சான் ஒருவர் சிங்கப்பூரில் கிரேன் அப்பேரேட்டர் வேலை செய்கிறார். நல்ல சம்பளம். குமாரிடம் E Full லைசன்ஸ் இருக்கு. இப்போதைக்கு குமாரை சிங்கப்பூர் அனுப்பி விடுவதுதான் ஒரு வழி என்று தோன்றியது. **(தொடரும்)**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1736

### அஸ்வந்த்

**காரணமின்றி அன்பு வைத்தது நம் முதல் தவறு... எல்லோரிடமும் உண்மையாக இருந்தது நம் இரண்டாவது தவறு... மற்றவர்களும் நம்மைப் போலத்தான் இருப்பார்கள் என்று நினைத்தது நம் மூன்றாவது தவறு!**




### நிகேதன்

**யார் என்ன நினைக்கிறார்களோ என்று நினைத்துக் கொண்டேயிருந்தால் நாம் என்ன நினைக்கிறோம் என்பதற்கு மரியாதையே இல்லாமல் போகும்!**



### உசேனி

**சோறு பொங்கும் போது காஸை கம்மி பண்ணனும்... மனசு பொங்கும் போது வாய்ஸ கம்மி பண்ணனும்**




### சொரூபன்

**முடிந்தால் பதில் சொல்லவும்... ஆம், இல்லை என்ற பதில் மட்டும் சொல்லவும்.... எனக்கு மூளை இல்லை, எனக்கு அறிவு இல்லை, நான் ஒரு முட்டாள்**




### ஜீவன்

**ஊரே இப்போது புகை பிடித்துக்கொண்டு இருக்கிறது... போகி எபெக்ட்**



### நந்தன்

**பயந்தவனுக்கு வலி நிறைந்த வாழ்க்கை... துணிந்தவனுக்கோ வழி நிறைந்த வாழ்க்கை**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆட்சிக்கவிழ்ப்பு புகழ் அவுஸ்திரேலியா... மீண்டும் பிரதமரானார் ஸ்கொட் மொரிசன்!



மனைவியுடன் ஸ்கொட் மொரிசன்

ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பெயர் போன நாடு அவுஸ்திரேலியா. அங்கு பதவிக்கு வருவதை விடப் பதவியில் தொடர்வது தான் குதிரைக்கொம்பு.

தற்போது அங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில், கருத்துக் கணிப்புகளை எல்லாம் அடித்து நொறுக்கிவிட்டு மகத்தான வெற்றி பெற்றுள்ளது, லிபரல் கட்சி - தேசியக் கட்சி கூட்டணி. அதனால், தற்போதைய பிரதமர் ஸ்கொட் மொரிசன், மீண்டும் பதவியைத் தக்கவைத்திருக்கிறார்.

கடந்த மே 18 ஆம் திகதி, அவுஸ்திரேலியாவில் 151 இடங்களுக்கான பொதுத்தேர்தல் நடைபெற்றது. தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப் புகள், 'தொழிலாளர் கட்சிதான் வெற்றி பெறும்' எனத் தெரி வித்திருந்தன. பெரும்பாலான அரசியல் நிபுணர்களும் அதையே ஆமோதித்திருந்தனர்.

ஆனால், ஆட்சி அமைக்கத் தேவையான 76 இடங்களை வென்று, அனைவரையும் அதிர வைத்துள்ளது லிபரல் கட்சி - தேசியக் கட்சி கூட்டணி. நாட்டின் 30 ஆவது பிரதமராக ஸ்கொட் மொரிசன் பதவி ஏற்க விருக்கிறார். லிபரல் கட்சிக்கு இது ஹட்ரிக் வெற்றி.

எப்படியும் ஆட்சியைப் பிடித்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட பிரதான எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி, 65 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது. தோல்விக்குப் பொறுப்பேற்று அந்தக் கட்சியின் தலைவர் பில் ஷார்டென் பதவி விலகியுள்ளார். பசுமைக் கட்சி, ஒரே தேசம் கட்சி, ஒருங்கிணைந்த அவுஸ்திரேலியக் கட்சி போன்ற சிறிய கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களும் சுயேச்சை வேட்பாளர்களும் ஆறு இடங்களைக் கைப்பற்றியுள்ளனர். ஆனாலும், லிபரல் கட்சிக்கும் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. லிபரல் கட்சியைச் சேர்ந்தவரான முன்னாள் பிரதமர் டோனி ஆபாட், தனது சொந்தத் தொகுதியில், சுயேச்சை வேட்பாளர் சாலி ஸ்டெகாலிடம் தோற்றிருக்கிறார்.

அவுஸ்திரேலியாவில் வடக்கு - தெற்கு பிளவு உண்டு. வடக்கில் இருப்பவர்கள், லிபரல் கட்சியை எப்போதும் ஆதரிப்பதில்லை. தெற்கின் ஆதரவால் தான், லிபரல் கட்சி மீண்டும் வெற்றிவாகை சூடியுள்ளது. தொடர் ஆட்சிக் கவிழ்ப்புகளால், கட்சிக்குப் பெரிய களங்கம் ஏற்பட்டிருந்த போதும் மொரிசனின் தனிப்பட்ட செல்வாக்குதான் கட்சியின் வெற்றிக்கு அடித்தளமிட்டுள்ளது. மொரிசனின் எதிர்பாராத வெற்றியை அவுஸ்திரேலியா கொண்டாடினாலும் ஆட்சியின் ஸ்திரத்தன்மை குறித்த கேள்விகளும் எழுகின்றன. ஏனெனில், ஆட்சிக் கவிழ்ப்பும் பிரதமர் பதவிப் பறிப்பும் அவுஸ்திரேலியாவில் சர்வ சாதாரணம். சொல்லப்போனால், கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம்தான் மொரிசனும் பிரதமரானார்.

அவுஸ்திரேலியாவில் பெரும்பாலும் ஆட்சிக்கவிழ்ப்புகளுக்குக் காரணமாக அமைகின்றன உட்கட்சிப்பூசல்கள். இதனால், கடந்த எட்டு ஆண்டுகளில் ஐந்து பிரதமர்கள் அங்கு மாறிவிட்டார்கள். ஒருவர்கூடப் பதவிக்காலம் முடியும் வரை பதவியில் இருக்கவில்லை.

ஆனால், கடந்த முப்பது ஆண்டுகளாக ஆட்சிக் கவிழ்ப்புகள் அங்கு தொடர்கின்றன. 1983ஆம் ஆண்டில் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த பாப் ஹாக், அப்போதைய பிரதமர் ஹைடனைக் கவிழ்த்து பிரதமர் பதவியைக் கைப்பற்றினார். பிறகு, அவரைக் கவிழ்த்து, கீட்டிங்க் பிரதமரானார். அவருக்குப் பிறகு பதவியேற்ற ஜான் ஹாவர்ட், நான்கு முறை தொடர்ந்து பிரதமராக இருந்தார்.

2007 ஆம் ஆண்டுவரை ஆட்சிக்கவிழ்ப்பு இல்லை. அதற்குப் பிறகுதான், ஆட்சிக்கவிழ்ப்பு அதிகரித்தது. ஹாவர்டுக்குப் பிறகு, மிகவும் பிரபலமாக இருந்த கெவின் ரட்டால்கூட தனது பிரதமர் பதவியைத் தக்கவைத்துக் கொள்ள முடியாமல் பதவி இழந்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் ஜூலியா கில்லர்ட், கெவின் ரட்டை பதவியிலிருந்து தூக்கியெறிந்து, பிரதமரானார். இவர்தான் அவுஸ்திரேலியா நாட்டின் முதல் பெண் பிரதமராவார். ஆனால், 2013 ஆம் ஆண்டில், கெவின் ரட், ஜூலியாவிடம் இருந்து பதவியைப் பறித்து, மீண்டும் பிரதமரானார். அடுத்து கெவின் ரட்டின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, டோனி அபோட் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த 2015 ஆம் ஆண்டில் டோனியைப் பதவியிலிருந்து தூக்கியெறிந்து, மால்கம் டர்ன் புல் பிரதமரானார். சிறிது காலத்தில், டர்ன்புல்லுக்கும் அதே நிலை ஏற்பட்டது. கடந்த ஓகஸ்டில் டர்ன்புல் பதவியிலிருந்து இறக்கப்பட்டு, மொரிசன் பிரதமர் ஆக்கப்பட்டார். ஆட்சிக்கவிழ்ப்பைத் தடுக்க, சட்டம் கொண்டு வர முயன்றும்தோற்றுப்போனது, லிபரல் கட்சி. இவ்வளவுக்கும் தேர்தல் ஜனநாயகத்தில், அவுஸ்திரேலியா முன்னணி நாடாகத் திகழ்கிறது. அங்கு வாக்களிப்பது கட்டாயம். தவறினால், 20 டொலர்கள் வரை அபராதம் செலுத்த நேரிடும். அதனால், நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், 96.8 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.



மனைவியுடன் பில் ஷார்டென்

தற்போது வெற்றி பெற்றுள்ள கூட்டணி, 'பொருளாதார ஸ்திரத்தன்மை, வேலைவாய்ப்பு, குடியேற்றத்தைக் குறைப்பது, பருவநிலை, சூழல் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது...' உள்ளிட்ட வாக்குறுதிகளை அளித்துள்ளது. இவை நிறைவேற்றப்படுமா என்பது அரசின் ஸ்திரத்தன்மையைப் பொறுத்துத்தான் இருக்கிறது. 'எனக்கு அற்புதங்களில் நம்பிக்கை உள்ளது' என்று சொல்லியிருக்கிறார், பிரதமர் மொரிசன்.

அவுஸ்தி ரேலியாவில் ஒருவர் பிரதமர் பதவியில் நீடிப்பதும்கூட அற்புதமாகத்தானே இருக்கிறது!



# சீனாவின் கழுகுக் கண் 45 கிலோ மீற்றருக்கு யாரும் தப்ப முடியாது

இந்த கமரா மூலமாக 45 கி.மீ தூரத்திலிருக்கும் பொருளைக் கூட அடையாளம் கண்டுபிடிக்க முடியும். இதை சீனா அதன் கண்காணிப்பு கட்டமைப்பை வலுப்படுத்த பயன்படுத்தக்கூடும்.

கண்காணிப்புக் கமராவில் படம் பிடிக்கப்பட்ட புகைப்படங்களை எல்லாம் பார்க்கும்போது பலருக்கும் தோன்றும் கேள்வி, "இது ஏன் தெளிவில்லாமல் இருக்கிறது?" என்பதாகத்தான் இருக்கும். இன்று பெரும்பாலான இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் உதவியுடன் சம்பவங்களின்போது என்ன நடந்திருக்கும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அதேநேரம் கண்காணிப்புக் கமராக்களில் எடுக்கப்படும் காட்சிகள் தெளிவில்லாமல் இருப்பது, படம் பிடிக்கும் பரப்பளவு குறைவு எனச் சில குறைபாடுகளும் இதில் இருக்கின்றன. ஆனால் தற்போது சீனாவில் ஒரு கண்காணிப்பு கமரா தற்போது இருப்பவற்றையெல்லாம் மிஞ்சும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

45 கி.மீ.தொலைவில் இருந்தாலும் படம் பிடிக்கும் ஷாங்காய் நகரில் இருக்கும் சீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஷெங்- பிங் லீ மற்றும் அவரது குழுவினர் தான் இந்த கமரா தொழில்நுட்பத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தக் கமரா மூலமாகக் கிட்டத்தட்ட 45 கி.மீ தூரத்தில் இருக்கும் பொருள்களைக் கூடச் சரியாக அடையாளம் கண்டறிய முடியும். சராசரியான கண்காணிப்புக் கமராக்களின் அளவே இருக்கும் இது அவ்வளவு தூரத்திலிருக்கும் 23 இன்ச் அளவு இருக்கும் பொருள்களைக் கூடச் சரியாக அடையாளம் காட்டும் திறன் கொண்டது. இதை இவ்வளவு திறன் அதிகமாக இருக்கும் வகையில் உருவாக்குவதற்காக லேசர் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். கிட்டத்தட்ட இது ஒரு ரேடாரில் இருக்கும் தொழில்நுட்பத்தைப் போன்றதுதான். ரேடாரில் ரேடியோ அலைகள் பயன்படுத்தப்படும். அதேபோல இதில் லேசர் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கமராவிலிருந்து வெளிப்படும் லேசர் கற்றைகள் எதிரே இருக்கும் பொருளின் மீது பட்டு எதிரொலித்துத் திரும்பி வரும் போட்டான்களை உள்வாங்கி பொருள்களை அடையாளம் கண்டு கொள்கிறது. மேலும் இதிலுள்ள AI தொழில்நுட்பம் குறிப்பிட்ட பொருளிலிருந்து வரும் போட்டான்களை மட்டும் தனியே பிரித்து எடுக்கிறது. மற்ற இடங்களிலிருந்து வருபவற்றைத் தவிர்த்துவிடும் என்பதால் துல்லியமாக அடையாளப்படுத்த முடியும்.

1550 நனோ மீற்றர் அளவுள்ள லேசர் கற்றைகளே இதிலிருந்து வெளியாகும் என்பதால் மனிதர்களின் கண்களுக்கும் பாதிப்பிருக்காது. சீனாவில் காற்றில் மாசு அதிகம் என்பதால் அதிகாலை நேரங்களில் மூடுபனி இருக்கும், சாதாரண நேரங்களில்கூட காற்றின் அடர்த்தி அதிகமாகவே இருக்கும். இது போன்ற சூழ்நிலைகளில் சாதாரண கமராக்களால் தெளிவாகப்படம்பிடிக்க முடியாது. ஆனால் இந்தப் புதிய கமரா அது போன்ற சூழ்நிலைகளிலும் கூட சிறப்பாகச் செயற்படும். சாதாரண கமராக்கள் 2D போட்டோக்களை மட்டுமே உருவாக்கும். ஆனால் இதில் படம் பிடிக்கும் பொருட்களின் முப்பரிமாண வடிவத்தைக் கூட உருவாக்க முடியும். இதன் விலையும் குறைவு என்பதால் இதைத் தயாரிக்க குறைவாகவே செலவாகும். இராணுவப் பயன்பாடு, ட்ரோன்கள் மற்றும் ரிமோட் சென்ஸிங் ஆகியவற்றுக்கு இந்தப் புதிய கமரா உதவும். இதைத் தவிர்த்து சீனாவுக்கு இது போன்ற அதிகசக்தி வாய்ந்த கமராக்கள் வேறு ஒரு விடயத்துக்காகவும் தேவைப்படுகின்றன.

உலகில் பொது மக்களைத் தனது கண்காணிப்பில் வைத்திருக்கும் நாடுகளை பட்டியலிட்டால் அதில் சீனாதான் முதலிடத்தில் இருக்கும். திரைக்கும் பின்னால் இருக்கும் இணையம் மட்டுமல்ல பொது இடம் வரை அரசின் கண்கள் மக்களைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றன. மக்களைக் கண்காணிக்கும் நோக்கில் உலகின் மிகப் பெரிய கண்காணிப்புக் கமரா அமைப்பை சில வருடங்களுக்கு முன்னால் நிறுவத் தொடங்கியது சீனா. இது மக்களின் தனியுரிமையைப் பற்றிய கேள்வியை எழுப்பினாலும் அதற்கெல்லாம் அரசு கவலைப்பட்டது போலத் தெரியவில்லை. சீனா முழுவதும் சி.சி.டி.வி. கமராக்கள் நிறைந்தே காணப்படுகின்றன. பொது இடங்களில் கூடும் மக்கள் அனைவருமே AI மூலமாகக் கண்காணிப்புக்கு உள்ளாகின்றார்கள். அந்தக் கட்டமைப்பை வலுப்படுத்த இது போன்ற கமராக்கள் உதவலாம்.

# பிரில் சட்டை முதல் ப்ளூ சட்டை வரை கிரிக்கெட் ஜெர்சியின் பரிணாம வளர்ச்சி

"கிரிக்கெட், ஒரு ஜென்டில்மேன் விளையாட்டு. அதனால் வெள்ளை நிற ஆடையில்தான் விளையாட வேண்டும்" என்கிற பிம்பம் பரவலாகப் பரவியிருந்த காலகட்டம் அது. இதுதான் கிரிக்கெட் விளையாட்டின் பாரம்பரிய உடை எனப் பலரால் போற்றப்பட்டாலும் இது முற்றிலும் மூடநம்பிக்கைகளின் நிழல் என்கிற வாதமும் ஒரு பக்கம் முன்வைக்கப்பட்டது. தற்போது வெவ்வேறு வண்ணங்களில் சீருடை அணிந்து விளையாடப்படும் இந்த விளையாட்டு, உண்மையில் ஜென்டில்மேன் விளையாட்டா, வெள்ளை உடையில்தான் விளையாடப்பட வேண்டுமா, வெவ்வேறு வண்ணங்களில் சீருடைகள் எப்போது தோன்றின? பார்க்கலாம்...



18 ஆம் நூற்றாண்டில்தான், முதல்முதலாக முறைப்படுத்தப்பட்ட கிரிக்கெட் அறிமுகமானது. அப்போது, பிரில்கள் இணைக்கப்பட்ட சட்டை, நன்கீன் கால்சட்டை, பட்டு மெட்டீரியலில் ஆன "ஸ்டாக்கிங்ஸ்" எனப்படும் காலுறைகள், பக்குள் ஷூ மற்றும் வெள்ளி அல்லது கோல்ட் நிற லேஸ் பொருத்திய ஜாக்கி



அல்லது மும்முனைத் தொப்பி போன்றவற்றை அணிந்து விளையாடினர். இங்கிலாந்தின் பழைமைவாய்ந்த "The Hambledon Club", "CC" என்று பதிக்கப்பட்ட பட்டன் பொருத்திய நீல வண்ண Coat-ஐ பயன்படுத்தினார்கள்.

19 ஆம் நூற்றாண்டின் இடையில் கால்சட்டை, முழு கால்சட்டையாக மாறியது. ஆனாலும், சிலர் பாரம்பரிய உடை எனக் கருதிய கால்சட்டையைத்தான் உடுத்தி விளையாடினார்கள். பொதுவாக, அந்தக் காலத்தில் இருந்த வீரர்கள் மைதானத்துக்குச் செல்லும்போது, உயரமான **beaver hats** அதாவது மந்திரவாதிகள் பயன்படுத்தும் நீண்ட கறுப்பு அல்லது வெள்ளை நிறத் தொப்பியை அணிந்துதான் செல்வார்கள். விரைவிலேயே பெல்ட், கறுப்பு நிற ஆக்ஸ்ஃபோர்டு ஷூ, சட்டைகளில் இருந்த பிரில்ஸுக்குப் பதிலாக உயர்த்தப்பட்ட கொலர் மற்றும் "**Bow**" இணைத்து உடுத்த ஆரம்பித்தனர்.

1850 களில் உயரமான தொப்பி மறைந்து, இன்று வீரர்கள் பரவலாகப் பயன்படுத்தும் **flannel** மற்றும் **straw** (அம்பையர் அணியும் தொப்பி) தொப்பிகள் களமிறங்கின. 1812 ஆம் ஆண்டு, பிளேசர்களின் முன்னோடியான **flannelled** ஜாக்கெட்டுகள் முதன் முதலாகப் பயன்படுத்தினர்.



அந்தக் காலகட்டத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல விக்கெட் கீப்பரான **Thomas Lockyer**, முதல்முறையாக "கிரிக்கெட் கோட்" அணிந்து கிரிக்கெட் உலகில் மிகப்பெரிய டிரெண்டை அறிமுகப்படுத்தினார்.

1860களில் வெள்ளை நிற ஆடைகள், படிப்படியாக வண்ணங்கள் பெற ஆரம்பித்தன. ஆனால், பேட்டர்ன் அளவில் மட்டுமே இந்த மாற்றம். அதாவது, வெள்ளைச் சட்டையில் ஸ்ட்ரைப், செக்டு போன்ற பட்டன்களை பிரின்ட் செய்து அணியப்பட்டது. ஒவ்வோர் அணியும் வெவ்வேறு டிசைன்களை வடிவமைத்து உபயோகப்படுத்த ஆரம்பித்தனர். சட்டையில் மட்டும் வேற்றுமைகளைப் பின்பற்றிய இவர்கள், நாளடைவில் முழுக் கால்சட்டையின் நிறங்களிலும் வித்தியாசத்தைப் புகுத்தினர். 1985 ஆம் ஆண்டு வரையில் மட்டுமே வெவ்வேறு வண்ணங்களில் ஆன உடையை அணிந்தனர். அதன் பிறகு, வெள்ளை நிற ஆடையே பெரும்பாலானோரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதையே உலகளவில் அனைவரும் பின்பற்றவும் செய்தார்கள். வெள்ளை நிறத்துக்காகவே இதை "ஜென்டில்மேன் விளையாட்டு" என்று கௌரவப்படுத்தப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், முறைப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சீருடை அனைவராலும் பின்பற்ற ஆரம்பித்தது. விரைவிலேயே, மென்மையான வெள்ளை நிற தொப்பி, ரப்பர் பூட்ஸ், ஸ்லீவ்லெஸ் ஸ்வெட்டர் போன்றவை வடிவமைக்கப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரர்களின் நலனை மனதில் கொண்டு ஹெல்மெட், வெவ்வேறு நிறத்திலான சீருடை, ஸ்பைக் ஷூ, ஸ்கின்-சூட்ஸ், கூலர்ஸ் போன்றவற்றை கிரிக்கெட் உலகம் அறிமுகம் செய்தது. இதன் பிறகே ஒவ்வோர் உலகக் கோப்பைக்கும் வித்தியாசச் சீருடைகளை அறிமுகம் செய்து உடுத்த ஆரம்பித்தனர். அவற்றில் இந்திய சீருடைகளின் பரிணாம வளர்ச்சியைப் பாப்போம்.


1985 ஆம் ஆண்டு இந்திய அணி, வெள்ளைச் சீருடையிலிருந்து நீலம் மற்றும் மஞ்சள் நிற ஸ்ட்ரைப்டு ஜெர்ஸிக்கு மாறியது. ஸ்பான்ஸர் பெயர், எண்கள் போன்ற எந்தவித வாக்கியமும் இல்லாமல் எளிமையான ஜெர்ஸியாக இது இருந்தது. 1992 இல், நேவி அல்லது அடர்ந்த நீல நிற டீஷேர்ட்டின் தோள்பட்டைகளில் மல்டிகலர் ஸ்ட்ரைப் பட்டன் டிசைன் செய்யப்பட்ட ஜெர்ஸியைத் தேர்வுசெய்தது இந்தியா. இந்தச் சமயத்தில்தான் சர்வதேச அணிகளுக்கு வெவ்வேறு நிறத்திலான சீருடைகளை வழங்க ஆரம்பித்தது கிரிக்கெட் குழு.



1996 இல் மஞ்சள் நிற கொலர், வானவில் வண்ணத்திலான அம்புகளை ஸ்லீவ்களிலும் சட்டையின் மேல் பகுதியிலும் பதித்த லைட் ப்ளூ ஜெர்ஸி பின்பற்றப்பட்டது. இந்தப் பட்டன், சிறியளவு மாற்றங்களுடன் 1999 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. இது, மஞ்சள் வண்ணப் பறவையை சட்டையில் பதித்தது போன்ற தோறணை தரும்விதமாக டிசைன் செய்யப்பட்டிருந்தது. 2003 ஆம் ஆண்டு, இந்திய அணி மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. முன்பு பயன்படுத்தப்பட்ட மஞ்சள் நிறம், கறுப்பு நிறத்தால் நிரப்பப்பட்டது. இந்திய தேசியக்கொடியின் மூவர்ணத்தை ஜெர்ஸியில் பதித்து அதன் மேல் மஞ்சள் நிறத்தில் "**INDIA**" என்று பொறிக்கப்பட்டு, முற்றிலும் வித்தியாசத் தோற்றத்தைப் பெற்றது. டிராக் பான்ட்டுகளிலும் மூவர்ணத்தைப் பதிந்திருந்தது.

2007 ஆம் ஆண்டு, மூவர்ண பனல் ஜெர்ஸியின் ஓரத்தில் மாற்றப்பட்டு, நீல நிறத்தின் அடர்த்தி குறைக்கப்பட்டது. வித்தியாச பான்ட்டில் "**INDIA**" என்று பதிக்கப்பட்டது. முழங்காலில் சிறிய பட்ச் ஒன்றை இணைத்து முற்றிலும் ஃபேன்சி ரகமாகவே இந்த ஜெர்ஸி இருந்தது. 2011 ஆம் ஆண்டின் ஜெர்ஸி நிச்சயம் இந்திய மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்திருக்கும். அடர்ந்த நீல வண்ண ஜெர்ஸி மற்றும் டிராக் சூட்டில் ஒரேஞ்சு நிறம் படர்ந்திருக்கும் இந்தச் சீருடை, பலரின் ஃபேவரிட் பட்டியலில் இடம் பெற்றிருக்கும். 28 ஆண்டுகளுக்குப் பிறகு உலகக்கோப்பையை தன்வசமாக்கிக் கொண்ட "**Men in Blue**" நொடிகளை மறக்க முடியுமா!





2015 ஆம் ஆண்டின் ஜெர்ஸி மிகவும் ஸ்பெஷல். 33 சதவிகித ஜெர்ஸி மற்றும் டிராக் பான்ட், பிளாஸ்ரிக் போத்தலின் மறுசுழற்சியால் தயாரிக்கப்பட்டது. ஒரேஞ்சு வண்ணத்தில் "INDIA" என்று பொறிக்கப்பட்ட இந்த ஜெர்ஸி மிகவும் எளிமையாகவே இருந்தது.


# வல்லமை தாராயோ...

அன்பான சங்குநாத வாசகர்களே உங்கள் அனைவருக்கும் ஜிம்மிக் குட்டியின் அன்பு வணக்கங்கள் உரித்தாகட்டும். அருமையான காற்றுத் தொடங்கி விட்டுது. ஓமோம் மனிசரின்ரை வியர்க்குரு எல்லாம் கருகிப் போடுமாம். பாவங்கள் இந்த மனிசர். பத்து விரல் வாத்தியம் மாதிரிக் கண்ட கண்ட இடத்திலையும் ''கறட்டு வறட்டு'' எண்டுபிறாண்டிக்கொண்டு இருக்குதுகள். பெரிய கொடுமைதான். விசிறியின்ர கம்புப் பகுதியிலை இருக்கிற கருக்கு...அதாலை கூட வயசு போனதுகள் வறுகித் தள்ளி அதுவேறை காயம். ம்...வியர்வை வராமல் பார்த்துக் கொண்டால் வியர்க்குருவும் வராது தானே. தண்ணியும் காற்றும் கோடைக் கொடுமையைக் குறைக்க உதவும் தானே. இதைத்தானே மருத்துவ அதிகாரிகளும் சுகாதாரப் பரிசோதகர்களும் கூட்டம் போட்டு மைக்கைப் பிடிச்சு தொண்டைத் தண்ணி வத்தக் கத்துகினம். ம்...இந்த நாலு கால் சொன்னதைக் கேக்காததுகள் அந்த இரண்டு கால் சொல்லுறதையே கேக்கப் போகினம். ம்... பெரிய வளவு சின்னாம்பி அண்ணை வாறார். ஒரு நாலு முழ வேட்டி, தோளிலை ஒரு துண்டு, கமக்கட்டுக்குள்ளை ஒரு குடை, கையிலை ஒரு பொல்லு. முந்தநாள் தான் தொண்ணூறை எட்டிப் பிடிச்சு வீறு நடை போட்டுக் கொண்டு வாறார். பெரியவர் எழும்பி வரவேற்றுக் கதிரையைக் காட்டி இருத்திப் போட்டுத் தானும் இருக்கிறார். நல்ல படிச்ச மனிசர்-பெரியவரை அண்ணை எண்டு தான் சொல்லுறவர். மனம் விட்டுப் பேசிச்சிரிச்சு சங்க இலக்கியங்களை அலசி ஆராய்வினம். அருமையான அன்பு.

பெரியவர் பாசத்தோடை தோளைத் தொட்டு சுக நலம் விசாரிக்கிறார்.

''என்ன சின்னாம்பி வெயிலுக்கை வெளிக்கிட்டு வந் திருக்கிறாய்...ஏதும் முக்கியமான விசயமோ...''

வந்தவர் சாய்ஞ்சு இருக்கிறார். சிரிக்கிறார். ஆனால் ஒரு வரண்ட சிரிப்பு. தண்ணிச் சொம்பை எடுத்து அண்ணாந்து குடிக்கிறார். ஒரு நடுக்கம் கூட இல்லை. ''ஓமோம் மனிச காரியம் சொல்லிக் கொண்டே பெரியவர். ஐஞ்சு பரப்புக் காணி கிடக்கு. ஐஞ்சு லட்சம் கடனும் கிடக்கு. முந்தின காலத்துச் சின்னாம்பி எண்டால் முன்பள்ளி கட்டுறதுக்கு அன்பளிப்பே செய்து போடுவன். என்ன செய்யிறது. இப்ப நிலைமை அப்பிடி இல்லை. இதுவரைக்கும் பிள்ளையளைப் பின் செல்லேல்லை. இனியும் செல்லுற எண்ணமில்லை. உங்களிட்டை உறுதியைத் தந்திட்டு தோட்டத்துக் கொட்டிலுக்கை துண்டை விரிச்சுப் போட்டு நீட்டி நிமிர்ந்து கிடக்கப் போறன். செத்து நாறினால் எடுத்துக் கொளுத்துவியள் தானே. ம்...பிடியுங்கோ...''



பெரியவர் பதறிப் போய் அவரின்ரை கையைப் பிடிச்சுக் கொண்டு ஏதோ சொல்லுறார்...

"இது என்ன சின்னப் பிள்ளைத்தனம்... எத்தினை தான தர்மமெல்லாம் செய்தனீ ...எத்தினை கல்யாணம் செய்ய உதவினியள் எண்டு காசாப் பணமா அள்ளிக் கொடுத்தனீ... என்ரை தோட்டத்துக் கொட்டிலுக்கை சாகப் போறியோ ... இப்பிடி விரக்தியாப் பேசிற அளவுக்கு ஒண்டும் நடக்கேல்லை. எல்லாம் எனக்குத் தெரியும். கொஞ்சம் பொறு, அவசரப் படாதை... அங்கை பார் நீ படிப்பிச்சு ஆளாக்கின பாலா, மோகன், ஆனந்தன் வாறாங்கள். கொஞ்சம் முகத்தைத் துடைச்சு ஆழமான மூச்செடுத்து நிமிர்ந்து இரு..." ஏதோ ஒரு ஆறுதல் கிடைச்ச மாதிரி முகத்தைத் துடைக்கிறார். எல்லாரும் வட்டமா வந்து இருக்கினம். ஏதோ கலந்து கதைக்கினம்... பெரியவர் பஞ்சாங்கம் எடுத்து ஏதோ பார்க்கிறார். பாலாவும் எட்டிப் பார்க்கிறார். பெரியவர் கதைக்கத் தொடங்கிறார்.

''பாலா வெள்ளிக்கிழமை மதியம் பன்னிரண்டு மணிக்கு முன்பள்ளிக்கு அத்திபாரம் போடுறம். சின்னாம்பி முதல் கல்லு எடுத்து வைக்கும். லோயரைக் கூப்பிட்டு ஆகவேண்டியதைச் செய். சின்னாம்பியின்ரை துணைவியாரின்ர பெயரையே வைப்பம். முன்னாலை ஒரு சரஸ்வதி சிலையும் வைப்பம். ஆனந்தன்...கல்லு, மண், சீமெந்து, மரம், ஓடு எல்லாம் உன்ரை பொறுப்பு. மோகன் சிறுவர் முற்றம் உன்ரை பொறுப்பு. நாங்கள் இரண்டு பேரும் ஒரு கொட்டில் போட்டு மேற்பார்வை செய்வம். என்னசின்னாம்பி மனிசியை நினைவுகூறுறது நல்ல சந்தர்ப்பம் தானே...''

பெரியவர்கொடுப்புக்கை சிரிக்கிறார். சின்னாம்பி அண்ணை அப்பிடியே விறைச்சுப் போய் நிமிர்ந்து பார்க்கிறார். கைகூப்பிக் கொண்டு நன்றியோடை பார்க்கிறார்... பெரியவர் சிரிக்கிறார்.

''அப்ப...என்ன மாதிரி என்ரை வளவுக் கொட்டிலுக்கை காலை நீட்டிப்படுத்து சாகப் போறியோ...? சரி இப்ப என்ன சொல்லுறாய்...முடிவுகளை எடுக்க முன்னம் ஆற அமர யோசிக்க வேணும். எடுத்தேன் கவிழ்த்தேன் எண்டு அறிவில்லாமல்... நீ ஒரு படிச்ச மனிசன். வாழ்ந்து காட்டிக் கொண்டு அந்த மாதிரி வாழ்ந்த மனிசன். வாழ வைக்கத் தெரிந்த உனக்கு வாழுறதுக்கு நாங்களே சொல்லித் தாறது. வாழுறதுக்கான உந்தல் எங்கடை மனதுக்க கிடக்குது. அந்த வல்லமையை இறைவனே தந்திருக்கிறான். ம்...எழும்பு வா காணியை அளப்பம். அம்மாளாச்சி இது என்ன கனவோ...கதையோ...கற்பனையோ சரி சரி...நானும் அவைக்குப் பின்னாலை முன்னாலை போகவெல்லே வேணும். போட்டு வாறன்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அவள் ஒரு தொடர்கதை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : கே.ஜே.ஜேசுதாஸ்



தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
இந்த ஊரென்ன சொந்த
வீடென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா? ஆ..
நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா? - இல்லை
என் பிள்ளை எனைக் கேட்டுப் பிறந்தானா?
தெய்வம் செய்த பாபம் இது போடி தங்கச்சீ
கொன்றால் பாபம் தின்றால் போச்சு
இதுதான் என் கட்சி

ஆதி வீடு அந்தம் காடு இதில்
நான் என்ன அடியே நீ என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

வெறும் கோவில் இதிலென்ன அபிஷேகம் உன்
மனமெங்கும் தெருக்கூத்து பகல் வேஷம்
கள்ளிக்கென்ன முள்ளில் வேலி போடி தங்கச்சி
காட்டுக்கேது தோட்டக்காரன் இதுதான் என் கட்சி

கொண்டதென்ன கொடுப்பதென்ன - இதில்
தாயென்ன மணந்த தாரம் என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதையென்ன?

தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம் - அது
தெரியாமல் போனாலே வேதாந்தம்
மண்ணைத் தோண்டித் தண்ணீர் தேடும்
அன்புத் தங்கச்சி
என்னைத் தோண்டி ஞானம் கண்டேன்
இதுதான் என் கட்சி

உண்மை என்ன பொய்மை என்ன இதில்
தேனென்ன கடிக்கும் தேளென்ன ஞானப் பெண்ணே

வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு

# திரைவிமர்சனங்கள்




சில பிரபலங்களின் கூட்டணி அமைய வேண்டும் என்று ரசிகர்களே ஆசைப் படுவார்கள். அப்படி ஒரு கூட்டணி தான் சூர்யா-செல்வராகவன்.

இவர்கள் முதன் முதலாக இணைந்து மக்களுக்கு கொடுத்திருக்கும் படம் NGK. இப்படம் எப்படி இருக்கிறது. பார்ப்போம்.

**கதைக்களம்**

சூர்யா படித்து நல்ல வேலைக்கு சென்று இயற்கை விவசாயம் செய்ய வருகிறார். அதை நன்றாகவும் செய்ய. ஆனால். பலரும் அதை எதிர்க்கின்றனர்.

அதற்கு உதவியாக எம்.எல்.ஏவிடம் போக. அவர் இந்த பிரச்சினையை தீர்க்க. என் கட்சியில் சேர்ந்துவிடு என்கின்றார். சூர்யாவும் வேறு வழியில்லாமல் கட்சியில் சேர்கின்றார்.

அதைத்தொடர்ந்து மெல்ல கட்சியில் முன்னேற. அவர் நினைத்த இடத்தை என். ஜி.கே. அடைந்தாரா? இது தான் மீதிக் கதை.

**படத்தை பற்றிய அலசல்**

சூர்யா எந்த கதாபாத்திரம் கொடுத்தாலும் மிரட்டி விடுவர்ர். அப்படி அவர் பக்கம் எந்த குறையும் சொல்ல முடியாது. முடிந்த அளவிற்கு நன்றாக நடித்துக் கொடுத்துவிட்டார். ஒரு கட்சியில் அடிமட்ட தொண்டனாக இருந்து அவர் பாத்ரூம் கழுவி முன்னேறுவது போல் காட்டியதெல்லாம் செல்வராகவன் டச்.

ஆனால். பிரச்சினை அதுதான். இப்படி காட்சிக்கு காட்சி செல்வராகவன் டச் இருக்கும் என்று தான் ரசிகர்கள் வந்திருப் பார்கள். இங்கோ செல்வராகவன் இந்த படத்தை எடுத்தாரா இல்லை ராம் கோபால் வர்மா எடுத்தாரா என்று ரேஞ்சில் போகிறது.

இடைவேளை நண்பன் உயிர் விடுவது. அரசியலின் யதார்த்தம் இரண்டே கட்சி தான். சமீபத்தில் நடந்த ஒரு அமைச்சரின் பாலியல் கேஸ் என ஒரு சில விடயங்கள் கவனிக்க வைக்கின்றது.


ஆனால் படத்திலேயே ஒரு வசனம் வரும் அரசியலில் ஆழம் பார்த்து கால் விட வேண்டும் என்று. அதேபோல் செல்வாவும் காதல். பேண்டஸியில் கலக்கிவிட்டு அரசியலில் கொஞ்சம் பார்த்து இறங்கியிருக்கலாம்.

சாய் பல்லவி கதாபாத்திரம் கொஞ்சம் செயற்கையாக இருந்தாலும் செண்ட் வாசனை பிடிப்பது. ராகுலிடம் அதட்டி பேசுவது என ஸ்கோர் செய்துள்ளார். ரகுல் படத்தில் எல்.கே.ஜி.ப்ரியா ஆனந்தை ஞாபகப்படுத்துகிறது.

சிவகுமார் விஜயனின் ஒளிப்பதிவு கவனிக்க வைக்கின்றது. அதையெல்லாம் விட யுவனின் பின்னணி இசையே படத்தின் மிகப்பெரிய பலம்.

படம் எதை நோக்கி செல்கிறது என்ற நோக்கம் பலருக்கும் தெரியவில்லை. திரைக்கதையில் தடுமாற்றம்.

மொத்தத்தில் இது செல்வராகவன் படமாகவும் இல்லை. சூர்யா படமாகவும் இல்லை.







---

பேய் படங்களுக்கென ஒரு ஆடியன்ஸ் கூட்டம் இயல்பாக இருப்பதுண்டு. ஏற்கனவே பல பேய்கள் தியேட்டரில் வந்து போயுள்ளன. சற்று வித்தியாசமாக மக்களை கவரும் வகையிலான படங்கள் மட்டும் களத்தில் நிற்கிறது. தற்போது வந்துள்ள லிசா பேய் யார் என பார்க்க பேய் வனத்திற்குள் செல்லலாம்.




**கதைக்களம்**

அஞ்சலிக்கு ஒரு அம்மா. தன் அப்பா அம்மாவை விட்டு பிரிந்து நகரத்தில் வாழும் இவருக்கு அஞ்சலி தான் எல்லாமே. இவரை குடும்பத்துடன் சேர்த்து வைக்க அஞ்சலி ஆசைப்படுகிறார். அவருக்கு ஒரு போய் பிரண்ட். இவருடன் அஞ்சலி தங்கள் தாத்தா பாட்டியை காண மலைக்காட்டிற்கு செல்கிறார்.

அங்கு ஒரு வயதான ஜோடியிடம் தாத்தா. பாட்டி உறவு கொண்டாடுகிறார். இதற்கிடையில் எதிர்பாராத சில அமானுஷ்யங்களை உணர்கிறார் அவரின் பாய் ஃபிரண்ட். இதை முதலில் பெரிதாக எடுத்துக்கொள்ளாத அஞ்சலி ஒரு நாள் திடுக்கிடும் விடயங்களை சந்திக்கிறார்.

ஒரு இடத்தில் கொலை செய்யப்பட்ட அழுகிய உடல்களை கண்டு பதறுகிறார். அந்த வீட்டில் நடந்தது என்ன. பேய் யார். உண்மையில் அவரின் தாத்தா பாட்டி என்ன ஆனார்கள் என்பதே முழுக்கதை.

**படத்தை பற்றிய அலசல்**

லிசா கரக்டரில் வரும் அஞ்சலி இப்படத்தில் முழுமையான ரோலில் நடித்துள்ளார். படத்தின் அநேக காட்சிகளிலும் வரும் அவரையே இப்படத்தில் ஒரு பெரும் சம்பவம் புரட்டி போட. பேயாக மாறியிருக்கிறார். பேயாக மாறும் வேளையில் அவருக் கான முக்கியத்துவம் குறைந்து விட்டதோ என தோன்றலாம்.

படத்தில் போய் பிரண்டாக வரும் இளம் நடிகர் சாம் ஜோன்ஸ் அஞ்சலியுடன் தன் நடி ப்பை ஈடுசெய்கிறார். யோகி பாபு படத்தின் சில காட்சிகள் உள்ளே புகுந்து சிரிப்பை வரவைத்துவிடுகிறார். அவர் அடிக்கும் கவுண்டர்கள் ரியல் லைஃபை பிரதிபலிக்கிறது.

அதே போல தெலுங்கு சினிமாவின் பிரபல காமெடி நடிகர் பிரம்மானந்தம் வரும் காட்சிகள் காமெடிக்கு கியாரண்டி. அவருக்கு குரல் டப்பிங் பேசிய எம்.எஸ். பாஸ்கர் அப்படியே ஒன்றிவிட்டார். பார்ப்பவர்களின் எனர்ஜி டவுனாகும் வேளையில் இவர்களின் காமெடி நமக்கு உற்சாகத்தை கூட்டுகிறது.

மலை வீட்டில் வாழும் மக்காரந்த் தேஸ்பாண்டே மிக முக்கிய கரக்டரை பெற்றுள்ளார். இவர் விஞ்ஞானி போல தோன்றினாலும் விபரீதமாக செயற்படும் விதம் கொஞ்சம் சீரியஸ்னஸை கூட்டுகிறது.

அறிமுக இயக்குனர் ராஜு வசந்த்தின் 3D முயற்சிக்கு ஒரு நன்றி. வரவேற்கிறோம். ஆனால் இன்னும் பிளான் செய்திருந்தால் சுப்பரான பொழுதுபோக்காக படம் அமைந்திருக்கும். முதல் பாதி மிக நீளம். எப்போது முடியும் என தோன்ற வைக்கலாம்.

ஆனால் இரண்டாம் பாதியில் எதிர்பாராத வேளையில் அவர் வைக்கும் டிவிஸ்ட் கொஞ்சம் ஆர்வத்தை கூட்டுகிறது. முடியப்போகும் நேரத் தில் மேலும் பிளாஷ் பேக் வருவது கொஞ்சம் பின்வாங்க வைக்கிறது.

ஆனால் அதிலும் ஒரு நல்ல மெசேஜ் சொல்ல முயற்சி செய்கிறார். ஒரு பேய் இருக்கும் போதே வேறொரு பேய்க்கான ஸ்டோரி ஓட எதையோ ஸ்கிப் ஆகி போன ஒரு பீல்.

3D படத்திற்கான ஒளிப்பதிவு. எடிட்டிங் ஓகே. திடீரென வரும் பேய் கை. கால்கள் நம்மை ஒரு நிமிடம் பதறவைக்கிறது.



யோகி பாபு, பிரமானந்தத்தின் காமடி காட்சிகள் வேற லெவல்.

பெரியவர்களை திடுக்கிட வைக்கும் திடீர் பேய் எண்ட்ரி ரியல் பீல்

**பலய்ஸ்**

படத்தின் நீளம் அதிகமாக இருப்பது போன்ற உணர்வு. பிளானிங்மிஸ் ஆகி விட்டதோ என கேள்வி.

மொத்தத்தில் லிசா ஓகே. அவளை பார்த்தால் கொஞ்சம் பயம் தான்.

# மீண்டு எழத்துடிக்கும் இனமொன்றின் வலியைச் சுமந்து நிற்கும் நாவல்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ள 'அவன்' எப்படி மதிப்பீடுகள் எதுவுமற்று கொலைகள் செய்வதை ஏற்றுக் கொண்டான் என்பது, வாசிப்பின் வழியாகச் சாத்திரி முன்வைக்கும் அடிப்படையான கேள்வி. சயந்தன் எழுதிய முதல் நாவலான 'ஆறாவடு', போரின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்திய அமைதிகாப்புப் படையின் நுழைவு தொடங்கி, ரணில் விக்கிரமசிங்கவின் அமைதி முயற்சியிலான காலகட்டத் தின் பின்புலத்தில் சராசரியான ஈழத் தமிழரின் வாழ்க்கையும் போரும் எப்படிப் பின்னியுள்ளன என்று நாவல் விபரிக்கிறது.

ஈழ விடுதலைப் போர்ச்சூழலை, விடுதலைப் புலிகள், சிங்கள அரசு மற்றும் ராணுவம், பிற போராளி இயக்கங்கள், இந்திய அமைதிகாப்புப் படை, அமைதிக்கான முயற்சியை மேற்கொண்ட நோர்வே, ஜப்பான் நடுநிலையாளர்கள் எனப் பிரச்னையை வேறுபட்ட கோணங்களில் அணுகியுள்ள சயந்தனின் எழுத்து, இன்னொரு நிலையில் போரின் வலியைப் பேசுகிறது.

நீர்கொழும்பிலிருந்து கடல் வழியாக இத்தாலி சென்று, அங்கிருந்து பிரான்ஸ் செல்ல திட்டமிடுகிற முன்னாள் விடுதலைப் புலியைப் பற்றிய விவரிப்பில், 'இவன்' எனக் குறிப்பிடுவது, யாருக்கும் நிகழலாம் என்பதன் குறியீடு. ஒருபுறம் யுத்தம் இடைவிடாமல் தமிழர்களைத் துரத்துகிறது. இன்னொரு புறம் சிங்களப் பேரினவாத அரசின் அதிகாரமும் வன்முறையும். விளைவு, ஆறாத வடுக்கள்.

புலிகள் இயக்கப் போராளியான வெற்றிச்செல்வியின் 'போராளியின் காதலி' நாவல், போர்க்களத்தின் பின்புலத்தில் பணியாற்றுகிற மருத்துவர்கள், செவிலியர்கள் பற்றிய விபரிப்பின் ஊடாகக் காதலைச் சொல்கிறது. எளிய மொழியில் சொல்லப்பட்டிருக்கும் நாவலின் கதை சொல்லல், நெடிய ஈழப்போரினால் காயம் அடைந்தவர்களின் வலியையும் இழப்பையும் பதிவாக்கியுள்ளது. சிலுவையில் அறையப்பட்ட ஏசு, 'ஏன் தேவனே! என் னைக் கைவிட்டீர்' எனக் கதறியது போல முள்ளிவாய்க்காலில் ஆதரவற்றுக் கதறிய தமிழர்களின் அவலமும் வேதனையும் காற்றில் மிதக்கின்றன.

ஷோபாசக்தி, 'BOX கதைப் புத்தகம்' மூலம், தொடர்ச்சியறு முறையில் கதைசொல்கிறார். இயக்கத்தினரும் சிங்கள இராணுவத்தினரும் உடல்கள்மீது நடத்துகிற வதைகள் கதையெங்கும் ததும்புகின்றன. நிர்வாணமாக்கப்பட்ட பெண்ணுடலை வைத்து, இராணுவத்தினர் நடத்துகிற வன்புணர்ச்சி உள்ளிட்ட கொடூரங்களின் பின்னர் பொதிந்திருக்கும் வன்முறை மனநிலை முக்கியமானது. BOX எனப்படும் பெட்டி வடிவத்தில் தனிமைப்படுத்திச் சகமனிதர்கள் கொல்லப்படல் அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுதல் நடைபெறுகிறது.

பண்டார வன்னியன், புலிகள், பெரிய பள்ளன் குளம் கிராமத்தினர் எனப் பெட்டியடிக்கப்பட்டது உக்கிரமான மொழியில் விபரிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் அரசியல் செயற்பாடுகளுடன் முரண்படுகிற ஷோபா சக்தியின் முந்தைய 'கொரில்லா' நாவலுடன் ஒப்பிடுகையில், BOX நாவலின் கதையாடலில் நம்பகத்தன்மை குறைவாக உள்ளது. ஈழப்போர் குறித்து புனிதமான மதிப்பீடுகளை உருவாக்கி, பிம்பங்களைக் கட்டமைக்கிற தமிழகத்துக் காகிதப் புலிகளுக்கு BOX நாவல், நிச்சயம் அதிர்ச்சியளிக்கும்.

ஈழத்துப் போரின் விளைவுகளைப் பதிவாக்கியுள்ள ஸர்மிளா ஸெய்யித்தின் 'உம்மத்' நாவல், பெண்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களைக் களனாகக் கொண்டுள்ளது. போர்க் காலத்தின்போது மக்களுக்கேற்பட்ட துயரங்களின் பின்புலத்தை விபரிக்கிற நாவல், போரைக் கண்டனம் செய்கிறது. போர் என்பது எப்போதும் மக்களின் நலனுக்கு எதிரானதுதான். அதிகாரத்திற்கான போட்டியின்போது நடைபெறுகிற போரின் கொடூரங்கள் அளவற்றவை.

ஆனால், ஹிட்லர் போன்ற பாசிஸ்ட் அராஜகமாக யுத்தத்தைத் திணிக்கும்போது, நேர்மையான யுத்தத்தினால் தான் அதை முறியடிக்க முடியும். ஐம்பதுகள் முதலாகச் சிங்கள மொழியைத் தேசிய மொழியாக அறிவித்ததுடன், புத்த பிக்குகள் இலங்கை அரசியலை முழுக்க புத்த மதத்துடன் இணைத்து, தமிழர்ப் பண்பாடு மீது ஏற்படுத்திய பாதிப்புகள் பற்றி நாவலாசிரியைக்கு எதுவும் தெரியாதா?ஈழப்போரின் மோசமான விளைவுகளை மட்டும் முன் வைத்து, செயற்கையான மொழியில் வறண்ட சம்பவங்களுடன் எழுதப்பட்டுள்ள நாவல் தட்டையானது, மொக்கையானதும்கூட.

'ஒரு சல்லிக்கும் பயனற்ற உதவாக்கரைச் செயல்' என்பது விமல் குழந்தைவேல் எழுதியுள்ள 'கசகறணம்' நாவலின் பொருள், குறியீட்டு நிலையில் இயக்கத்தினரின் போராட்டத்தை விமர்சிக்க முயல்கிறது. கிழக்கிலுள்ள அம்பாறை மாவட்டத்தை முன்வைத்து எழுதப்பட்டுள்ள நாவலில், மதத்தால் வேறுபட்டிருந்தாலும் தமிழர்களும் தமிழ் பேசும் முஸ்லிம்களும் பரஸ்பர நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இணைப்பாக




இருந்த சந்தை எரிக்கப்பட்ட பின்னர், சூழலில் பெரிய மாற்றம் ஏற்படுகிறது. கிழக்கு மாவட்ட அரசியல், சமூகச் சூழலுக்குப் பொருத்தமற்ற நிலையில் நுழைந்த இயக்கங்களினால் பிளவுண்ட சமூகங்களின் கதைதான் 'கசகறணம்' நாவலின் மையம். குழந்தைவேல், ஈழப் போராட்டத்தின் மறுபக்கத்தைப் பதிவாக்கியுள்ளார். 'ஏன் இப்படியெல்லாம் நடந்தன?' என்ற கேள்விகளின் பின்புலத்தில் வாசு முருகவேல் எழுதியுள்ள 'ஜெப்னா பேக்கரி', சுயவிமர்சன நோக்கில் சம்பவங்களை விபரிக்கிறது. ஈழப் போராட்டத்தின் தொடக்கக் காலத்தில், தமிழைத் தாய்மொழி யாகக்கொண்ட இஸ்லாமிய இளைஞர்கள் இயக்கங்களில் இணைந்திருந்தனர்.

இந்திய அமைதிகாப்புப் படையினரின் திட்டமிட்ட சதியினால் இஸ்லாமியர்களில் ஒரு பிரிவினர், தமிழ் அடையாளத்திலிருந்து பிரிந்து, போராட்டத்திற்கு எதிரானவர்களாக மாற்றப்பட்டனர். புலிகள், இஸ்லாமியர்களை உடனடியாகப் பூர்வீக பூமியிலிருந்து புலம்பெயர்ந்திட ஆணையிட்ட வரலாற்றுச் சம்பவத்தின் பின்புலத்தில், நாவல் புதிய பேச்சுகளை உருவாக்கிட முயன்றுள்ளது. பிரச்சினையின் பன்முக அம்சங்கள், செறிவான வட்டார மொழியில் கசப்புத் தோய்ந்திட வெளிப்பட்டுள்ளன.

தீபச்செல்வனின் 'நடுகல்' நாவல், ஈழப்போராட்டத்தின் வீழ்ச்சி குறித்து தீர்க்கமான பரிசீலனை இல்லாமல், உணர்ச்சி வயப்பட்ட நிலையில் புலிகளைப் போற்றுகிற வகையில் பிரசுரமாகியுள்ளது. போராட்டத்தின்போது, சிறுவர்கள்கூட இயக்கத்தில் சேர்ந்திடத் துடித்தனர் எனத் தொடங்கிடும் கதையில், புலிகள் எப்படியெல்லாம் தனிப்பட்ட அரசாங்கம் நடத்தினர் என்பது மேலோட்டமாகச் சொல்லப் பட்டுள்ளது.

அழுத்தமாகச் சம்பவங்களை விபரிக்காமல், கேள்விப் பட்ட தகவல்களால் நிரம்பி வழிந்திடும் கதையாடல், செயற்கையான மொழியில் விரிந்துள்ளது. புறநிலையில் எழுதப்பட்டிருக்கிற 'நடுகல்' நாவல், தமிழகத்தில் புலிகள், பிரபாகரன் என்று வெறுமனே கதைத்திடும் 'சீமான் அன் கோ'வினர் உள்ளிட்ட தமிழ்த் தேசியவாதிகளுக்குப் பெரிதும் பயன்படும்.

குருதி சிந்திடும் போரில், அதிகாரம் கைக்கு வந்து விட்டால் அது வெற்றி. அதிகாரத்திற்கு அடிபணிய நேரிட்டால் அது தோல்வி. யோசிக்கும் வேளையில், வெற்றிக்கும் தோல்விக்குமான முரணாகத்தான் சமூக வரலாறு இருக்கிறது. ஈழப்போரின் இறுதியில் முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற கூட்டுக்கொலைகளுக்குப் பின்னர், சிங்கள இராணுவத்திடம் சரணடைந்த மக்கள் திரளுடன் இயக்கப் போராளிகளும் இணைந்தனர். மக்களிலிருந்து பிரித்து, தனியாக்கப்பட்ட முன்னாள் பெண் புலிகளும் போராளிகளும் இராணு வத்தினரின் விசாரணைக்கு உள்ளாயினர். தமிழீழம் குறித்த கனவுகளுடன் ஆயுதமேந்தி ராணுவத்தை எதிர்த்து வீரத்துடன் போராடியவர்கள், தோல்வி தந்த கசப்புடன் எதிரிகளிடம் அடிமைப் பட்டிருப்பது ஏற்படுத்தும் மனவேதனை அளவற்றது.

இத்தகைய சூழலின் பின்புலத்தில், குணா கவியழகன் எழுதியுள்ள 'விடமேறிய கனவு' நாவல், ஈழத் தமிழரின் தீராத வலியின் பதிவாகும். போரின் முடிவு புலிகளுக்கு முன்கூட்டியே தெரிந்த பின்னரும் போராளிகள் களத்தில் நின்றனர். விசாரணையின் முடிவில் கொல்லப் படுவோமா? உயிர் தப்ப ஏதாவது வழி இருக்குமா? போன்ற கேள்விகளுடன் அடிப்படை வசதியற்ற முகாமில் வாடி வதங்குகிற போராளிகளின் அவலத்தைப் பேசுகிறது நாவல். கட்டுப்பாடான விடுதலை இயக்கம் எப்படித் தோற்கடிக்கப்பட்டது என்பதை வெவ்வேறு கோணங்களில் விவாதிப்பது, ஈழப்போரின் தோல்விக்கான காரணங்கள் பற்றிய புரிதலை ஏற்படுத்துகிறது.

ரஷ்யன் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள போர் குறித்த நாவல்கள், போர்களின் பேரழிவையும் கையறு நிலையையும் பதிவாக்கியுள்ளன. தாய்நாட்டைக் காப்பதற்காகப் போராடுகிற படைவீரர்களையும் பொதுமக்களையும் முதன்மைப்படுத்துகிற நாவல்களில்கூட போரின் கொடூரமான விளைவுகள் பதிவாகியிருக்கும். ஈழப்போரைச் சித்திரிக்கிற பெரும்பாலான நாவல்கள், போரைப் புனிதமாக்குகிற நோக்கில் கதைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் போர்த் தந்திரங்களைச் சிலாகித்து விரிகிற கதையாடலின் பின்னர், பிரபாகரனின் போர்த் திட்டத்தைப் போற்றிக் கொண்டாடுதல் பொதிந்துள்ளது. ஷோபா சக்தி, சாத்திரி, சயந்தன் போன்றோரின் நாவல்கள், போர் பற்றிய புனைவுகளைக் கட்டுடைத்திட முயன்றுள்ளன. சாதாரணமான காதல் பின்புலத்தில் சொல்லப்பட்டுள்ள 'பார்த்தீனியம்', காதலை வெளியே சொல்லாமல் இருந்து, அதைச் சொல்கிற நாளில் யாழ்ப்பாணத்தில் புலம்பெயர்ந்திட நேர்கிற காதல் ஜோடிகள் எனத் தொடங்குகிற 'கர்ப்ப நிலம்' போன்ற நாவல்கள் வாசிப்பில் அலுப்பைத் தருகின்றன. ஈழப்போரில் பங்கேற்றவர்களின் அனுபவங்கள் அல்லது போர் பற்றிய சம்பவங்களைக் கேட்டு எழுதப்பட்டுள்ள சில நாவல்கள், வெறுமனே தகவல்களின் தொகுப்பாக மாறியுள்ளன.

அவை, ஈழப் போரின் தோல்வி குறித்துத் தேவையில்லாமல் குற்ற மனநிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற தமிழகத் தமிழர்களைத் தொந்தரவு செய்கின்றன. போருக்குப் பின்னர் ஈழத்தமிழர்களின் அன்றாட வாழ்க்கை, மேனாள் போராளிகளின் இன்றைய நிலை, தமிழர்-சிங்களவர் உறவு, மலையகத் தமிழர் வாழ்க்கை பற்றி நாவல்க்ள் வெளிவர வேண்டியுள்ளது.

குட்டித் தீவான இலங்கையில், தமிழ்த் தேசிய இனத்தை அழிப்பதற்கான சிங்களப் பேரினவாத அரசினை எதிர்த்த ஈழத்தமிழர்களின் போராட்டங்கள் தோற்றுப்போய்விட்டன என்பதுதான் கசப்பான உண்மை. இன்று தமிழர்கள், அதிகாரத்தில் இருக்கிற சிங்கள ஆட்சியாளர்களுடன் மட்டுமன்றி, பெரும்பான்மையினரான சிங்களவர்களுடன் இயைந்து போக வேண்டிய அவலநிலையில் வாழ்கின்றனர். தோல்வி ஏற்படுத்திய வெறுமையும் கசப்பும் மனதுக்குள் நிரம்பி வழிந்தாலும், தமிழர்கள் அடுத்தகட்ட வாழ்க்கையை அன்றாடம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழரின் பாரம்பர்யமான நிலவெளியில் நடைபெறுகிற சிங்களக் குடியேற்றமும், சிங்கள மொழித் திணிப்பும் எற்படுத்துகிற வெறுப்புணர்வுடன் வாழ்கிற தமிழர்களின் நிலை, துயரமானது. ஈழப்போராட்டத்திற்கு இந்திய அரசும், தொப்புள் கொடி உறவுகளான தமிழகத்து அரசியல் பிழைப்பு வாதிகளும் உதவுவார்கள் என்ற மாயை தகர்ந்துவிட்ட சூழலில், ஈழத்தமிழர்கள் சுயமான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரமிது.

ஈழப்போரின் பின்புலத்தில் எழுதப்பட்டுள்ள அரசியல் நாவல்கள், நடந்து முடிந்த சம்பவங்களின் வரலாற்றுப் பதிவுகளாக விளாங் குகின்றன. 30 ஆண்டுகள் நடைபெற்ற ஈழப்போராட்ட வரலாற்றையும் சம்பவங்களையும் நவீன வாழ்க்கையின் பாணர்களான நாவலாசிரியர்கள், கதையாடல்களின் வழியாக மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகின்றனர். (முற்றும்)

நன்றி: தடம்

# தமிழகமும் ஈழப் போராட்டமும்

## அதிர்வுகளும் ஆதரவுகளும் ஆதங்கங்களும்

ஈழப்பிரச்சினைக்கும் தமிழக அரசியலுக்குமான உறவு என்பதற்கு நீண்டகால வரலாறு உண்டு. ஈழத் தந்தை என்றழைக்கப்படும் செல்வநாயகம் பெரியாரைச் சந்தித்தது. அண்ணா காலத்திலேயே ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து. தி.மு.க. தீர்மானம் போட்டது ஆகிய வரலாற்றுப் பதிவுகள் இருந்தாலும், 80களுக்குப் பிறகுதான் ஈழப்பிரச்சினை தமிழக அரசியலில் தாக்கம் செலுத்த ஆரம்பித்தது. சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக ஈழத்தில் உருவான ஆயுதக்குழுக்கள், 1983 இல் நடந்த ஜுலை இனப்படுகொலைகள் ஆகியவற்றின் விளைவாக, ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து தமிழக மக்கள் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். இந்திராகாந்தி அரசும் பல்வேறு போராளி அமைப்புகளுக்கு ஆதரவு தந்து ஆயுதப் பயிற்சியும் அளித்தது. அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தந்து நிதியுதவியும் அளித்தார். தொடக்கக் காலத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி. 'டெலோ' ஆதரவாளராக இருந்தார். சபாரத்தினம் கொலை உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அவர் விமர்சித்தாலும், தி.மு.கவினர் பெரும்பாலும் புலி ஆதரவாளர்களாகவும் இருந்தனர்.

அரசியலைத் தாண்டி ஈழ இயக்கங்களுக்கு ஆதரவுத் தளத்தை உருவாக்கியதில் மிகப்பெரும் பங்கு வகித்தவர்கள் பெரியாரிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களே. தமிழகத்தில் பிரபாகரன் என்று ஒரு குழந்தைக்குப் பெயர் இருந்தால், அந்தக் குழந்தையின் தந்தை தி.க. அல்லது தி.மு.க.காரராக இருக்க வேண்டும். பின்னாளில், விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டபோது,



அதிகமும் நெருக்கடிகளைச் சந்தித்தவர்கள் திராவிடர் இயக்கத்தவர்களே. ராஜீவ் கொலைவழக்குக் குற்றவாளிகளில் ஒருவராகத் தன் இளமையையும் வாழ்க்கையையும் தொலைத்து வாடும் பேரறிவாளனின் குடும்பமே திராவிடர் கழகப் பின்னணி கொண்டது. தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை. ராமகிருஷ்ணன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இருவரும் ஈழ ஆதரவுக்காகத் தனிப்பட்ட முறையில் சந்தித்த இழப்புகளும் நெருக்கடிகளும் ஏராளம்.

தி.மு.க., ஈழப்போராளிகளுக்குப் பல உதவிகளைச் செய்தாலும், தமிழகத்தில் ஈழப்போராளிகளின் சகோதர மோதல், அதன் உச்சமான பத்மநாபா கொலை, ராஜீவ் படுகொலை, ஜெயின் கமிஷன் விசாரணை, சுப்புலெட்சுமி ஜெகதீசன் போன்ற தி.மு.கவினர் கைது ஆகியவை கொடுத்த நெருக்கடிகள் காரணமாக, வெளிப்படையான ஈழப்போராட்ட ஆதரவைத் தி.மு.க. கைவிட்டது. எம்.ஜி.ஆர் சாகசவாத மனநிலையிலும் மனிதாபிமான அடிப்படையிலும் விடுதலைப்புலிகள் ஆதரவாளராக இருந்தாரே தவிர, ஈழ ஆதரவுக் கருத்தியலைத் தன் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் வரை அவர் கொண்டுசேர்க்கவில்லை.

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.கவின் பொதுச்செயலாளரான ஜெயல லிதா, ஈழப்பிரச்சினையில் எம்.ஜி.ஆருக்கு முற்றிலும் எதிர்த்திசையில் இயங்கினார். கருணாநிதி ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சிறுசிறு சம்பவங்களையும் சுட்டிக்காட்டி, 'விடுதலைப் புலிகள் ஊடுருவல், தி.மு.க ஆட்சியைக் கலைக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார். இதுவும் தி.மு.க.வுக்கு நெருக்கடியைக் கொடுத்தது. புலிகளின் தீவிர ஆதரவாளரான வைகோ, தி.மு.கவை விட்டு வெளியேற்றப்பட்டபோது, 'கருணாநிதியைக் கொல்ல புலிகள் சதித்திட்டம் தீட்டியதாக' உளவுத் துறை அறிக்கையே காரணமாக முன்வைக்கப்பட்டது.

2009இல் ஈழத்தில் இனப்படுகொலை உச்சத்தை எட்டியபோது, தி.மு.க.தமிழகத்தில் ஆட்சியில் இருந்தது. காங்கிரஸ் கூட்டணியில் முக்கியப் பங்கு வகித்தபோதும், தி.மு.கவால் இனப்படுகொலைகளைத் தடுக்க முடியவில்லை. அதற்கான பின்னணிக் காரணங்களாகப் பல விடயங்கள் பல தரப்பால் முன்வைக்கப்பட்டாலும், உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் ஏதும் இல்லை. கருணாநிதியின் குடும்ப அரசியல், மாநில அரசின் வரையறுக்கப்பட்ட எல்லைகளைச் சுட்டிக்காட்டாமல் நடந்த அரசியல் நாடகங்கள் ஆகியவை கருணாநிதியின் அரசியல் பிம்பத்துக்குக் களங்கம் சேர்த்தன.

முள்ளிவாய்க்கால் அவலத்துக்குப் பிறகு, தமிழகத்தில் தமிழ்த் தேசிய அரசியல் புத்துயிர் பெற்றது எனலாம். ராஜீவ் படுகொலையை ஒட்டி, புலி ஆதரவாளர்களுக்கு இருந்த தடைகள் குறைந்து, பிரபாகரன் படத்துடன் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் நடந்தன. அதுவரை தீவிர புலி எதிர்ப்பாளராக இருந்த ஜெயலலிதா, 'தமிழீழமே தீர்வு' என்றார். 2011இல் முதல்வரான பிறகு, 'இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்', 'இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும்', 'ராஜீவ் கொலைவழக்குக் குற்றவாளிகளை விடுதலை செய்யவேண்டும்' போன்ற தீர்மானங்களைக் கொண்டுவந்தார். இவை, ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் ஜெயலலிதாவுக்கு நற்பெயரைத் தந்தது. இன்னொரு பக்கம் கருணாநிதியும் தி.மு.கவும் பல தீவிர ஈழ ஆதரவாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இசைப்பிரியா மற்றும் பாலச்சந்திரன் படுகொலைப் புகைப்படங்கள் வெளியான போது, தமிழகம் கொதிநிலையடைந்தது. முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு, தமிழக ஈழ ஆதரவாளர்களின் அரசியல் நகர்வுகள் இரு திசைகளை நோக்கி நகர்ந்தன. போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை முன்னிட்டுப் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றாலும், அவை போதிய வெற்றியடையவில்லை. தி.மு.க. எதிர்ப்பு என்பது திராவிட அரசியல் எதிர்ப்பாகி, சாதியத்தை ஆதரிக்கும் குறுந்தேசியப் போக்கும் உருவானது. இதன் விளைபொருளாக, சீமானின் அரசியலைச் சொல்லலாம். தொடக்கக் காலங்களில் பெரியாரிய இயக்க மேடைகளில் பேசி அறிமுகமான சீமான், முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பிறகு, திராவிட எதிர்ப்பு, தெலுங்கு, கன்னடம் பேசும் மக்களை வெளியே நிறுத்தும் தூயதேசியவாதம் ஆகியவற்றை முன்னிறுத்தினார். தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டே இந்திய அரசியல் சட்டகத்தை ஏற்றுக்கொண்ட தேர்தல் அரசியலில் இறங்கினார். இனப்படுகொலைக்கு நீதி கேட்பது மறைந்துபோய், புலிகளுடனான உறவை மிகைப் படுத்திப் பேசி கற்பனாவாத சாகச அரசியலை முன்வைத்தார். ஏற்கனவே திராவிட அரசியல் கட்சிகளின் ஊழல், குடும்ப அரசியல் ஆகிய வற்றால் வெறுப்புற்ற இளைஞர்கள் பலர் இந்த அரசியலால் ஈர்க்கப்பட்டனர். ஆனால், ஈழத்தமிழர்களுக்கு இது எந்தவகையில் நன்மை செய்யும் என்று தெரியவில்லை.

இனப்படுகொலை முடிந்த பத்தாண்டுகளில், ஈழ ஆதரவாளர்கள் முன்நிற்கும் முக்கியமான கேள்விகள் இவை.

- இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்படும் சாத்தியங்கள் எவை?
- விடுதலைப்புலிகள்மீது பல்வேறு விமர்சனங்கள் இருந்தபோதும், சிங்களப் பேரினவாத அரசை எதிர்கொள்ளும் தமிழர் தரப்பாய்ப் புலிகள் இருந்தனர். வலுவான பிரதிநிதிகள் அற்ற தமிழ்ச் சமூகத்தின் அரசியல் எதிர்காலம் என்ன?
- ஜனநாயக மறுப்பு, சகோதரப் படுகொலைகள் போன்ற ஆயுதப் போராட்டத்தின் பக்கவிளைவுகள், ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்.முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளி ஆகியவற்றை இனிவரும் புதிய அரசியல் போக்குகள் கவனத்தில்கொள்ளுமா?
- இன்றைய உலகமயச் சூழலில், வளர்ந்த நாடுகள் இலங்கையைத் தங்கள் வணிக நலன்களுக்கான சந்தையாகப் பயன்படுத்திக்கொள்ளும் சூழலில், தமிழர்களின் நிலை என்ன?
- பௌத்த பேரினவாதத்துக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல்கள், சமீபத்தியக் குண்டுவெடிப்புக்கு இஸ்லாமியப் பயங்கரவாத இயக்கமொன்று பொறுப்பேற்றது ஆகியவை இலங்கை அரசியல் சூழலிலும் ஈழத்தமிழர் வாழ்விலும் என்ன தாக்கங்களை ஏற்படுத்தப் போகின்றன?

**என்ன சொல்கிறார்கள் ஈழ ஆதரவாளர்கள்?**

**பழ.நெடுமாறன் (தமிழர் தேசிய முன்னணி)**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த "ராஜபக்ஷ, மனித உரிமைகளை மீறியுள்ளார் என்பது அப்பட்டமாகத் தெரிந்தும், சர்வதேச நீதிமன்றத்தின் முன் அவர் நிறுத்தப்படவில்லை. முக்கியக் காரணம், சர்வதேச உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ள 144 நாடுகளில் ஏதோவொன்று புகார் அளிக்க வேண்டும். இந்தியா உட்பட எந்த நாடும் இலங்கைமீது இதுவரை புகார் அளிக்கவில்லை. மனித உரிமை கமிஷன், இலங்கைமீது எடுக்கும் நடவடிக்கைகளிலிரு ந்து காப்பாற்றும் முயற்சியையே இந்தியா செய்தது. அந்தக் கொடூரம் நடந்து 10 ஆண்டுகள் ஆகியும், தமிழர் பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவம் அகற்றப்படவில்லை. ஈழத்தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்ட விவசாய நிலங்கள் திரும்ப அளிக்கப் படவில்லை. மீன் பிடிக்க விதித்துள்ள தடை, நீக்கப்படவில்லை. சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் என்னவானார்கள் என்பது இதுவரை சொல்லப்படவில்லை. தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர் அகதி முகாம்களுக்கு, தமிழக அரசு மூலம் இந்திய அரசு உதவிகள் செய்கிறது. ஆனால், அவை போதாது. ஐ.நா. அகதிகள் ஆணையம் உலகம் முழுவதும் உள்ள அகதிகளுக்கு ஏற்ற உதவிக ளைச் செய்துவருகிறது.

(அடுத்த வாரம் தொடரும்)

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 184

# எத்தகைய தலைவலி ஆபத்தானது?



பெரும்பாலான தலைவலிகள் ஆபத்து அற்றவை. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற தலைவலி ஆபத்தானதாக அமைகின்றது. இவ்வாறான ஆபத்தான தலைவலிகளுக்குக் காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01.மண்டையோட்டுக் குழியினுள் அழுக்கம் அதிகரித்தல்.

02.சிலவகைத் தொற்றுக்கள் உதாரணம்: மூளை அழற்சி

03.இராட்சதக் கலநாடியழற்சி (Giant arteritis)

04.மண்டையோட்டுக் குழியினுள் ஏற்படும் குருதிப்பெருக்கு

05.மூளையமுன்னான் பாய்பொருளின் கனவளவில் ஏற்படும் குறைவு.

06.தலையில் அடிபடுதலின் பின்னரான தலைவலி

07.திடீரென ஏற்படும் கண்ணின் அமுக்க அதிகரிப்பு

08.மூளையில் ஏற்படும் கட்டிகள், சீழ்க்கட்டிகள்

மேற் கூறிய காரணிகளால் ஏற்படும் தலைவலிக்கு விசேட சிகிச்சைகள் அவசியமாகின்றன. ஏனெனில் மேற்கூறிய காரணங்கள் பாரதூரமான விளைவுகளைத் தரவல்லன. ஏன்? சில உயிராபத்தையே விளைவிக்கக் கூடியன.

* புதிதாக திடீரென்று தீவிரமான தலைவலி ஏற்பட்டால்

* முன் எப்போதும் எதிர்நோக்காத/ உணராதமுற்றிலும் வேறுபட்டதான தீவிரமான தலைவலி ஏற்பட்டால்

*தன்னுணர்வில் மாற்றம் ஏற்பட்டால் (Altered conciousnees)

* தீவிரகாய்ச்சல், வாந்தி இருப்பின்

* அண்மையில் தலையில் அடிபட்டிருப்பின்

*காலையில் எழும் போதே தலையிடி இருப்பதுடன் இருமும் போதோ அல்லது தும்மும் போது தலைவலி அதிகரிப்பின்

*பார்வையில் மாற்றம் ஏற்படின் (குனியும்போது/ வளை யும் போது/ இருமும்போது

உடனடி வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறான நோய் அறிகுறிகள் தலைவலிக்கான அடிப்படைக் காரணி உயிராபத்தை விளைவிக்க வல்ல நோய் நிலைமைகளால் ஏற்பட்டதென்பதை எடுத்தியம்புகின்றன.

## ஆபத்தற்ற தலைவலி வகைகள்

1.ஒற்றைத் தலைவலி (Migraine)

2.வேலைப்பளு காரணமாக ஏற்படும் தலைவலி (Tension Headache)

3.கிளஸ்ரர் தலைவலி (Cluster Headache)

என்பன சில ஆபத்தற்ற தலைவலி வகைகளாகும்.

### • ஒற்றைத் தலைவலி

பொதுவாக நாற்பது வயதுக் குட்பட்டவர்களிலே ஏற்படுகின்ற தலைவலியின் மற்றொரு வகையாகும். இது தீவிரமான தலைவலியை ஏற்படுத்தும். இடிப்பதுபோன்ற உணர்வு ஏற்படுத்தும் தலைவலியாகும். இதனுடன் சேர்ந்து வயிற்றுப் பிரட்டல், வாந்தி என்பன காணப்படலாம். இவ் வகைத் தலைவலி உடையோர் வழமையான வேலைகளில் ஈடுபட முடியாது.


### • வேலைப்பளு காரணமாக ஏற்படும் தலைவலி

மன அழுத்தம், காலநிலை மாற்றம், நித்திரை குழம்புதல், சொக்லேட், சீஸ், மதுபானம், அதிக வெளிச்சம், அதிகரித்தஒலி, அதிகரித்த அசைவுகள் போன்றன இவ்வகைத் தலைவலியைத் தூண்டவல்லன. ஒற்றைத் தலைவலியால் அவதியுறுவோர் மேற்சொன்ன காரணிகளைத் தவிர்த்தல் உசிதமானது. சிலருக்கு மருந்துகள் மூலம் குணப்படுத்த வேண்டிய தேவை ஏற்படலாம்.

### •கிளஸ்ரர் தலைவலி

இருபக்கத் தலையிலும் உணரப்படுகின்ற மந்தமான ஒரு தலைவலியாகக் காணப்படும். சிலரில் பட்டியை இறுக்கியது போன்ற உணர்வு காணப்படும். சிலரில் கண்களுக்குப் பின்னால் அமுக்குவது போன்று காணப்படும்.சிலர் தலையுச்சியில் அமுக்குவது போன்று உணர்வர். இவ்வகைத் தலைவலி சிலரில் மாதக் கணக்காகக் கூடக் காணப்படுவதுண்டு. இவ்வகைத் தலைவலி அதிக மன அழுத்தம், வேலைப்பளு உள்ளவர்களிலேயே பொதுவாக ஏற்படுகின்றது. இவர்களுக்கு தளர்வுப் பயிற்சிகள் பரிந்துரைக்கப்படுகின்றன. சிலருக்கு வலி நிவாரணிகள் தேவைப்படலாம்.





இருபதுக்கும் நாற்பதுக்குமிடையிலான வயதுடைய ஆண்களில் ஏற்படவல்ல 3 வகைத் தலைவலியாக இது காணப்படு கின்றது. மிகத் தீவிரமான தாங்க முடியாத தலைவலியாகக் காணப்ப டும். ஒருபக்கத் தலைப் பகுதியி லேயே ஏற்படும். கண்ணின் பின் னாக உருவெடுக்கும். இவ்வகைத் தலைவலியுடன் கண்ணீர் சுரத் தல், மூக்கடைப்பு, கண் செந்நிற மாதல் தற்காலிகமாகக் கண்ணை இறுக்கி மூட முடியாதிருத்தல் போன்றனவும் காணப்படலாம்.

தலைவலி நீடிக்கும்நேரம் 30-90 நிமிடங்களாக இருப்பினும் ஒரே நாளில் பலதடவைகள் ஏற்படலாம். நித்திரையில் கூட ஏற்படலாம். இவ்வகைத் தலைவலி பொதுவாக ஆண்டொன்றில் குறிப்பிட்ட காலத்துக்கே ஏற்படும்.

இவ்வகைத் தலைவலி உடையோருக்கு முற்காப்பு மருந்துகள் வழங்க முடிவதில்லையாயினும் தலைவலி ஏற்படும் சந்தர்ப்பத்தில் மருந்துகள் மூலம் தலைவலியை நிறுத்த முடிகின்றது. இவ்வகைத் தலைவலி உடையோரில் வலி நிவாரணிகள் பயனற்றவை ஆகின்றன.

Dr.தேவரஞ்சனா புவனேந்திரன்

## கேள்வி-பதில்

**கேள்வி**-எனது வயது38.பெண். அடிக்கடி சளிபிடித்து இருமல் வருகிறது. பலதடவைகள் வைத்தியசாலையில் சோதனைகள் செய்யப்பட்டன. அவற்றில்எந்த விதமான பிழையும் இல்லை என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். இது முட்டு வருத்தம் என்றும் "பம்" பாவிக்கும் படியும் கூறு கிறார்கள். எனக்கு இழுப்பு இல்லை. முட்டு வருத்தத்தின் அறிகுறிகள் இல்லை. மாறாத இருமல் மாத் திரமே இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?

**பதில்** - உங்களுக்கு இருப்பது ஆஸ்துமா எனப்படுகின்ற முட்டு நிலைமையே. இது பலரில் இழுப்புத்தன்மை இல்லாமல் மாறாத நிலையாகவும் வெளிப்படலாம். மாறாத இருமல் நிலைக்கு காச நோய், நுரையீரல் சேதமடைந்த தன்மை, வேறு வகையான கிருமித் தொற்றுகை, நுரையீரல் கட்டி, தொண்டைப் பிரச்சினைகள் போன்றவையும்காரணமாக அமையலாம். ஆனால் உங்களை பரிசோதித்த வைத்தியர்கள் அவ்வாறான நிலைமைகள் உங்களுக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். எனவே முட்டுக்காக வைத்தியர்கள் உங்களுக்கு தந்திருக்கும் "பம்" ஐ சரியானமுறையில் ஒழுங்காக பாவித்து வந்தால் 2 வார காலங்களில் இருமல் நின்றுவிடும்.அதைப் பாவித்தும் இருமல் குறையாத விடத்து சில விசேட பரிசோதனைகள் செய்ய வேண்டி ஏற்படலாம்.

**கேள்வி**-எனது வயது 48.ஆண். உயரம் 157cm. நிறை 78Kg. தோள் மூட்டு, கை கால் உளைவு இருந்தது. கொலஸ்ரோலை சோதித்துப் பார்த்தபோது அது அதிகரித்துக் காணப்பட்டது. அதற்காக மருந்து எடுத்து அது கட்டுப்பாட்டிற்கு வந்த பின்பும் உடம்பு உளைவு குறையவில்லை. இதற்கு காரணம் என்ன?

**பதில்** -தோள் மூட்டு அல்லது உடம்பு உளைவு அதிகரித்த கொலஸ்ரோலின் அறிகுறி அல்ல. உங்களின் அறிகுறிகளுக்கும் அதிகரித்த கொலஸ்ரோலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. உங்கள் உடல் நிறையை 57Kg இற்கு உட்பட்டதாக குறைத்துக் கொள்வது நல்லது . உங்களிடம் இருக்கும் 21Kg மேலதிக நிறை உங்கள் உடம்பு நோவுக்கு காரணமாக இருக்கலாம். இதற்கு வேறு ஏதாவது காரணங்கள் இருக்கலாமா என்பது சம்பந்தமாக உங்கள் வைத்தியர் உங்களுக்கு ஆலோசனை வழங்குவார்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்தியநிபுணர்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**